www.tamilarangam.net

சரிநிகர்
SARINIHAR

# சரிநிகர்


சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 128 ஒகஸ்ட் 14 - ஒகஸ்ட் 27, 1997 விலை : 10/-



## கல்விச் சீர்திருத்தம்:
## கேள்வி கேட்காதே!

## வடக்கு முஸ்லீம்கள்:
## காவு கொள்ளப்பட்ட வாழ்வு!



## " மோட்டார் குண்டுகளுடன் ஆயுதக் கப்பல் புலிகள் வசம்! "

இக்பால் அத்தாஸ்-இராணுவ ஆய்வாளர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சரிநிகர்
இரு வாரங்களுக்கு ஒரு முறை

"சரிநிகர் சமானமாக
வாழ்வமிந்த நாட்டிலே"
-பாரதி

**ஆசிரியர் குழு**
பாலகிருஷ்ணன்
சிவகுமார்
சரவணன்
எம்.கே.எம்.ஷகீப்
அரவிந்தன்
சி. செ.ராஜா
சிவகுருநாதன்
சேரன்

**வடிவமைப்பு**
ஏ.எம்.றஷ்மி

**வெளியிடுபவர்**
ச. பாலகிருஷ்ணன்
18/2, அலோ சாலை,
கொழும்பு - 03.

**அச்சுப்பதிவு**
நவமக அச்சகம்
334, காலி வீதி,
இரத்மலானை.

**ஆண்டு சந்தா விபரம்**
இலங்கை ரூபா 300/=

வெளிநாடு US $ 50
(தபாற்செலவு உட்பட)
காசுக்கட்டளை/ காசோலை
யாவும்
MIRJE என்ற பெயருக்கு
எழுதப்படல் வேண்டும்.

எல்லாத்தொடர்புகளுக்கும்
**ஆசிரியர்
சரிநிகர்
4, ஜயரத்ன வழி,
திம்பிரிகஸ்யாய,
கொழும்பு - 05.**

தொலைபேசி: 593615, 584380
தொலை மடல் : 594229

முன்னைய பிரதிகள்
வேண்டுவோர் எழுதுக.
கைவசம் உள்ள பிரதிகள்
அனுப்பி வைக்கப்படும்.

பிரசுரத்துக்கென
அனுப்பப்படும் படைப்புகள்
திருப்பி அனுப்பப்பட
மாட்டாது.

படைப்புக்களை தாளின் ஒரு
பக்கத்தில் தட்டச்சுச் செய்தோ
அல்லது தெளிவான
கையெழுத்தில் பிரதி செய்தோ
அனுப்பி வைக்கவும்.

# திருமலை: தலையாட்டிகளின் காலம்!

பாராளுமன்ற உறுப்பினர்களான தங்கத்துரை, மஹரூப் ஆகியோரின் படுகொலைகளையடுத்து படையினர் உஷாரடைந்துள்ளனர். சுற்றிவளைப்புகள், கைதுகள் என்று பரவலாகப்படையினரின் நடவடிக்கைகள் இறுக்கமடைந்துள்ளன.

திருகோணமலை நகரின் பெரும் பகுதிகள் திடீர்திடீரென சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்படுகிறது. சுற்றிவளைப்புகளுக்கு நேரம் காலம் என்றில்லை; அதிகாலையிலோ நடுப்பகலிலோ மாலையிலோ இடம்பெறக்கூடும்.

வீட்டில் ஒருவரை மாத்திரம் நிற்க அனுதிக்கும் படையினர் ஏனையோர் அனைவரையும் பால் வயது வேறுபாடுகளின்றி அருகிலிருக்கும் பொது இடமொன்றுக்கு வரும்படி அறிவுறுத்துகிறார்கள். இவ்வாறு பொது மக்கள் பொது இடத்திற் கூடிய பின் வீடுவீடாகச் சோதனையிடப்படுகிறது. வீடுகளிற் சோதனை முடிவடைந்த பின்னர் கூடியிருக்கும் மக்களின் அடையாள அட்டைகள் தோற்றம் என்பன கவனமாகப் பரிசீலிக்கப்படுவதுடன், தலையாட்டிகள் முன்னால் விடப்பட்டு, தலையாட்டிகள் அனுமதித்தால் மட்டுமே வீடு செல்ல அனுதிக்கப்படுகிறார்கள்.

மாவட்ட அடையாள அட்டைகள் இல்லாமை, பிறபகுதிகளிலிருந்து வந்து பதிவு இல்லாமை, அடையாள அட்டைக்கும் நபருக்கும் இணக்கப்பாடுக் குறைவு போன்றவை விசாரணைக்குள்ளாக்கப்பட காரணங்களாகி விடுகின்றன. எல்லாம் சரியாக இருந்தும் தலையாட்டி தலையை அசைத்து விட்டால் அவர்களும் விசாரணைக்குள்ளாக்கப்படுகின்றனர்.

பஸ்ஸிசேலற்றிப் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பல மணி நேரத்தின் பின்னரோ அல்லது இரண்டொரு நாட்களின் பின்னரோ தான் விடுதலை கிடைப்பதால் பொது மக்கள் அசௌகரியத்துக்குக்குள்ளாக்கப் படுகிறார்கள்.

சில தகவல்களின் அடிப்படையில் கைது செய்யப்படுவர்களின் இரண்டொருவரைத் தவிர ஏனையோர் தொடர்ந்தும் காவலில் இருக்கிறார்கள். வலுவான தடங்கள் உள்ளவர்கள் மட்டுமே தற்போது காவலில் இருப்பதாக படைத்தரப்பு தெரிவிக்கிறது.

வீதித்தடைகளிலும் சோதனைகளிலும் மிக உன்னிப்பாகவே நடைபெறுகிறது. இளவயதினர் விசேட கவனிப்புக்குள்ளாக்கப்படுகிறார்கள்.

முன்னர் போலன்றி திணைக்கள வாகனங்களும் நன்கு பரிசீலிக்கப்படுகின்றன. வாகனத்தில் வருபவர்கள் குறிப்பிட்ட திணைக்கள ஊழியர்களா என்பதிலும் கவனம் செலுத்தப்படுகிறது.

மூதூர் நெற்களஞ்சியச் சோதனைச் சாவடி மிகவும் இறுக்கமானது எனப் பொது மக்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். இதைக் கடந்துதான் கட்டைபறிச்சான் கடற்கரைச்சேனை, சம்பூர், .... போன்ற கிராமங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. மூதூர் சந்தையில் வாங்கி வரும் பொருட்களைக் கீழே கொட்டிக் காட்ட வேண்டியிருப்பதாக பொது மக்கள் கூறுகிறார்கள்.

ஆண், பெண், வயது, உத்தியோக வேறுபாடுகளின்றி சகலரும் இங்கே கவனமாகச் சோதனையிடப்படுகிறார்கள். பற்றரி போன்ற பொருட்கள் தடை செய்யப்பட்டுள்ளன. ஆணி, சீமெந்து என்பவை பெர்மிட் எடுத்தே கொண்டு போக வேண்டியுள்ளது.

இந்த சாவடியைக் கடந்து விட்டால் அப்பால் புலிகளின் பிரதேசம் வந்து விடுகிறது. இந்தப் பணிகளில் புலிகளின் கட்டுப்பாடுகளே மேலோங்கி நிற்கின்றன. அதாவது மூதூர் நகர மையத்திலிருந்து சுமார் இரண்டரை கிலோ மீற்றருக்கப்பாலேயே இந்த நிலைமை.

திருகோணமலை நகரை அண்மித்த பகுதிகளிலும் விடுதலைப் புலிகள் தாராளமாக நடமாடுவதாக அறியப்படுகிறது. சில பகுதிகளில் இரவில் மட்டும் நடமாடும் விடுதலைப் புலியினர் சில பகுதிகளில் பகலிலும் நடமாடத் தொடங்கி விட்டதாகத் தகவல்கள் கூறுகின்றன. இத்தனைக்கும் இந்தப் பகுதிகளில் பாதுகாப்புக் காவலரண்களும் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவற்றை வைத்துப்பார்க்கும் போது திருகோணமலை நகருக்குள் விடுதலைப் புலிகளின் ஊருடுவல் இல்லையென்று அறுதியிட்டுச் சொல்ல முடியாது. தங்கி நிற்க முடியா விட்டாலும் வந்து போவதற்கு வாய்ப்புகள் நிறையவே இருக்கின்றன.

அண்மைய இரண்டு கொலைச் சம்பவங்களாலும் திருகோணமலை மாவட்டம் விடுதலைப் புலிகளின் 'ஆடுகளமாக' மாறவுள்ளதோ என்ற ஐயப்பாடே தலை தூக்கியுள்ளது.

புலிகளும் படையினரும் மோதிக் கொண்டால் ஓடித் தப்புவதற்குக் கூட வகையற்று திணறப் போகிறவர்கள் சாதாரண பொது மக்களே.

*விவேகி*

## வந்தாரை வாழவைத்து...

தமிழகத்தில் இருந்து படகு மூலம் மன்னாருக்கு வரும்போது கடற்படையினரால் பிடிக்கப்பட்ட ஐந்து பேர் அடிகாயங்களுடன் யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஜுலை மாதம் 17ம்திகதி இராமேஸ்வரத்தில் இருந்து படகில் புறப்பட்டு வரும்போது தலைமன்னார் அருகில் வைத்து 19ம் திகதி காலை கடற்படையினர் பிடித்து தீவுப்பகுதி கடற்படையினரிடம் ஒப்படைத்தனர்.


தீவுப்பகுதி கடற்படையினர் ஊர்காவற்துறை பொலிசாரிடம் இவர்களை கையளித்தனர்.

ஊர்காவற்துறை பொலிசார் அம்புலன்ஸ் மூலம் 19ம்திகதி காலை இவர்களை யாழ். பெரியாஸ் பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

கனகராயன்குளத்தைச் சேர்ந்த அரியநாயகம் ஸ்ரீகாந்தன் (20), மல்லாவியைச் சேர்ந்த சின்னத்துரை கிருபாகரன் (22), தலைமன்னாரைச் சேர்ந்த தங்கராசா சசிகுமார் (17), மன்னாரைச் சேர்ந்த சிவனேஸ்வரராஜா ராஜ்குமார் (17), பேசாலையைச் சேர்ந்த சுந்தரலிங்கம் ஜெகதீஸ்வரன் (20) ஆகிய ஐவரும் கடற்படையினரால் தாக்கப்பட்டு காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

*ரூபன்*

## யோ.பெனடிக்ற் பாலன்
### -ஒரு அஞ்சலி



1960 களிலிருந்து இன்று வரை ஒடுக்கப்படுகின்ற, துயரப்படுகின்ற மக்களின் வாழ்வின் நிகழ்வுகளை தன்னகத்தே உள்வாங்கி அந்த நிகழ்வுகளினூடே தன்னை இணைத்துக் கொண்ட எழுத்தாளர் பெனடிற்க் பாலன் இன்று நம்மிடையே இல்லை.

நாவல், சிறுகதை, கவிதை, விமர்சனம், கட்டுரை என பல்வேறுபட்ட வடிவங்களில் இலக்கியம் படைத்த யோ. பெனடிற்க்பாலன் 30.07.1997 அன்று தனது 58 வயதில் கொழும்பில் காலமானார்.

யாழ்ப்பாணம் சுண்டுக்குழியைப் பிறப்பிட மாகக் கொண்ட பெனடிற்க்பாலன் ஆசிரியராக வும், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகவும், இறுதியில் ஹொரணை, மத்துகம பிரதேச கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றினார்.

மலையகப் பகுதியில் 15 வருடங்களுக்கு மேலாகப் பணியாற்றியவர். மலையக மக்களின் கல்விமேம்பாட்டில் அதிகம் ஆர்வம் கொண்டிருந்தார்.

இறுதியாக இவர் எழுதி மரணமான இரண்டொரு நாட்களின் பின்னர் வெளிவந்த நாசமாய்ப்போக... எனும் சிறுகதை கூட, இவர் மலையக மக்களின் மீதும் தோட்டப்புற பாடசாலை மாணவர்களின் கல்வி மேம்பாட்டின்மீதும் இவர் கொண்டிருந்த பற்றுறுதியை வெளிப்படுத்துவதாக இருந்தது.

தலைவிதியை பறிகொடுத்தவர்கள்..., விபசாரம் செய்யாதிருப்பாயாக... என்ற இரண்டு சிறுகதைத் தொகுதிகளையும் சொந்தக்காரன் என்ற நாவலையும், அதையும் விட பல சிறுகதைகளையும் கவிதைகளையும், விமர்சனங்களையும் எழுதி இலக்கியத்தில் தடம் பதித்தவர்.

அண்மையில் வெளிவந்த கல்வி உளவியல் எனும் இவரின் நூல் கல்வி உளவியலின் அறிவியல் துறைசார்ந்த விடயங்களையும், கையாளப்படும் முறைமைகளையும் அணுகுமுறைகளையும் தெளிவாக விளக்கும் ஓர் நூலாகும்.

தனது இளமைக்காலம் முதலே இடதுசாரி சிந்தனைகளிலும், முற்போக்கு இலக்கியத்தி லும் தீவிர ஆர்வம் காட்டி மக்களை நேசிக்கின்ற அவர்களின் துயரங்களை வெளிக் கொணரும் நோக்கில் இலக்கியம் படைத்த யோ. பெனடிற்க் பாலன் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## அரசுக்கும் இல்லை! அரசு சார்பற்றவர்களுக்கும் இல்லை!

பொலன்னறுவ மாவட்டத்தின் ஆரம்பக் கல்வி வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு - ஆறாம் ஆண்டிற்குட்பட்ட 100 பாடசாலைகளின் அபிவிருத்தியில் சீடா (SIDA) என்ற அரச சார்பற்ற நிறுவனம் இறங்கியுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் 72 மட்டுமே - அதில் ஒரு முஸ்லிம் தமிழ் பாடசாலை கூட தெரிவுசெய்யப்படவில்லை.

சீடாவுக்கும் தமிழ், முஸ்லிம் பாடசாலைகளில் அக்கறை இல்லை. அதைக் கேட்க பொலன்னறுவ மாவட்ட தமிழ் பாடசாலைகளுக்கான மேலதிகக் கல்விப் பணிப்பாளருக்கும் நாதியில்லை.

தமிழ், முஸ்லிம் மக்களது அபிவிருத்தியில் அரசுக்குத் தான் அக்கறை இல்லை. சீடா போன்ற அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமா?

## மிரண்டவன் கண்ணுக்கு..

அச்சுவேலி - ஆவரங்கால் பகுதி இராணுவ முகாமில் ஜுலை 4 அன்று அதிகாலை ஒரு மணியளவில் திடீர் வெடிச்சத்தங்கள் கேட்டன. புலிகள் வந்து விட்டனர் எனப் படையினர் உஷாரடைந்தனர். ஆனால் அங்கு பணிபுரியும் இராணுவ சார்ஜன்ட் தர்மபால கடமை முடிந்து வெளியே போய் முகாமின் உள்ளே வந்தபோது சுடப்பட்டு மரணமானார். இவரது மரண விசாரணை யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் நடைபெற்ற போது சாட்சியம் அளித்த இவரைச் சுட்ட இரு படையினர் கூறியதாவது, எமக்கு முன்பாக ஒரு உருவம் வந்தது. நாம் நிற்கும்படி சொன்னோம். ஆனால் அந்த உருவம் நிற்காமல் ஓடியது. உடனே சுட்டோம் அந்த சார்ஜன்ட் அந்த இடத்திலேயே மரணமானார்.

## கறுப்பு ஜுலை!


மிருசுவில் பகுதியில் ஒரு இராணுவ அதிகாரியை மதுவைக் குடிக்கக் கொடுத்து கொலை செய்தார்களாம் ஆறு சக இராணுவத்தினர். ஜுலை 13 அன்று இடம் பெற்ற இச்சம்பவத்தையடுத்து லெப்ரினன்ற் உஜித இந்திரஜித் சகபந்து, லெப்ரினன்ற் றோகான் நிமலசேன சில்வா, 2வது லெப்ரினன்ற் எச்.கே.எம்.டொமி பண்டார, 2வது லெப்றினன்ற் கே. செஹான் பெரேரா, டபிள்யூ. ஏ.துஷா லக்மினி குணரட்ன, ஜே.சி.திஸநாயக்கா ஆகிய ஆறு பேரும் சாவகச்சேரி பொலிசாரால் கைது செய்யப்பட்டு யாழ் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

www.tamilarangam.net









# கல்விச் சீர்திருத்தம்:

# கேட்காதே கேள்வி!

உண்மையில் அங்கு நடந்தது ஒரு யுத்தம் தான். வித்தியாசம் என்னவென்றால் ஒரு தரப்பினர் ஆயுத பாணிகள். மறு தரப்பினர் நிராயுதபாணிகள். யுத்தத்துக்குக்காரணம் கல்விச் சீர்திருத்தம். யூலை 29ம் திகதியன்று அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் ஆயிரக் கணக்கானோர் கொழும்பு கோட்டை புகையிரதநிலையத்தின் முன் அணிதிரண்டு புதிய கல்வி சீர்திருத்தத்தின் மீது தமது எதிர்ப்பைக் காட்டினர். ஆர்ப்பாட்டத்தை அடக்கும் பொலிஸ் அதிகாரிகள் ஆயுதங்களுடன் அங்கு வந்து குவிந்தது அதனை ஆயுத ரீதியில் முறியடிப்பதற்கே. ஆனாலும் அங்கு குழுமியிருந்த மாணவ மாணவிகள் எதனையும் பொருட்படுத்தாது "கல்விச் சீர்திருத்தத்தை வெளிப்படுத்து", "ஏழை மாணவர்களின் வயிற்றில் அடிக்காதே" என்பது போன்ற கோஷங்களை எழுப்பிக் கொண்டேயிருந்தனர்.

அந்தக் கோஷம் நியாயமானதாக இருந்தது. இவ்வளவையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சனத்துக்கோ, ஏன் இதனை அடக்குவதற்கு வந்த பொலிஸாருக்கோ கூட அந்தச் "சீர்திருத்தத்தில்" என்ன உள்ளது என்பது நிச்சயமாகத் தெரிந்திருக்காது. அது பற்றி அறிய வேண்டிய தேவை கூட அவர்களுக்கு இருக்கவில்லை. ஆனால் அந்த ஆர்ப்பாட்டமானது அதனை அடக்க வந்த பொலிஸாரினது பிள்ளைகளின் எதிர்காலத்துக்காகவும் தான் என்பதை அவர்கள் அறியாதிருந்தனர். நாளை இந்த கல்வியைச் சுமக்கவிருப்போர் எதிர்கால சந்ததியினரே. அந்தக் கல்வி என்ன என்பதை மாணவர்கள், ஆசிரியர்கள் , பெற்றோர் என்போர் அறியும் உரிமை கூட மறுக்கப் பட்டிருந்தது.

சிறிது நேரத்தில் அந்த மாணர்களின் மீது சுற்றிவளைத்துத் தாக்கினர் பொலிஸார். கண்ணீர்ப் புகைக்குண்டு எறிந்தனர். விரட்டி விரட்டி நொருக்கித் தள்ளினர். மயக்கம் போட்டு விழும்வரை அடித்தனர். இரத்தம் பீறிட அடித்தனர். பல மாணவர்கள் கடுமையான காயங்களுக்கு உள்ளானார்கள். பலர் ஆஸ்பத்திரிக்கு உடனடியாக எடுத்துச் செல்லப்பட்டனர். சில மாணவர்கள் சத்திர சிகிச்சைப் பிரிவுக்கும், அவசரப் பிரிவுக்கும் அனுமதிக்கப்பட்டனர்.

இப்படியான அடக்குமுறை ஒன்றும் புதிதான ஒன்றல்ல. ஆச்சரியமானதுமல்ல. ஒடுக்கும் சக்திகளது பண்புகளையும் அதன் வடிவங்களையும் கேள்விக்குள்ளாக்குகின்ற, விமர்சிக்கின்ற, மாற்றுக்கருத்துக்களை முன்வைக்கின்ற அல்லது எதிர்ப்பு தெரிவிக்கின்ற சந்தர்ப்பங்களிலெல்லாம் இத்தகைய அடக்குமுறையை எதிர் பார்க்கலாம்.

இந்த ஒடுக்கும் சக்திகளானது தமது கட்டமைப்புக்கு தோதான சகலவற்றையும் உருவாக்கும். அதற்காக எதனைச்செய்யவும் துணியும். கல்வியையும் கூட அது விட்டு வைக்காது. "இருக்கிற சமூக அமைப்புக்குத் தக்கவராக மனிதரை வசப்படுத்தும் கல்வியையே நடை முறைப்படுத்தும். எந்த அளவுக்கு மாணவர்கள் சிரமப்பட்டுப் போதிக்கப்பட்டவற்றை நிரப்பிக் கொள்கின்றார்களோ அந்த அளவுக்கு விமர்சன உணர்வு நிலையைக் குன்றச் செய்வர். இதற்கூடாக தமக்குள் நிரப்பப்பட்ட புனைவுகளால் போர்த்தப்பட்ட, சிதைந்த யதார்த்தங்களை ஏற்றுக்கொண்டு இவ்வுலகிற்கு ஏற்ற வகையில் தம்மைத் தகவமைத்துக் கொள்கின்றனர் மாணவர்கள்.

மொத்தத்தில் சனநாயகமற்ற பாடத் திட்ட உருவாக்கம், சூழலுக்கு அந்நியமான பாடங்கள், அரச ஒடுக்குமுறையின் வடிவமான கல்வி நிறுவனங்கள், எள்ளளவும் சனநாயகமற்ற ஆசிரிய-மாணவ உறவு, மாணவரின் சிந்தனைக்கு இடம் கொடாத சொற்பொழிவுக் கல்வி முறை என ஒழுங்குபடுத்தப்பட்டு அதிகாரத்துக்கு கட்டுப்படும் கல்விமுறை போதிக்கப் படுகிறது... இந்த வரம்புச் சூழலை தகர்த்து விடுதலைக்கான மாற்றுக் கல்வியையே இன்று உருவாக்க வேண்டும்..." என லத்தீன் அமெரிக்க கல்வியியலாளர் பாவ்லோ பிரேயர் கூறுவார்.

இப்படியான அதிகாரத்தை கேள்விக்குட்படுத்த முடியாத ஒடுக்கும் கல்வி முறையொன்றையே தற்போதைய அரசும் அமுல்படுத்தத் தொடங்கியுள்ளது. இந்தக் கல்வி முறைக்கு அனுசரணைகளை ஏகாதிபத்திய கருவிகளில் ஒன்றான உலக வங்கி வழங்கி வருகிறது. உலக வங்கி இதற்காக ரூபாய் 440 கோடியை "உதவியாக" இலங்கை அரசுக்கு வழங்கியுள்ளது. கூடவே பல நிபந்தனைகளையும் விதிப்பது அதன் குணம். "புதிய திட்டத்துக்கென வெளிநாட்டிலிருந்து உதவிகள் பெருமளவு கிடைத்துள்ளன" என அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன கூட அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்த கல்விச் சீர்திருத்தம் எப்படி நடைமுறைக்கு வந்ததெனப் பார்ப்போம்.

## ஜயதிலக்க ஆணைக்குழு

1977இல் பதவியிலமர்ந்த ஐ.தே.க. அரசாங்கம் தனது திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு அனுசரணையாக அரச யந்திரத்தில் பெருமளவு மாற்றங்களைச் செய்தது. அரசியலமைப்பு உட்பட பல்வேறு துறைகளை அதற்குத் தோதாக ஆக்கியது. பாடசாலை மாணவர்களின் புதிய பாடவிதானங்கள் (உதாரணத்திற்கு திறந்த சந்தைப் பொருளாதாரம் போலவே திறந்த பல்கலைக்கழகம்), சர்வதேசப் பாடசாலைகள், பாரிய தனியார் கல்வி நிறுவனங்கள் என்பவற்றைப் புகுத்தியது. மத்திய மற்றும் உயர் மத்திய வர்க்கத்தினருக்கு மட்டுமே பெரும்பாலும் பயன்படக் கூடிய இந்த மாற்றங்கள் கொழும்புக்கு வெளியிலுள்ள தொலைதூர பிரதேச மாணவர்களை அதிகளவு பாதித்தது. மாவட்ட கோட்டா முறை, இலவச சீருடை, உணவு, பாடப் புத்தகம் என கண்கட்டி வித்தைக்கென சில முறைமைகள் வெளியே காட்டப்பட்டது.

அது மட்டுமன்றி ஐ.தே.க. அரசாங்கத்தின் பிரச்சாரமே பாடசாலை பாடப்புத்தகங்களிலும் இடம் பெற்றன. பொருளியல், வர்த்தகம் போன்ற பாடத் துறைகளில் திறந்த பொருளாதாரக் கொள்கையை நியாயப்படுத்துகின்ற பாடத்திட்டங்களும், அரசியல், வரலாறு, சமூகக்கல்வி உள்ளிட்ட பாடத்துறைகளில், "ஐ.தே.கட்சி, சுதந்திரம் வாங்கித் தந்ததில் அதன் பங்கு, ஜே.ஆர், டீ.எஸ்.சேனநாயக்கா" என்போர் பற்றிய பாடங்கள் என்பன அடக்கப்பட்டிருந்தன. "இலங்கையில் முதற் பெண் பிரதமர் தான், உலகின் முதன் பெண் பிரதமரும்" என்பன போன்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் கூட மூடி மறைக்கப்பட்டிருந்தன.

## பிரேமதாசவின் நோக்கம்

இவ்வாறு கல்விக்கொள்கை பற்றிய கடுமையான விமர்சனங்கள் எழுந்து வந்த வேளை அதன் பின் பதவியிலமர்ந்த பிரேமதாசவாலேயே தற்போது சலசலப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ள லக்ஷ்மன் ஜயதிலக்கவை தலைமையாகக்கொண்ட தேசிய கல்வி ஆணைக்குழு நிறுவப்பட்டது. 1991 யூலையில் இந்த ஆணைக்குழு நிறுவப்பட்டிருந்தது.

இந்த ஆணைக்குழுவை நிறுவிப் புதிய கல்விக்கொள்கையை உருவாக்குவதற்கு அன்று ஆட்சியில் இருந்த பிரேமதாசவுக்கு முக்கிய இரண்டு நோக்கங்கள் இருந்தன.

1. பிரேமதாச பதவியிலமர்ந்ததும் ஜே.வி.பி. கிளர்ச்சியை அடக்குவதன் பேரில் ஏறத்தாழ ஒரு லட்சத்துக்குக் கிட்டிய இளைஞர்களின் படுகொலைக்கு காரணமானார். உலக அளவில் பேசப்பட்ட இந்த அடக்குமுறை, இலங்கையின் வரலாற்றில் மறக்க முடியாத ஒரு கறையை ஏற்படுத்தியது. *இத்தனை கொடுமைகளையும் மூடி மறைக்கவும், தான் அவ்வாறான கொடுமைக்காரன் அல்ல என்பதையும் காட்ட எடுக்கப்பட்ட பிரயத்தனத்தின் விளைவாக* 1990 ஜனவரியில் "இளைஞர்களின் விரக்திக்கான காரணங்களை ஆராய்வதற்கான ஜனாதிபதி ஆணைக்குழு" நிறுவப் பட்டது. இந்த ஆணைக்குழுவில் லக்ஷ்மன் ஜயத்திலக்க, ஜீ.எல்.பீரிஸ், ராதிகா குமாரசுவாமி உட்பட 8 பேர் அங்கம் வகித்தனர். இந்த ஆணைக்குழு மூன்று மாத விசாரணையின் பின் 1990 மார்ச்சில் வெளியிட்ட சிபாரிசுகளில் ஒன்று தான் தேசிய கல்வி ஆணைக்குழு. "இளைஞர்கள் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழு"வில் அங்கம் வகித்த அதே பேராசியர் லக்ஷ்மன் ஜயதிலக்க தலைமையிலேயே கல்வி ஆணைக் குழுவும் நிறுவப்பட்டது.

2. இரண்டாவது காரணம் ஜே.ஆர். இல்லாத அரசாங்கம் தமக்கு எந்த வகையில் சாதகமாக இருக்கும் என்ற சந்தேகப் பார்வை உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பவற்றுக்கு இருந்தது. *தான் ஜே.ஆரை விட நல்ல ஏஜென்ட் என்பதை நிரூபிக்க வேண்டிய தேவை பிரேமதாசவுக்கு இருந்தது.* எனவே பல "அபிவிருத்தித் திட்டங்களை" உலக வங்கியின் ஆலோசனைப்படி செய்த பிரேமதாச ஏகப்பட்ட கடன்களையும், கூடவே அதன் நிபந்தனைகளையும் ஏற்றுக்கொண்டார். *உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பவற்றின் நிபந்தனைகளில் ஒன்று தான் கல்வி சம்பந்தமான கொள்கையைச் "சீர்திருத்துவது."*

எனவே இந்தப் பின்னணியைக் கவனத்திற் கொண்டு தான் தற்போதைய சீர்திருத் தத்தை அலச வேண்டும். அதன் தோற்றம்? தோற்றுவிப்பதற்குத் தூண்டிய சக்திகள்? அவற்றின் உடனடி, நீண்டகால நோக்கங்கள் என்ன? எந்தளவு தூரம் மாணவர்களின் சுதந்திரக் கல்விக்கு (விடுதலைக்கான கல்வியை) சாதகமாக, பாதகமாக அவை அமைகின்றன? அதனை மக்கள் முன் வைப்பதற்கு அரசு தயங்குவதன் நோக்கம் என்ன? இரகசியமாகவே அமுல் படுத்தப்பட்டதன் பின்னணி என்ன? மாற்றுக் கருத்துக்களை வன்முறையால் நசுக்கி மூச்சு விடாமல் பண்ண வேண்டியதன் நோக்கம் என்ன? என்பன போன்ற எல்லாவற்றையும் அலச வேண்டும்.

## புதிய அரசாங்கம் மட்டும் என்னவாம்!

இந்த லக்ஷ்மன் ஜயதிலக்க தலைமையிலான ஆணைக்குழு 1995 வரை தனது நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. அதன் (சாதாரண கல்வி பற்றிய) அறிக்கை 1995 டிசம்பர் 18ம் திகதி ஜனாதிபதி சந்திரிகாவிடம் கையளிக்கப்பட்டது. உலக வங்கி, சர்வதேச நாணயநிதியம் போன்ற நாசகார சக்திகளுக்கு தானும் ஒரு நல்ல அடிமை தான் என்பதைத் "திறந்த பொருளாதாரக்கொள்கைக்கு மனித முகம்" கொடுத்து நிரூபித்தவர் சந்திரிகா. எனவே அந்த அறிக்கையை ஏற்றுக் கொள்வதில் சிரமம் இருக்க முடியாது. 1996 செப்டம்பர் 20ம் திகதி உயர் கல்வி பற்றிய அறிக்கையும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுக் கொண்டிருந்த போதே எச்சரிக்கை விடுத்தவர்கள் தான் "அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர்". இது ஜே.வி.பி.யின் உத்தியோகபூர்வமற்ற மாணவர் அமைப்பு. எல்லாப் பல்கலைக் கழகத்திலும் பெருமளவு செல்வாக்கும் பலமும் பெற்று இயங்கி வருகிற மாணவர் அமைப்பு அது. (ஜே.வி.பி.யினரின் உத்தியோகபூர்வ மாணவர் ஒன்றியமாக சோஷலிச மாணவர் ஒன்றியத்தையே வெளிக்காட்டி வருவது தெரிந்ததே.)

இந்த அறிக்கை வெளியிட்ட பின்னும் அதன் பிரதியொன்றை எப்படியோ எடுத்துக் கொண்ட மாணவர் ஒன்றியத்தினர் அதன் உள்ளடக்கத்தைத் தோலுரித்து அம்பலப்படுத்தினர். இதில் கவலைக்கிடமானது என்னவென்றால் இதனை கேள்விக்குட்படுத்த ஜே.வி.பி.யைத் தவிர வேறு எந்தக் கட்சியோ, சமூக அமைப்புகளோ, வேறும் சக்திகளோ இருக்கவில்லை. எனவே ஜே.வி.பி. பாடசாலை மாணவர்களின் எதிர்காலத்துடன் விளையாடுகிறது என்ற அரசின் பிரச்சாரத்தை அப்படியே இவர்களும் ஏற்றுக் கொண்டனர். ராவய போன்ற சில மாற்றுப் பத்திரிகைகளும் கூட அரசின் இந்தப் போக்கு குறித்தோ அதன் அடக்குமுறை குறித்தோ கேள்விக்குட்படுத்தாமல் ஜே.வி.பி.யின் நடவடிக்கையையே கண்டித்தது.

ஜே.வி.பி. செய்ததெல்லாம், பல பாடசாலைகளில் மாணவர்கள் மத்தியில் இதனை பிரச்சாரப்படுத்தி ஆர்ப்பாட்டங்களை நடாத்தத் துணைசெய்தது மட்டுமே. இவ்வாறு பிரச்சார நடிவடிக்கையில் ஈடுபட்ட சில மாணவர்கள், பிக்குகள் கைது செய்யப்பட்டனர். எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கீழ் வகுப்பு மாணவர்கள் பலர் உள்ளடக்கம் பற்றிப் பூரணமாக அறியாதிருந்தனர் என்பது உண்மை தான் ஆனால் அதனை பூரணமாக அறியத்தர அரசு மேற்கொண்ட முயற்சிதான் என்ன?

## அரச பிரச்சாரங்கள்

1987-1989 காலப்பகுதியில் ஜே.வி.பி. மேற்கொண்டிருந்த ஆயுதக் கிளர்ச்சியின் போது பல பாடசாலைகளுக்கு மிரட்டல் கடிதங்கள் (மூடும் உத்தரவு போன்ற) அனுப்பப்பட்டிருந்தன. அது போன்ற சம்பவங்கள் இம்முறை அரசின் பிரச்சாரத்துக்கும் சாதகமாயின.

அது போல சில பாடசாலைகளில் "நடைமுறைக்கு வரப்போகும் உளச்சார்பு பரீட்சை தமிழர்களுக்குச் சாதகமாகப் போகின்றன. ஆகவே தான் தாங்கள்

—▷ 8

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பாதாள உலகத்துக்கும் படையினருக்கும் என்ன தொடர்பு?

ஜூலை 16ம் திகதி காலை 10.30மணியளவில் வெல்லம்பிட்டி அத்திடிய பிரதேசத்தில் இலக்கத் தகடு இல்லாத வாகனமொன்றும், அதனுள் எரிந்து கருகிய நிலையில் நான்கு சடலங்களும் கல்கிஸ்ஸை பொலிசாரினால் கைப்பற்றப் பட்டது. அடையாளம் காணப்படாத வகையில் முற்றாக எரிந்திருந்த சடலங்களை அடையாளம் காண அங்கும், இங்கும் சிதறிக் கிடந்த அடையாள அட்டைகளும் தங்க மோதிரம் ஒன்றும் உதவியதன் பிரகாரம், அச்சடலங்கள் அடையாளம் காணப்பட்டன.

பாதாள உலகத்தின் தலைவரான களு அஜித் என அழைக்கப்படும் அஜித் தம்மிக (28), விதானகே குணரத்ன (39), இசரத்ன (இவன் ஒரு சில வருடங்களுக்கு முன் இராணுவத்தில் இருந்த தப்பிச் சென்றவன்) எம்.டபிள்யூ. ஏ. திலுஷ சஞ்சீவ (19) என சடலங்கள் அடையாளம் காணப்பட்டன. மரணச் சடங்கில் கலந்து கொண்டு வீடு திரும்பும் போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்தது.

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானதாலும், கடும் எரிகாயங்களுக்கு, உள்ளானதாலும் ஏற்பட்ட மரணம் என மஜிஸ்திரேட்டினால் தீர்ப்பளிக்கப்பட்டது.

இக்கொலைகள் யாரால், எக்காரணத்துக்காக செய்யப்பட்டது என்பது தொடர்பாக பல ஊகங்கள் பல தரப்பினாலும் தெரிவிக்கப்படுகின்றன.

இக்கொலைகளுக்கு 4 முதல் 5 லட்சம் வரை கொந்தராத்து வழங்கப்பட்டதாகவும், களு அஜித்தின் பிரதான எதிரி தம்மிக எதிரிசிங்க - இவன் பாதாள உலகத்தின் பிரபல தலைவராகவிருந்த சிந்தக்க அமரசிங்கவின் தம்பி களு அஜித்தினால் கடந்த வருடம் ஜனவரி மாதம் சுட்டுக்கொல்லப்பட்டவர். இக்கொலைகளுக்கு பொறுப்பாகவிருந்திருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் நடைபெறுவதற்கு ஒரு சில தினங்களுக்கு முன் கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் வர்த்தகக் கட்டிடம் ஒன்று தொடர்பாக இரு சாராருக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சினையில் கட்டிட சொந்தக்காரருக்கே கட்டிடத்தை பாரமளிக்கும் பொறுப்பை களு அஜித் ஏற்றுக்கொண்டு அதை நிறைவேற்றியதாகவும், இச்சம்பவத்தின் எதிராளிகளாக பொலிஸ் உயரதிகாரிகள் ஒரு சிலரும், சில பொலிஸ் அதிகாரிகளும், பம்பலப்பிட்டி பிரதேசத்தின் பாதாள உலகத் தலைவன் சரணபால என்பவனும் இருந்ததாகவும் குறிப்பிடப்படுகின்றது. இச்சம்பவத்தின்பின் சரணபாலவும், அப்பொலிஸ் அதிகாரிகளும் களு அஜித்துடன் பகைமை கொண்டிருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இசரத்ன எனக் குறிப்பிடப்படும் (கொலையுண்டவர்களில் ஒருவர்) நபரின் வீட்டிற்கு சம்பவத்திற்கு முதல் நாளிரவு சென்ற இராணுவத்தினர், இசரத்னவின் மனைவியிடம் ''களு அஜித்தை கவனமாக இருக்கச் சொல் அவன் எங்களிடம் அகப்பட்டால் ஒரு நாயைப் போல் கைகால்களை கட்டிப் போட்டு எரித்தே கொன்று விடுவோம்'' எனக் கூறிச் சென்றுள்ளனர்.

வெல்லம்பிட்டி சிங்கபுரத்தை வசிப்பிடமாகக்கொண்ட களு அஜித் கூலிக்கு கொலை செய்தல், ஹெரோயின் போதைவஸ்து விற்பனை போன்றவற்றில் ஈடுபடுபவன். சமீபத்தில் நடைபெற்ற பல கொள்ளைச்சம்பவங்களுக்கும் காரணமாக இருந்துள்ளான். இரண்டு கொலைகள் தொடர்பாக கொழும்பு நீதிமன்றத்தில் அவனுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவனுக்கு ராஜினி ராசையா (28) என்ற மனைவியும், இரண்டு பிள்ளைகளும் உண்டு. அத்துடன் வெல்லம்பிட்டி, கொலன்னாவை, மகரகம போன்ற பல பிரதேசங்களிலும் அவனுக்கு எண்ணிலடங்கா மாஜி காதலிகள் உள்ளனர் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

விசாரணைகளின் போது சாட்சியமளிக்கையில் களு அஜித்தின் மனைவி ராஜினி ''அஜித்தை கொல்ல பாதாள உலகத்தினால் முடியாது இது இராணுவத்தினர் அல்லது பொலிசாரின் வேலை'' எனக் கூறினார்.

நால்வரினதும் கண்கள் கட்டப்பட்டு, கைககள் கம்பிகளால் கட்டப்பட்டதோடு கீழே இருத்தி வைக்கப்பட்டு துப்பாக்கியால் சுடப்பட்டு பின்னர் வாகனத்தில் ஏற்றப்பட்டு பெற்றோல் ஊற்றப்பட்டு, எரிக்கப்பட்ட இம்முறையானது பொலிசாரின் 'தண்டிக்கப்படும்' நடைமுறை என பொலிஸ் அதிகாரிகள் சந்தேகம் தெரிவித்துள்ளதாக ராவய பத்திரிகை தெரிவித்துள்ளது.


தற்போது கல்கிஸ்ஸை பொலிசாரினால் இரகசியப் பொலிசாருக்கு பொறுப்பாக்கப்பட்டிருக்கும் இவ்விசாரணை புதிய திருப்பங்களை ஏற்படுத்தும் என நம்பப்படுகின்றது. இதன்பிரகாரம் களு அஜித்தை சமீபகாலமாக தொடர்ந்து கொண்டிருந்த் சைக்கிள் இளைஞன், சம்பவம் நடைபெறுவதற்கு முன் மகரகம, பமுனுவ பிரேதசத்தில் களு அஜித்தும், இறந்தவர்களும் தங்கியிருந்ததாக கூறப்படும் மாஜிக் காதலியின் வீடு சம்பவம் இடம்பெற்ற தளத்தில் காணப்பட்ட பெண்ணொருத்தியின் புகைப்படம், இரண்டு துப்பாக்கிகள், குண்டுகள் நிரப்பப்பட்ட மெகசின் என்பன இரகசிய பொலிசாரின் விசாரணைக்கு உட்பட்டுள்ளது.

சாதாரணமாக பாதாள குழு கொலைகளை மேற்கொள்ளும் போது இவ்வாறு சடலங்களை எரித்து நாசமாக்க மாட்டார்களென்றும், கொல்லப்பட்டவரது சடலத்தை அவ்வாறே விட்டுச் செல்வது பாதாள உலகத்தினருடைய பெருமையை பறைசாற்றுவதாக அமையும் எனவும் கூறப்படுகின்றது.

-ரத்னா

# மலையக மக்களின் தீர்ப்பு அம்பாறையிலும் ஏற்படுமா?

-எம்.எம்.நிலாம்டீன்



என்றுமில்லாதவாறு அம்பாறை மாவட்ட கரையோரப் பகுதி பிரதேசங்களில் பல வகையான அபிவிருத்தி திட்டங்கள் அமைச்சர் அஷ்ரஃப்பின் நிதியுதவியினால் செய்யப்பட்டு வருகின்றன. பல இளைஞர்கள் இலங்கை துறைமுகங்களில் தொழில் வாய்ப்பு பெற்றுள்ளார்கள். இதுவொரு பெரும் சாதனை என்றுதான் சொல்ல வேண்டும். மற்றும் வன்செயல் நடவடிக்கைகளின் போது வீடுகள், சொத்துகள் இழந்தவர்கள் பலர் புனர்வாழ்வு நஷ்டஈடு பெற்றுள்ளார்கள். இப்படியாக தன்க்கு கிடைத்த சந்தர்ப்பத்தை அமைச்சர் அஷ்ரஃப் மக்களின் நன்மைகளுக்காகவும் அபிவிருத்தியின் பக்கமாகவும் பயன்படுத்தி வருகின்றார். ஆனால் அமைச்சர் அஷ்ரஃபின் புனர்வாழ்வு நஷ்டஈடுகள் தொழில் வாய்ப்புகள் ஒரு குறிப்பிட்ட ஒரு குழுவை மட்டும் சென்றடைவதால் இன்று அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களான பொத்துவில் அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, நிந்தவூர், சம்மாந்துறை, கல்முனை, மருதமுனை ஆகிய பகுதிகளில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி மீது கட்சியின் ஆத்ரவாளர்கள் பெருமளவு அதிருப்தி அடைந்துள்ளார்கள்.

புனர்வாழ்வு நஷ்டஈட்டுப் பணம் வன்மையான மு.கா. போராளிகளுக்கும், ஆதரவாளர்களுக்கும் கிடைக்கவில்லை. வீடுகள் திருத்துவதற்காக நெதர்லாந்து அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட மானியம் ஒரு குறிப்பிட்ட குழுவினருக்கும், வசதி படைத்தவர்களுக்கும்தான் வழங்கப்பட்டுள்ளது. மற்றும் ஏழை, எளிய வசதி இல்லாதவர்களுக்காக புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்பட்ட 4 ஆயிரம் ரூபா கூட ஒரு குறிப்பிட்ட குழுவினருக்கே வழங்கப்பட்டுள்ளதாக பல புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இவைகளையெல்லாம் சகிக்க முடியாத அம்பாறை மாவட்ட கரையோரப் பகுதி மு.கா. ஆதரவாளர்கள் மத்தியில், பெரும் அதிருப்தி நிலை உருவாகியுள்ளது. அதுமட்டுமல்லாமல் அம்பாறை மாவட்டத்திலிருந்து ஏனைய பகுதிகளில் இருந்தும் பெருமளவு மக்கள் தலைவர் அஷ்ரஃப்பை சந்திப்பதற்காக கொழும்பு வந்து பல மாதங்களாக சந்திக்க முடியாமல் ஏமாந்து ஊர் திரும்பியுள்ளார்கள். குறிப்பாக தலைவரைச் சந்திப்பதற்காக அம்பாறை மாவட்டத்திலிருந்து வந்தவர்களில் பெரும்பாலானோர் கையிலிருந்த பணத்தையெல்லாம் செலவு செய்தும் தலைவரைச் சந்திக்க முடியாமல், லொட்ஜுகளுக்கு பணம் கட்ட முடியாமல் தெரிந்தவர்களிடம் கடன்பட்டு ஊர் திரும்பியதும், மருதானையில் அலைந்த சம்பவங்களும் உண்டு. இவைகளையெல்லாம் பார்க்கும் போது தலைவரைச் சுற்றியுள்ள ஒரு வட்டம் தலைவரையும், பொது மக்களையும் அணுகவிடாமல் தடுத்து வருகின்றது. குறிப்பாக காங்கிரஸ் ஆதரவாளர்கள் தலைவரைச் சந்திக்கவோ, பார்க்கவோ முடியாதவாறு தலைவரைச் சுற்றியுள்ள கீழ்மட்டங்களும், எடுபிடிகளும் தடைபோட்டு வருகின்றது. இதனால் மக்கள் பெரும் கொதிப்படைந்துள்ளார்கள். தலைவர் ஒரு குறுகிய வட்டத்திற்கு மட்டும் சொந்தமானவரல்ல. இந்நாட்டு முஸ்லிம்களுக்கும், காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கும் சொந்தமானவர். தலைவருக்கு பாதுகாப்பில்லை என்று ஆதரவாளர்களை நெருங்க முடியாமல் தடுத்து வந்தால் எதிர்கால நிகழ்வுகள் மோசமானதாக இருக்கும்.

அண்டை நாடான தமிழ்நாட்டில் நடந்து முடிந்த தேர்தல் நமக்கெல்லாம் ஒரு நல்ல உதாரணமாக அமைய வேண்டும். முன்னாள் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவுக்கு பாதுகாப்பில்லை என்று கூறி கறுப்பு பூனைப்படைகள் சுற்றி இருந்ததால் தமிழக மக்கள் எவ்வாறு தீர்ப்பு அளித்தார்கள் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

நம் நாட்டிலும் அண்மையில் நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் மலையகத்தில் எதிர்பாராத ஒரு மக்கள் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இத்தீர்ப்பு பற்றி முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் நன்றாக சிந்திக்க வேண்டும். இன்று அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களிலுள்ள எல்லா ஊர்களிலும் காங்கிரஸ் கட்சி ஏ. பிரிவு, பி. பிரிவு என்று இரண்டு பிரிவுகள் செயற்பட்டு வருகின்றன. சமுர்த்தி ஊக்குவிப்பாளர், துறைமுக வேலை வாய்ப்பு நியமனம் மற்றும் புனர்வாழ்வு நஷ்டஈடு போன்றவற்றில் பெரும்பாலான காங்கிரஸ் ஆதரவாளர்களும் போராளிகளும் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள். கீழ்மட்ட அரசியல்வாதிகளினால் எங்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை, அதனால் தலைவரையும் சந்தித்தும் நிலைமைகளை சொல்ல முடியவில்லையென்று இன்று பலர் புலம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

''மக்களின் அதிருப்தியை ஆட்சியிலிருப்பவர்கள் அக்கறையோடு பார்க்கவில்லையெனில் அது தெருவிலும், தேனீர்க் கடைகளிலும் பேசப்பட்டு வாக்குப் பெட்டியில் போய் முடியும்'' என்று பிரித்தானியாவின் அரசியல் சாசன நிபுணர் ஜென்னிங்ஸ் தெரிவித்துள்ளார். இக்கூற்று மிகவும் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

அண்மையில் முஸ்லிம் காங்கிரஸ் அங்கத்தவர் வாரம் அம்பாறையில் நடாத்தப்பட்ட போது சிலர் ஆங்காங்கு தங்களின் அதிருப்தியை காட்டியுள்ளார்கள். இப்போது மு.கா. ஆதரவாளர்கள் மத்தியில் அதிருப்தி நிலை உள்ளது என்பது கட்சியின் மேலிடத்திற்கும் தெளிவாக புரிந்து விட்டது. எப்படியும் அடுத்த ஆண்டில் தேர்தல் ஒன்றை வடகிழக்கு மக்கள் எதிர் நோக்கியுள்ளார்கள் என்பது உண்மை. ஏனென்றால் அரசாங்கம் வடகிழக்கில் கைப்பற்றிய பல இடங்களிலும் சிவில் நிருவாகம் நடைபெற்று வருகின்றது என்பதை வெளி உலகிற்கு காட்ட வேண்டும் என்பதற்காக தேர்தல் ஒன்றை கட்டாயம் நடத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது என்றுதான் சொல்லவேண்டும். அந்த வகையில் வடகிழக்கு பகுதியில் எல்லாக் கட்சிகளும் ஒரு தேர்தலை எதிர் நோக்கி அதற்கான நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளன.

இந்நிலையில் தான் அக்கரைப்பற்றில் முதன் முதலாக முஸ்லிம் மாணவர் அமைப்பொன்று எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் சுயேட்சையாக போட்டியிடத் தீர்மானித்துள்ளது. மற்றும் அட்டாளைச்சேனை பகுதியிலும் இளைஞர் குழுவொன்று சுயேட்சையாக உதயமாகியுள்ளது. ஆனால் என்னதான் அதிருப்திக் குழுக்கள் உருவானாலும் ஐ.தே.க. சுதந்திரக் கட்சி ஆகிய பெரும்பான்மைக் கட்சிகளுக்கு அம்பாறை மாவட்ட தமிழ் - முஸ்லிம் மக்கள் வாக்களித்து கனவிலும் ஒரு தமிழ் - முஸ்லிம் எம்.பி. ஆசனத்தைப் பெற முடியாது என்பதை நன்றாக உணர வேண்டும். ஆனால் சுயேட்சையாக ஒருவரை நிறுத்தினால் ஒரு எம்.பி. ஆசனத்தை பெறக்கூடிய நிலையுள்ளது.

அம்பாறை மாவட்ட தமிழர்கள் தங்களின் எம்.பி. ஆசனத்தை மீண்டும் பெறுவதற்காக சகல தமிழ் கட்சிகளும் ஒன்று சேர்ந்து ஒரு கொடியின் கீழ் எதிர்வரும் தேர்தல்களில் போட்டியிடவுள்ளன.


அதனால் மீண்டும் அம்பாறை மாவட்டத்தில் ஒரு தமிழ் எம்.பி. உருவாகச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. ஆனால் அம்பாறை மாவட்டத்தில் மு.கா. தனது இரண்டு ஆசனத்தையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். தற்போது அம்பாறை மாவட்டத்தில் மக்களைக் கவரும்படியாக அமைச்சர் அஷ்ரஃப் நடமாடும் அமைச்சின் செயலகம் ஒன்றை நடாத்தியுள்ளார். அத்துடன் அம்பாறை மாவட்ட மக்களை சந்திப்பதற்காக மாதத்தில் 2 நாட்களை ஒதுக்க வேண்டும். அடிக்கடி அம்பாறை மாவட்ட மக்களை அமைச்சர் அஷ்ரஃப் சந்திக்கும் போது அதிருப்தி நிலைமையை ஒழிக்கலாம். அத்துடன் முக்கியமாக கடந்த காலங்களில் ஐ.தே.கட்சிக்கு அதிகமாக பாடுபட்ட குடும்பங்களுக்கு குறைந்தது ஒருவருக்காவது துறைமுகத்தில் தொழில்வாய்ப்பு வழங்கும்போது எதிர்வரும் தேர்தல்களில் அக்குடும்பம் ஐ.தே.கட்சிக்கு வெளிப்படையாக கொடுத்துவந்த ஆதரவு இல்லாமல் போகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் தொடர்ந்து ஐ.தே.க. ஆதரவாளர்களை புறக்கணிக்காமல் அவர்களையும் மு.காவில் இணைத்து செயல்பட வேண்டும். ஐ.தே.கட்சிக்கு நேரிடையாக பாடுபட்ட எத்தனையோ பேர் இன்று துறைமுகத்தில் தொழில் வாய்ப்பு பெற்றுள்ளார்கள். இவர்கள் எப்படி நுழைந்தார்கள்? ஆனால் ஐ.தே.கட்சி ஆட்சியில்

→20

www.tamilarangam.net





WARNING WARNING WARNING

NOTICE AND WARNING

We, the Tamil Tigers, inform you by the present that on 11 July 1997 we have hijacked a vessel carrying arms, sailing under Liberian flag. The name of the vessel "Stilius Victoria". On the deck of the vessel there were 12 containers containing 32,400 mortar bombs 81 mm. destined for Colombo Sri-Lanka, Ministry of [redacted] DEFENCE

We know that the manufacturer and the supplier of the mortar bombs is Zimbabwe Defense Industry from Harare, Zimbabwe. We also know that the deal was executed by Col. Duba. D.G. of Zimbabwe Defense Industry.


The cargo was confiscated by us and the vessel's crew was released by us unharmed.

We make know and warn that we will take action against all persons participating in the supply of military equipment used against the legitimate rights of the Tamil people and we will severely punish those concerned.

LTTE

WARNING WARNING WARNING

புலிகளால் அனுப்பியதாகச் சொல்லப்படும் தொலைமடல்




## 32,400 மோட்டார் குண்டுகளுடன் காணாமல் போன கப்பல்

# புலிகள் கடத்தினார்கள்?

**எச்சரிக்கை, எச்சரிக்கை, எச்சரிக்கை**

**எச்சரிக்கையும் அறிவித்தலும்**

**தமிழ்ப் புலிகளாகிய நாம் இத்தால் அறியத் தருவது யாதெனில், லைபீரியக் கொடியுடன் ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு வந்த கப்பல் ஒன்றை 1997 ஜூலை 11ம்திகதி அன்று நாம் கைப்பற்றிக் கொண்டுள்ளோம். இக்கப்பலின் பெயர் 'ஸ்டிலஸ் விக்ரோறியா'. பொதியேற்றும் தளத்தில் (Deck) பன்னிரு கொள்கலன்களில் 81மி.மீ அளவு கொண்ட 32,400 மோட்டார் குண்டுகள் ஏற்றப்பட்ட நிலையில் இக்கப்பல் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சிற்காக கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்தது.**

**-ஹராரேயிலுள்ள ஸிம்பாப்வே ஆயுதத் தொழிற்சாலையே இந்தக் குண்டுகளின் தயாரிப்பாளரும், வழங்குநரும் என்பதை நாம் அறிவோம். கூடவே இந்த ஆயுதக் கொள்வனவு ஸிம்பாப்வே ஆயுதத்தொழிற் சாலையின் டி.ஜி.ஆன கேர்ணல் டியூப் என்பவராலேயே நிறைவு செய்யப்பட்டது என்பதையும் நாம் அறிவோம்.**

**இதில் வந்த பொதிகளை நாம் கைப்பற்றியுள்ளதுடன், கப்பலில் கடமையாற்றியவர்களை எந்தவித பாதிப்புமின்றி விடுதலை செய்தும் உள்ளோம்.**

**தமிழ் மக்களின் சட்டபூர்வ உரிமைக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் இத்தகைய ஆயுதங்களை வழங்குவதில் பங்கு கொள்ளும் ஒவ்வொருவருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், சம்பந்தப்படும் அனைவரையும் நாம் கடுந்தண்டனைக்கு உள்ளாக்குவோம் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.**

**த.ஈ.வி.பு.**

**எச்சரிக்கை, எச்சரிக்கை, எச்சரிக்கை.**

பரபரப்பூட்டும் இந்த எச்சரிக்கை அறிவிப்பு கொழும்பிலுள்ள ஒரு மேல்நாட்டு தூதுவராலயத்திற்கு தொலைமடல் வழியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்ற செய்தியை, அவ்வறிவிப்பின் போட்டோப் பிரதியுடன் ஜூலை 20 சண்டே ரைம்ஸ் பத்திரிகை வெளியிட்டிருந்தது. அப்பத்திரிகையில் 'Situation Report' என்ற பத்தியை எழுதும் இக்பால் அத்தாஸ் என்பவரால் இச்செய்தி வெளியிடப்பட்டிருந்தது. இது அரசாங்கத்திற்கும், பாதுகாப்பு வட்டாரத்திற்கும் பலத்த தலையிடியைக் கொடுத்த ஒரு செய்தியாக இருந்த போதும், அரசாங்கமோ, பாதுகாப்பு வட்டாரங்களோ இச்செய்தியை மறுக்கவில்லை. உண்மையில் பத்திரிகையில் இக்பால் அத்தாஸ் இச்செய்தியை எழுதியபோது, இக்கப்பல் குறித்த காலத்தில் கொழும்பை வந்தடையவில்லை, அது காணாமல் போய்விட்டது என்ற தகவல் பாதுகாப்பு அமைச்சுக்குத் தெரிந்தே இருந்தது. ஆயினும் அமைச்சு இது பற்றி பகிரங்கமாக மூச்சுக்கூட விடவில்லை. ஆனால், அதே வேளை கடற்படைத் தளபதி சிசில் திசேரா அவர்கள் இவ்வாறு ஒரு ஆயுதக் கப்பல் காணாமல் போய்விட்டது என்றும் கடற்படையினரை இது தொடர்பாக கண்காணிக்குமாறு கோரும் அறிவிப்பொன்றையும் வெளியிட்டிருந்தார். அவர் இந்த அறிவிப்பை ஜூலை 18ம் திகதி வெளியிட்டிருந்தார் என்றும், அவ்வறிவிப்பில் இக்கப்பல் மடகஸ்காரில் ஜூலை 2ம்திகதி புறப்பட்டதாக குறிப்பிட்டிருந்தார் என்றும் எழுதுகிறார் இக்பால் அத்தாஸ். இக்பால் அத்தாசின் இவ்விடயம் தொடர்பான கட்டுரை ஜூலை 20ம்திகதி அன்று வெளிவந்த போது, உண்மையில் அவசர அவசரமாக அரசாங்கத்திற்கு தேவைப்பட்ட, அதிசக்திவாய்ந்த 32,400 குண்டுகள் புலிகளின் கைக்கு போய்விட்டதே என்ற அச்சமும், அதிர்ச்சியும் கலந்த ஒரு உணர்வே பலமட்டங்களிலும் வெளிப்பட்டது.

உண்மையில் ஜூலை 2ம்திகதி இக்கப்பல் மடகஸ்காரிலிருந்து புறப்பட்டதாயின் அது, மிக மோசமான காலநிலையிருப்பினும் கூட 10 நாட்களுக்குள் கொழும்பு வந்து சேர்ந்திருக்க வேண்டும். ஆனால் ஜூலை 18ம்திகதி வரை அக்கப்பல் பற்றி எந்தத் தகவல்களும் இல்லை என்பதால் தான் கடற்படைத் தளபதி கடற்படைக்கு மேற்சொன்ன ஒரு செய்தியை அனுப்பியிருக்க வேண்டும். இச்செய்தி தான் அரசதரப்பினால் இது தொடர்பாக வெளியிடப்பட்ட முதலாவது உத்தியோகபூர்வ செய்தி என்கிறார் இக்பால் அத்தாஸ்.

ஐக்கிய அமெரிக்க ஸ்தானிகராலயத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த இந்த தொலைமடல் குறித்து சில அடிப்படையான கேள்விகளை இக்பால் அத்தாஸ் எழுப்பியிருந்தார்.

இந்தப்பெயரில் உண்மையில் ஒரு கப்பல் இருக்கிறதா? அல்லது புலிகளினால் நடாத்தப்படும் சர்வதேச கப்பல் கொம்பனிகளில் ஒன்றின் கப்பல்களில் இக்குண்டுகள் ஏற்றப்பட்டிருக்கலாமா? புலிகளது யாழ் சிப்பிங் கோப்பிரேசன், மராயன் சிப்பிங், பனாமா மராயன் சிப்பிங் கம்பனிகளின் பெயரில் கிரீஸ், சைப்பிரஸ், பனாமா ஆகிய நாடுகளில் பதிவு செய்யப்பட்ட பல கப்பல்கள் (குறைந்தது 5 கப்பல்களாவது) ஓடுவதால், அவற்றில் ஒரு கப்பலுக்கு இந்தச் சரக்கை ஏற்றும் வாய்ப்புக் கிடைத்திருக்க வாய்ப்பு உண்டாகியிருக்கலாமா? ஸிம்பாப்வே அதிகாரிகளிடம் சந்தேகத்துக்கு இடமில்லாத வகையில் குறைந்த கட்டணத்திற்கு சரக்கை ஏற்றிச் செல்லத் தயாரென, மடகஸ்காரிலுள்ள தமது ஏஜன்ட் ஒருவர் மூலம் புலிகளின் இக்கொம்பனிகளில் ஒன்று பேரம் பேசி சரக்கை ஏற்றிச் செல்லும் வாய்ப்பை பெற்றிருக்கலாம் அல்லவா?

இந்தக் கப்பலில் ஏற்றப்பட்ட குண்டுகளை இலங்கைக்கு வழங்குவதற்காக கேள்விப் பத்திரம் சமர்ப்பித்த பல்வேறு வழங்குநர்களில் ஒரு வழங்குநர் ஸிம்பாப்வேக்கு கேள்விப் பத்திரம் கிடைத்ததனால் குரோதம் கொண்டு இப்படி - ஒரு தொழிற்துறைப் போட்டியாக - இதனைச் செய்திருக்கலாமா?

புலிகள் தான் இதைச்செய்தார்கள் என்றால், இச்செய்தியை அவர்கள் அமெரிக்க தூதுவராலயத்திற்கு மட்டும் ஏன் அறிவித்தார்கள்? அறிவித்த அந்த தொலைமடல் கூட அவர்களது வழமையான புலி இலட்சினை இடப்பட்ட கடித மடலில் அனுப்பப்படாமல் இருந்தது ஏன்? தவிரவும், இது தொடர்பாக புலிகளின் பேச்சாளர் அன்ரன் ராஜா இதைப்பற்றி தனக்கு எதுவும் தெரியவில்லை என்று கூறியிருக்கிறார். அதேவேளை புலிகள் இதனைப் பகிரங்கமாக ஒப்புக் கொள்வது அரசியல் ரீதியாக பாதகமானது எனக் கருதுவதால் சொல்லாமல் இருக்க விரும்பவும் கூடும் என்பதை மறுப்பதற்கு இல்லை.

இக்பால் அத்தாஸ் எழுப்பும் இன்னொரு கேள்வி, இலங்கை அரசாங்கத்திற்கு ஆயுதங்களை வழங்கும் கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டு, அவை தொடர்பான முடிவு எடுக்கப்பட்டபின், அந்த விடயம் இரகசியமாகவே வைத்திருக்கப்படும். அப்படியிருக்க இந்தத் தொலைமடலை அனுப்பியவர்கள் யாராக இருப்பினும் அவர்களில் எவருக்காவது இந்தக் கொள்வனவு குறித்த தகவல் கசிந்தது எப்படி?

இவை தொடர்பாக மேலதிக் விபரங்களை ஸிம்பாப்வேயிலிருந்து ஒரு அதிகாரி கடந்த மாதம் 30ம்திகதி இங்கு வந்திருந்து இங்குள்ள அதிகாரிகளுடன் பேசியபோதும் மர்மம் முழுமையாகத் துலங்கியதாக இல்லை. அவர்களைப் பொறுத்தவரை அவர்கள் ஒப்பந்தப்படி முழுச் சரக்கையும் அனுப்பி விட்டார்கள். ஸிம்பாப்வேயிலிருந்து வந்த 'மவீர' அவர்களுடைய தகவலின்படி அவர்கள் இந்த குண்டுகளை மொசாம்பிக் ஸிம்பாப்வே எல்லையூடாக தரை மார்க்கமாக கொண்டு வந்து பெயிரா துறைமுகத்தில் வைத்து இஸ்ரேலிய கம்பனிக்கு சொந்தமான கப்பல் ஒன்றில் மே 21ம் திகதி ஏற்றியுள்ளார்கள். இக்கப்பல் பின்னர் தென்னாபிரிக்காவுக்குச் சென்று அங்கிருந்து நமீபியாவுக்குப் போய் பின்னர் ஜூலை 2ம்திகதி மடகஸ்கார் வந்து சேர்ந்திருக்கிறது. அங்கிருந்து பின்னர் கொழும்பு நோக்கிப் புறப்பட்டது.

மடகஸ்காரில் வைத்து இந்தக் குண்டுகள் வேறொரு கப்பலில் ஏற்றப்பட்டு இங்கு கொண்டு வரப்பட்டதா இல்லையா போன்ற தகவல்கள் இன்னமும் தெளிவாக இல்லை.

ஆனால், ஒன்று மட்டும் தெரிகிறது.

இக்பால் அத்தாசின் இந்தச் செய்தியின்படி இலங்கை அரசாங்கம் இறக்குமதி செய்ய விருந்த இந்தக் குண்டுகள் ஒவ்வொன்றும் 40 கிலோ எடை கொண்ட 5-7கிலோ மீற்றர் தூரம்வரை செல்லக்கூடிய அதி சக்திவாய்ந்த 81மி.மீ. மோட்டார் குண்டுகளாகும். இக்குண்டுகள் அனைத்தும் வடக்கு கிழக்கில் குறைந்த பட்சம் முப்பதாயிரம் உயிர்களையாவது பலி கொண்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை!

ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கை வெற்றிகரமாக தொடர அவசியமான இவை உரிய நேரத்தில் வந்து சேராதது ஒரு வகையில் இலங்கை அரசின் யுத்த முயற்சிக்கு ஒரு தேக்கமான நிலையை ஏற்படுத்தியேயுள்ளது.

அதேவேளை, பலரும் சந்தேகப்படுவது போல இவை புலிகளின் கைகளில் கிடைத்து அவை வடக்கிற்கு வந்து சேர்ந்திருக்குமாயின், அது இந்த யுத்தத்தில் பல புதிய திருப்பங்களை கொண்டு வரலாம் என்றும் கூற முடியும். ●

**இக்பால் அத்தாஸ் சண்டே ரைம்ஸ்இன் இராணுவ விவகாரங்களுக்கான பத்தி எழுத்தாளர். அண்மையில் ஸிம்பாப்வேயிலிருந்து 32,400 மோட்டார் குண்டுகளுடன் புறப்பட்டு காணாமல் போன கப்பல் தொடர்பான செய்தியை முதன் முதலில் வெளிப்படுத்தியவர். இத னால் அரசாங்கத்தின் எரிச்சலுக்கும் கோபத்திற்கும் ஆளானார். இவரது நடவடிக்கைகள், இருப்பிடம் என்பன இனம் தெரியாதவர்களால் கண்காணிக்கப்பட்டன. முன்னைய அரசாங்கம் ஒப்பிரேசன் யாழ்தேவி பற்றிய உண்மைகளை வெளியிட்டதற்காக மலர் வளையம் அனுப்பியே எச்சரித்திருந்ததுகுறிப்பிடத்தக்கது. இவ் விடயங்கள் தொடர் பாகவும், இலங்கை அரசாங்கம் நடாத்தி வரும் யுத்தம், மற்றும் தீர்வுப் பொதி குறித்தும் அவருடன் உரையாடியதிலிருந்து முக்கியமான பகுதிகளை இங்கே தருகிறோம்.**

**ஆ-ர்**



**இலங்கை அரசாங்கம் நடாத்தி வரும் 'சமாதானத்திற்கான யுத்தம்' உண்மையில் தமிழ் முஸ்லிம் மக்களுக்கு சமாதானத்தினைப் பெற்றுத்தரும் என்று அரசாங்கம் சொல்வதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

இது அரசியல் காரணங்களுக்காக நடாத்தப் படுகின்ற யுத்தம். ஆக, இதற்குப் பதில் சொல்வது பெரிய பிரச்சினை. இந்த அரசாங்கம் பதவிக்கு வந்து இரண்டரை வருடங்களாகி விட்டன. பல ஒப்பிரேஷன்கள் நடாத்தப்பட்டிருக்கின்றன. குறிப்பாக ஒப்பிரேஷன் றிவிரச நடாத்தப்பட்டது. இதன் மூலம் யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டது. இன்று யாழ்ப்பாணத்தில் யுத்தம் இல்லாமலிருக்கலாம் ஆனால் மக்களுடைய இதயங்களை அவர்களால் வெல்ல முடியவில்லை. யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் மீறப்பட்டதாகச் சொல்லப் படுகிறது. இதுதவிர யாழ்ப்பாணத்தின் புனரமைப்பு, புனர்நிர்மாணம் தொடர்பாகவும் பல பிரச்சினைகள் உண்டு. ஆக, சமாதானத்தை விட பிரச்சினைகள் அதிகரித்திருப்பதாகத் தான் சொல்ல முடியும்.

**ஜனாதிபதியும் அரசியல் தீர்வு பற்றிப் பேசுகிறார். அண்மையில் நடந்த கூட்டமொன்றில் இராணுவத் தளபதிகளும் அரசியல் தீர்வு தான் சாத்தியமானது எனத் தெரிவித்திருக்கிறார்கள். ஆக, இந்த யுத்தத்தை உண்மையில் முன்னெடுத்துச் செல்வது யார்?**

அரசியல் சக்திகள் தான் யுத்தத்தை நடாத்துகின்றன. ஆனால் அரசாங்கத்துக்குள்ளேயே வேறுபட்ட அபிப்பிராயங்களும் உள்ளன. சில அமைச்சர்கள் யுத்தம் சாத்தியமில்லை என்கிறார்கள். யுத்தத்துக்கு பொறுப்பான அமைச்சரோ யுத்தம் 85% முடிவடைந்து விட்டது. இன்னமும் 15% தான் இருக்கிறது என்கிறார். ஆனால், அரசியல் தீர்வை முன்னெடுப்பவர்கள் சொல்கிறார்கள் ஒரு காலக்கெடுவை நிர்ணயித்து புலிகளுடன் பேச வேண்டுமென்று. ஆக, எந்த அரசியல் தீர்வுக்கும் புலிகள் அவசியம் என்று அவர்கள் சொல்வதாகவே படுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவற்றை விட நாம் அவதானிக்க வேண்டிய மிக-முக்கியமான சில விடயங்கள் உள்ளன. இந்த வருடத்தில் யுத்தத்துக்கு 47பில்லியன் செலவிட்டுள்ளதாக அமைச்சர் ஒருவர் சொல்லியிருக்கிறார். இதில் பெரும்பகுதி இராணுவத் தளபாடங்கள் வாங்குவதைவிட இராணுவ அதிகாரிகள் சிலரை முதலாளிகளாக்க உதவியுள்ளது. இது ஜனாதிபதிக்கும் தெரியும். கடந்த இரண்டு இரண்டரை வருடத்துள் விமானப்படையின் 22 விமானங்கள் சேதமாகி இருக்கின்றன. அது தவிர வாங்கிய விமானங்கள் பழையவை என்ற குற்றச்சாட்டும் எழும்பியிருக்கிறது. இது பற்றி விசாரிக்க ஜனாதிபதியே ஒரு கமிஷனை நியமித்திருக்கிறார். குற்றத் தடுப்பு பொலிசாரால் இது தொடர்பாகப் பலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனப் பத்திரிகைகள் எழுதுகின்றன. ஆக,யுத்தத்துக்கான ஒதுக்கீட்டில் யுத்தத்தை நடாத்த எவ்வளவு பயன்படுகிறது. இராணுவ அதிகாரிகளின் பொக்கற்றுக்குள் எவ்வளவு போகிறது என்பது பிரச்சினை தான்.

*நீங்கள் சொல்வதைப் பார்த்தால் யுத்தத்துக்காக ஒதுக்கப்படும் பணம் சரியாகப் பயன்படுத்தப் படுமானால், அரசாங்கத்தால் யுத்தத்தை வெல்ல முடியும் என்று படுகிறது அல்லவா?*

நான் அப்படிச் சொல்லமாட்டேன். ஆனால், இதனை விட அரசாங்கத்துக்கு சில முன்னேற்றகரமான அம்சங்கள் கிட்டியிருக்கும். இன்று 87, 88ம் ஆண்டு யாழ்ப்பாணம் எப்படி இருந்ததோ அப்படி அல்லவா கொழும்பு இருக்கிறது. புலிகளிடம் ஹெலிகொப்டர் இல்லை, விமானங்கள் இல்லை, விரைவாகச் செல்லும் பீரங்கிப்படகுகள் இல்லை, டாங்கிகள் இல்லை, ஆட்டிலறிகளை இராணுவத்திடமிருந்தே எடுத்திருக்கிறார்கள். ஆகக் கூடுதலாக 5000 பேரே இருப்பதாகச் சொல்கிறார்கள். அரச படைகளில் பொலிசார் உட்பட ஏறத்தாழ 170 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். இவ்வளவு புதிய இராணுவ தளபாடங்களைப் பெற்றும் கூட நிலைமை இவ்வளவு மோசமாக இருப்பதற்குக் காரணம் என்னவென்று யாராவது யோசித்துப் பார்த்திருக்கிறார்களா?

*அண்மைக் காலத்தில் கடலில் வைத்து புலிகள் தொடர்ச்சியாகக் கப்பல்களைத் தாக்கியுள்ளார்கள். இதனால் தற்போது யாழ்ப்பாணத்திற்கான கப்பல் சேவை ஸ்தம்பித்து விட்டது. இது என்ன விளைவுகளை ஏற்படுத்தும் என நினைக்கிறீர்கள்?*

யாழ்ப்பாணத்துக்கு விமான மூலமாகவோ/ கப்பல் மூலமாகவோ பொருட்கள் வழங்கலை நீண்ட காலத்திற்குச் செய்ய முடியாது. அதற்கான ஒரு தரைவழிப் பாதையைத் திறக்க வேண்டும். அதற்குப் போதியளவு இராணுவம் தேவை. இராணுவத்திற்குரிய ஆயுத தளபாடங்கள் தேவை என்றார் ஜெனரல் கல்கட். மூன்று நான்கு லட்சம் படையினருடன் வந்து அனுபவப்பட்டவரே சொல்லும் போது நாம் இதைப் புரிந்திருக்க வேண்டும். ஜயசிக்குறு என்பதன் அர்த்தம் வெற்றி நிச்சயம்என்பது தான். ஜயசிக்குறு ஆரம்பித்து 100 நாட்கள் போயும் 1/3 பங்கு வெற்றியும் வரவில்லை. இன்னமும் 2/3 பங்கு இருக்கிறது. போதியளவு இராணுவத்தினர் தேவை. போதியளவினர் இல்லாததால் தான் இராணுவத்திலிருந்து விலகியவர்கள் போய்ச் சேர இரண்டு சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டது. அதற்குப் பின்னர் ஆட்சேர்ப்பு நடைபெறுகிறது. ஆனால் போதியளவு ஆட்கள் வருகிறார்களில்லை.

*ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் போது இராணுவம் மூன்று பாரிய தாக்குதல்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. புலிகள் பல கனரக ஆயுதங்களை எடுத்துச் சென்றிருக்கின்றார்கள். இராணுவத்தின் ஆட்பலத்தில் பலத்த சேதமேற்பட்டிருக்கிறது. பொலிசார் முன்னரங்கக் காவல் நிலைகளில் கடமையாற்ற மறுத்திருக்கிறார்கள். இவை ஜயசிக்குறுவின் இலக்கில் என்ன விளைவுகளை ஏற்படுத்தும்?*

நவம்பரில் அதிகாரப் பகிர்வுத்திட்டம் முன்வைக்கப்பட இருக்கிறது. அதற்கு முன்னர் பாதை திறந்தாக வேண்டும். ஆக, பாதை திறப்புக்காக இராணுவத்தை கடுமையாக நிர்ப்பந்திக்க வேண்டியிருந்தது. அதனால் தான் நூறு நாட்களுக்குள் மூன்று தாக்குதல்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. ஆக, பாதையை முழுமையாகக் கைப்பற்றிய பின் அந்த மிக நீளமான பாதையை பாதுகாக்க எத்தகைய தாக்குதல்களை எதிர்நோக்க வேண்டும் என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை. பாதையை முழுமையாகக் கைப்பற்றிய பின் தாக்குதல் நடக்காது எனக் கூற முடியாது. அதை எதிர்பார்க்க வேண்டும். மூன்றாவது தாக்குதலில் புலிகளுக்கு ஓரளவு இழப்பு ஏற்பட்டு இருக்கிறது. ஆனால் மறுபுறத்திலும் நாம் பார்க்க வேண்டும். நீங்கள் குறிப்பிட்டது போல ஐநூறுக்கும் மேற்பட்ட பொலிசார் காவல் நிலைகளை விட்டு விட்டுப் போய் விட்டார்கள். இராணுவத்தினரின் மனநிலை பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் இராணுவத்துக்கு புதிதாகச் சேர ஆட்கள் வருகிறார்கள் இல்லை.

*உண்மையில் புலிகளின் பலம் தொடர்பான சரியான மதிப்பீட்டிலிருந்து தான் அரசாங்கம் யுத்தத்தை நடாத்துகிறதா? அல்லது தவறான தகவல்கள் தான் யுத்தத்தை வழிநடாத்துகிறது என எண்ணுகிறீர்களா?*

எதிரியைக் குறைத்து மதிப்பிடக்கூடாது எனப் பலமுறை நான் குறிப்பிட்டிருக்கிறேன். வவுனியாவிலிருந்து மன்னாரை நோக்கிய எடிபல நடவடிக்கை ஒரு துப்பாக்கிகுண்டு கூட செலவழிக்காமல் இலகுவாக மேற்கொள்ளப்பட்டது. இதனை வைத்து படைத்தளபதிகள் சிலர் புலிகளை பலவீனமானதாகக் கருதினார்கள். ஆனால் அதற்குப் பிறகு தான் புலிகள் வவுணதீவு, பரந்தன் ஆகிய இடங்களில் பாரிய தாக்குதல்களை நடாத்தினார்கள். ஆக, அவர்கள் தமக்குத் தேவையான பொழுது தேவையான தாக்குதல்களை நடாத்துகிறார்கள். எனவே நாம் அவர்களைக் குறைத்து மதிப்பிட முடியாது.

*அரசாங்கம் புலிகள் பற்றிய இழப்புகளைக் கூறும்போது புலிகளின் வானொலித் தொடர்பை இடை மறித்துக் கேட்டபோது தெரிய வந்ததாகக் கூறித் தகவல்களை வெளியிடுகிறது. உண்மையில் புலிகளின் வானொலித் தொடர்பை இடைமறித்துத் தான் தகவல்களைப்பெறுகிறார்கள் என்பதை ஊர்ஜிதம் செய்ய முடியுமா?*

இங்கே அரசாங்கம் புரிந்து கொள்ளாத ஒன்று உண்டு. கெரில்லா யுத்தம் பற்றி ஜெனரல் ஜிஜாப் கூறும் போது Victory known by a Small crowd is a small Victory, Victory known by a big crowd ia a bigger Victory என்று சொன்னார். கெரில்லா யுத்தத்தில் பிரச்சாரம் மிக முக்கியமானது. இந்த உண்மையை அரசாங்கம் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. டி.வி, சற்றலைற் டி.வி போன்ற நவீன தொடர்பு சாதனங்கள் இருக்கும் போதே ஐந்து இராணுவத்தினர் இறந்தால் 25 புலிகள் இறந்ததாகச் சொல்கிறார்கள். இம் மாதிரிக் கணக்குகளை ஒரு ஐந்து வருடங்கள் கூட்டிப் பார்த்தால் யாழ்ப்பாணத்துச் சனத்தொகையை விட அது கூடவாகி விடும். இங்கே நாங்களே ஒரு பொய்யைச் சமைத்து அதை நாங்களே நம்பிக் கொண்டு இருக்கிறோம். இது முந்தைய அரசாங்கத்திலும் நடந்தது. இந்த அரசாங்கத்திலும் தொடர்கிறது. இதனால் தான் இலங்கை தொடர்பான நம்பகத்தனமான செய்திகளுக்கு வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்களை நாடுகிறார்கள்.

*இலங்கை அரசாங்கம் கொள்வனவு செய்த 32,400 மோட்டார் குண்டுகளுடன் காணாமல் போன கப்பல் குறித்து எழுதி வருகிறீர்கள். இதனைப் புலிகள் தான் கடத்தி இருப்பார்கள் என நீங்கள் ஊகிப்பதற்கான காரணங்கள் எவை?*

ஜயசிக்குறு நடவடிக்கையை எடுத்துப் பாருங்கள். புலிகள் மூன்று தாக்குதல்களை நடாத்தியிருக்கிறார்கள். கப்பல்களைத் தாக்கியிருக்கிறார்கள். தமது தரப்பில் முந்நூறு நானூறு பேரை இழந்திருக்கிறார்கள். தற்கொலைக் கொலையாளிகளின் நடவடிக்கைகளும், பிஸ்டல் குறூப்பினது நடவடிக்கைகளும் அதிகரித்திருக்கின்றன. இது எதனைக் காட்டுகிறது என்றால் ஜயசிக்குறுவை இடைநிறுத்த அவர்கள் எல்லாவழிகளிலும் தயாராகி விட்டார்கள் என்பதனைத் தான். அந்த வழிமுறையில் வைத்துப் பார்க்கும் போது இவ்வாறு மோட்டார் குண்டுகளை கடத்தினால் ஜயசிக்குறுவை அரசாங்கம் பிற்போட வேண்டியிருக்கும். மீளப் பணம் கட்டி எடுப்பதென்றாலும் மூன்று நான்கு மாதங்கள் செல்லும். அவ்வாறு மூன்று நான்கு மாதங்கள் சென்றால் யுத்தம் ஜனவரிக்குத் தள்ளப்படும். அவ்வாறாயினும் அடுத்த ஜனவரியிலும் யுத்தத்தை நடாத்துவதில் சிக்கல்கள் இருக்கின்றன. ஏனெனில் அடுத்த வருடம் இலங்கை சுதந்திரம் பெற்று ஐம்பதாவது வருடம் வருகிறது. எனவே பெப்ரவரி முடியும் வரை காத்திருக்க வேண்டி ஏற்படும். அதேவேளை அடுத்த வருடம் தேர்தலும் வரவிருக்கிறது. இந்த விடயங்களையெல்லாம் புலிகள் கணக்கில் எடுத்திருக்கக் கூடும்.

*ஆனால், அனுப்பி வைக்கப்பட்டிருந்த எச்சரிக்கைக் கடிதம் புலிகளது கடிதத் தலைப்பில் அனுப்பப்பட்டிருக்கவில்லையே?*

அன்டன் ராஜாவும் பி.பி.சி.யில் தமக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை எனக் கூறியிருக்கிறார். ஆனால் புலிகள் தான் இதனை செய்தார்கள் என்றால், அவர்கள் உரிமை கோருவார்களாயின் பெரும் நெருக்கடிக்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும். இந்நடவடிக்கை காரணமாக ஒரு கப்பலும் இந்து சமுத்திரத்தில் பயணம் செய்ய முடியாதெனக் கூறி புலிகளைப் பயங்கரவாதிகளாக்கி நடவடிக்கை மேற்கொள்ள முனைவர். அதேவேளை புலிகள் தாம் தான் இதில் ஈடுபட்டோம் எனவும் காட்டிக் கொள்ளவும் வேண்டும். அந்த தொலைமடல் வராது விட்டால் புலிகளுக்கு இதில் தொடர்பிருக்கென்று யாரும் அறிந்திருக்க முடியாது. ராஜிவ் காந்தி படுகொலையில் இருந்து எத்தனையோ விடயங்கள் உள்ளன. அவர்கள் இவ்வாறான விடயங்களில் தாங்கள் தான் காரணம் என அறியத்தர மாட்டார்கள்.

*ஐக்கிய அமெரிக்க ஸ்தானிகராலயத்துக்கு மட்டும் தொலைமடல் அனுப்பி வைக்கப் பட்டதற்கான காரணம் என்ன என்று நினைக்கிறீர்கள்?*


அண்மைக்காலத்தில் இலங்கைக்கும் ஐக்கிய அமெரிக்கவுக்கும் இடையிலான உறவுகள் நெருக்கமடைந்து வருகின்றன. முன்னர் 2, 3 பயிற்சிகளை மட்டுமே வழங்கினார்கள். பின்னர் வீரவிலவில் இலங்கை இராணுவத்தினருக்குப் பயிற்சி வழங்குவதை நாம் எல்லோரும் அறிந்திருந்தோம். இன்னொரு விதத்தில் இலங்கைக்கு நெருக்கமாக இருப்பவர்களுக்குச் சொல்ல வேண்டுமென புலிகள் முடிவு செய்திருக்கலாம். அல்லது அமெரிக்காவுக்குச் சவாலாகக் கூட இதனைச் செய்திருக்கலாம்.

*உண்மையில் அக்கப்பலின் பெயர் என்ன?*

தூதுவராலயத்துக்குக் கிடைத்த தொலைமடலில் ஸ்ரீலஸ் விக்ரோறியா என்றிருந்தது. ஸ்ரீலஸ் லிமசோன் என்று அரசாங்கம் சொன்னது. மிரோரா வந்து சொல்கிறார், விக்டொரியா லிமசோன் என்று. இது இன்னமும் சரியாக ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

*ஆனால் கடந்த 7ம்திகதி பாராளுமன்றத்தில் அநுருத்த சொல்லியிருக்கிறாரே கப்பல் வந்து சேர்ந்து விட்டதாக?*

நாங்கள் கேட்டளவு எங்களுக்குக் கிடைத்திருக்கிறது என்று தான் அநுருத்த சொல்லியிருக்கிறார். அவர் எங்கே கேட்டது? எப்போது வந்தது? எங்கே வந்தது? என எதனையும் தெரிவிக்கவில்லை. அவ்வாறானால் சண்டே ரைம்ஸ்சில் வெளியானவற்றில் இது தவறு, அது தவறு எனச் சுட்டிக் காட்டியிருக்கலாமல்லவா? ஏன் ஒளித்து மறைத்து விளையாட வேண்டும்.



"பத்திரிகையாளன் என்ற வகையில் இரண்டு அரசாங்கங்களும் ஒரே மாதிரியாகச் செயற்படுவதையே நான் காண்கிறேன்"

- பத்திரிகையாளர் இக்பால் அத்தாஸ்

*இச்செய்தியை வெளியிட்டது சம்பந்தமாக அரசாங்கம் தங்களுடன் எப்படி நடந்து கொண்டது?*

இதனால் பாதிக்கப்பட்டவர்கள் என் மீது எரிச்சலடைந்தனர். எனது வீடு நோட்டம் பார்க்கப்பட்டது. சிறு சிறு தொந்தரவுக்குள்ளாக்கப்பட்டேன்.

*ஆக, பததிரிகையாளரான உங்களுக்கெதிராக முன்னைய அரசாங்கம் மேற்கொண்டவாறான நடவடிக்கைகளையே இந்த அரசாங்கமும் மேற்கொள்ள முனைகிறது என்று கூறலாமா?*

ஒரு பத்திரிகையாளன் என்ற வகையில் இரண்டு அரசாங்கங்களும் ஒரேமாதிரியாக செயற்படுவதையே நான் காண்கிறேன். இரண்டுக்கும் இடையில் வேறுபாடுகள் இருப்பதாக நான் கருதவில்லை.

*புலிகளின் கையில் இவை கிடைத்திருந்தால் யுத்த களத்தில் என்ன விளைவுகள் ஏற்படும் எனக் கருதுகிறீர்கள்?*

அவற்றை அவர்கள் முதலில் இங்கு கொண்டு வந்து சேர்க்க வேண்டும். அவ்வாறு கொண்டு வந்து சேர்த்தால் மோட்டார் லோஞ்சர்கள் வாங்க வேண்டியேற்படும். இப்போது இராணுவத்திடமிருந்து கைப்பற்றிய மோட்டார் லோஞ்சர்களும், ஆட்டிலறிகளுமே அவர்களிடம் உண்டு. இக்குண்டுகள் 5அல்லது6 வருடங்கள் பாவிக்கப் போதுமானவை. எனவே புலிகளின் தாக்குதிறன் கூடும். இது அரசாங்கத்தின் தாக்குதல் நடவடிக்கையைப் பெருமளவில் பாதிக்கக்கூடும்.

சந்திப்பு
**சங்கரன்**
படம்
**சசிகுமார்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஜிஹாத் அமைப்பின் தோற்றம், அதன் செயற்பாடுகள், அதற்கெதிரான புலிகளின் நடவடிக்கைகள், இவை தமிழ் முஸ்லிம் உறவில் ஏற்படுத்திய தாக்கங்கள் குறித்து அபூநிதால் எழுதியதற்கான எதிர் வினையை நெற்றிக்கண்ணன் எழுதியிருந்தார்.
இங்கே, முன்னாள் ஜஹாத் அமைப்பாளர்களில் ஒருவரான அலியார் மவ்சூக் ஈழ விடுதலை இயக்கங்களில் தமது பங்களிப்பு எவ்வாறு இருந்தது என்றும்,பின்னர் அவ்வியக்கங்களில் இருந்து வெளியேறவும் ஜிஹாத், அமைப்பு உருவாகவும் ஏதுவாயமைந்த காரணிகள் குறித்தும், ஜிஹாத் நடவடிக்கைகள் குறித்தும் எழுதுகிறார்.



ஜிஹாத் ஊர்காவற் படை இரண்டும் சேர்ந்து தமிழ் மக்களை கொன்று குவித்து விட்டன. கொள்ளையடித்துவிட்டன. விடமாட்டோம் முஸ்லிம்களை அழித்தே தீருவோம்என கச்சை கட்டிக்கொண்டிருந்த, கொண்டிருக்கும் தமிழ் முன்னாள், இந்நாள் தீவிரவாத அமைப்புகளுக்கும், தமிழ் சகோதர சகோதரிகளுக்கும் உண்மைகளை விளக்குமுகமாக இக்கட்டுரைத் தொடரை எழுதுகின்றேன்.

பாரசீகநாடுகளுடன் யுத்தங்கள் பல செய்து அரபு நாடுகளை தம்வசமாக்கிய முஸ்லிம்கள், இலங்கைத் தீவுக்கு வியாபார நோக்கமாக வியாபாரக் கப்பல்களில் கொழும்புத் துறைக்கும், அதே நோக்கமாக 'கள்ளத்'தோணிகளில் காலி - தங்காலைக்கும் வந்திறங்கினார்கள். கொழும்பில் வந்திறங்கியவர்கள் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்களுடன் வியாபார ஒப்பந்தங்கள் செய்து கொண்டு கொழும்பு சந்தையைப் பிடிக்க, தங்காலையில் இறங்கியவர்கள் பொடிநடையாக பிபிலை - கொட்டபோவை வந்தார்கள். அங்கிருந்து இரண்டாகப் பிரிந்து, ஒரு குரூப் கண்டி, அனுராதபுரம், சாவகச்சேரி (ஜாவகச்சேரி) என வியாபாரத்தைப் பரப்ப, மறு குரூப் மகியங்கனை, பதியத்தலாவை, கொண்டைவெட்டுவான், ஒலுவில் என பயணப்பட்டது.

எமது மூத்தப்பாமார்கள் (கொப்பாட்டன்கள்) ஒலுவில்வரும்போது விஜயன் வாரிசுகளும், தென்னிந்தியாவில் இருந்து 'நல்ல' தோணிகளில் வந்த தமிழர்களும் இங்கு நிரம்பி இருந்தார்கள். ஆனால் பொத்துவிலில் திஸ்ஸமகராமையை ஆட்சிசெய்த காபன் திஸ்ஸ மகாராசாவின் வாரிசு, முகுது குமாரியின் அரண்மனையில் அமர்ந்திருந்தார். தீகவாப்பியில் காபன்திஸ்ஸவின் இன்னொருவாரிசு இருந்தது. (தீகவாப்பி சம்பந்தமாக 1980/81களில் சுதந்திரன் பத்திரிகையில் அலியார் மவ்சூக் என்ற பெயரில் கட்டுரைகள் எழுதியுள்ளேன்.)

அன்று தொடக்கம் இன்று வரை, இந்தக் கள்ளத்தோணிகளுக்கு 5 ரூபாவை எவ்வாறு 10 ரூபாவாக்குவது என்ற சிந்தனைதானே தவிர ஐந்தை எப்படி 50ஆக்குவது என்ற சிந்தனை ஓடவேயில்லை. அன்று அந்த சிந்தனை இந்த கள்ளத் தோணிகளுக்கு வந்திருந்தால்; போர்த்துக்கேயருடன் இருந்த கச்சிமரைக்காயர், ஊர்காவற் படை அமைத்து, ஜிகாத் உருவாக்கி 1948 ஏப்ரல் - 4 இல் இங்கு ஒரு குட்டி பாகிஸ்தானை உருவாக்கி இருந்திருப்பார்.

இந்தியாவுக்கு வந்திறங்கிய கள்ளத் தோணியின் பெயர்: முகம்மதலி ஜின்னா. 5ஐ50ஆக்கும் வித்தை கற்றவர். 1947 ஒகஸ்ட் 26 நள்ளிரவு 12 மணிக்கு காந்தி ஐயாவின் தோளை தொட்டு ஏதோ விளக்கம் சொன்னாராம். உடன் பாகிஸ்தானுக்கு கோடு கிழிக்கப்பட்டதாம்!

அதிபுத்திசாலித்தனமான எங்கள் லோயர்மூளைகள் 1948இல் எங்கே போனது. சரி 1948ஐ விடுங்கள். 1956, 1970, 1977, 1983, 1987 இந்த வருடங்களிலெல்லாம் எங்கே போனது உங்கள் அதி மேதாவித்தனங்கள் எல்லாம். அதைவிட்டு விட்டு காக்காமார் ஜிகாத் அமைத்ததால் எங்கள் தமிழீழம் தாமதமாகி விட்டது என்கிறீர்களே!

இலங்கைக்கு கள்ளத்தோணிவந்த பின்புதான் ஜாவா, சுமத்ரா, இந்தோனேசியா, மலேசிய ஆகிய இடங்களுக்கு கள்ளத்தோணிகள் வந்தன. அங்கெல்லாம் இஸ்லாமியக் கொடிகள் பறக்க நாம் இங்கு மத்தளமாகிக்கொண்டிருக்கிறோம்.

இறுதியாக ஒரு விடயத்தை சொல்லி என் கட்டுரையை ஆரம்பிக்கலாம் என நினைக்கின்றேன். 1985 ஏப்ரல் 21 மாலை 7.23க்கு எமது அமைப்பின் இராணுவ பொறுப்பாளர், சகோதரர், மர்ஹூம் மொகமட் ராபி ஈரோஸ் அமைப்பினரால் சுட்டுக் கொல்லப்படுகின்றார். கொல்லப்பட்டு சிறிது நேரத்தில் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் அனைவரும் அங்கு திரள்கின்றனர். இரவு 9மணிக்கு உயர் இராணுவ அதிகாரிகள் எல்லாம் என்னைச் சூழ்ந்து கொள்கிறார்கள். புறப்படுவோம், அழிப்போம். அழிப்போம். அம்பாறை மாவட்ட தமிழர்களை என்கின்றனர். 13 இராணுவ வாகனங்கள் ஆயுதங்களுடன் இறக்காமம் வரை வந்தன. இளைஞர்கள் கொதித்தார்கள். எனது ஒரு அனுமதிக்காக காத்திருந்தார்கள்.

இறுதிவரையும் நான் அனுமதி தர மறுத்தேன். எம்முடன் நகமும் சதையுமாக வாழும் அம்பாறை மாவட்ட தமிழனுக்கெதிராக ஒரு வேட்டுக்கூட பறக்கக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தேன். இறுதியில் எனது சொந்த பாதுகாப்புக்கு தந்திருந்த 3.8 ரிவால்வரையும் எடுத்து கொண்டு இராணுவம் திரும்பியது. இதுதான் ஜிகாத், அல்பதா ஃ இயக்கங்களின் பண்பு, இயல்பு.

அன்று முகமட்ராபியை கொல்ல உத்தரவு வழங்கிய அம்பாறை மாவட்ட ஈரோஸ் அமைப்பாளர் தோழர் பேரின்பம் இன்றும் ஒரு நாளைக்கு இரண்டு, மூன்று தட்வை முஸ்லிம் பகுதிகளுக்கு வந்து கட்டிட காண்ட்ராக் வேலைகள் செய்வதை அக்கரைப்பற்று, ஒலுவில் பகுதிகளுக்கு நீங்கள் வந்தால் கண்குளிரக் காணலாம். எய்தவன் இருக்க அம்பை நோவானேன். இதுதான் ஜிகாத்தின் பெருந்தன்மை. இஸ்லாத்தின் சகோதரத்துவம்.

அலியார் மப்சூக்

# "வெட்கத்தை விட்டு வேதனைகளுடன்...!"

"வெட்கத்தை விட்டு வேதனைகளுடன்...!"
"வெட்கத்தை விட்டு வேதனைகளுடன்...!"

## முன்னாள் ஜிகாத் அமைப்பாளர் எழுதுகிறார்

"சிங்களவரின் தோலை உரித்து செருப்பாக அணிந்து கொண்டுதான் மறுமுறை 'இங்கு வருவோம்'' அக்கா மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் சூளுரைக்கின்றார். உணர்ச்சி வசப்பட்ட கிழக்கு மாகாணத் தம்பிகள் பக்கத்தில் உள்ள பெட்டிக் கடைக்கு ஓடிப்போய், 15சதத்துக்கு சம்பியன் பிளேடுகள் வாங்கி பெருவிரல்களைக் கீறி அக்காவுக்கு இரத்தத் திலகமிடுகின்றனர். மேடையின் ஒரு கோடியில், நான் இன்றும் மதிக்கும் அண்ணன் சிம்மக்குரலோன் ராசதுரை; மறுகோடியில் சுதந்திரத்துக்கும் Zoo (மிருகக்காட்சி சாலை) தந்திரத்துக்கும் விளக்கம் சொன்ன உணர்ச்சிக்கனல் கவி. காசி ஆனந்தன். இன்னும் பல ஆனந்தர்களும், ஐயாக்களும் நின்று கொண்டு நள்ளிரவு 12 மணிவரை எங்கள் உணர்ச்சிகளுக்கு தீனி போட்டார்கள்.

மாதம் ஒன்றோ இரண்டோ கழிந்திருக்கும். இன்னுமொரு மேடை. ''தம்பி காசி ஆனந்தன் என்னைப் பற்றி தவறான கருத்துக்களை பரப்பித்திரிகின்றாராம். கண்ணாடி வீட்டுக்குள் இருந்து கல்லெறிய வேண்டாம் என் தம்பியை தயவு செய்து கேட்டுக் கொள்கிறேன்'' என்று அண்ணன் ராசதுரை பேசிக்கொண்டிருந்தார்.
அதே மாதம் இன்னுமொரு மேடையில் ''அண்ணன் ராசதுரை கண்ணாடி வீட்டுக்குள் இருந்து கல்லெறிய வேண்டாம் என என்னை கேட்டுக் கொண்டாராம். அண்ணாந்து துப்ப வேண்டாம் என அண்ணனை எச்சரிக்கின்றேன்'' என காசி ஆனந்தன் மீசையையும் முறுக்கி தாடியையும் நீவிக்கொண்டு பேசிக்கொண்டிருந்தார்.

எனக்கு ஞாபகம் தெரிந்து, யாழ்ப்பாண அரசியல் கிழக்கு மாகாணத்துக்கு இவ்வாறு தான் வந்தது. அது அடுக்கு வசனங்களால் எங்களை புல்லரிக்க வைத்தது. சோனி தமிழன் என்ற பாகுபாடின்றி உணர்ச்சி வசப்பட்டோம். தலைவர்கள் போனார்கள். 17 அங்கத்தவர்கள் பாராளுமன்றத்துக்கு தெரிவானார்கள். எதிர்க்கட்சி அந்தஸ்தையும் பெற்றார்கள். லோயர் அமிர்தலிங்கம் எதிர்க்கட்சி தலைவரானார்.

லோயர்கள் என்றார்கள் Q.C.க்கள் என்றார்கள். அதி புத்திசாலிகள் என்றார்கள், சட்டபுத்தகங்களை வைத்தே கிழிகிழி என கிழித்து நாட்டை தூண்டிவிடுவார்கள் என்றார்கள். அடுத்த சித்திரை தனித் தமிழ் நாட்டில்தான் கொண்டாடப்படும் என்றார்கள். நாங்கள் இல(ழ)வு காத்த கிளியானோம்.

பாராளுமன்றத்தில் பல குறை நிரப்பு பிரேரணைகள் நிறைவேற்றப் பட்டன. எங்கள் அடலேறுகள் தான் பேசினார்கள். யாழ் செல்லும் புகையிரதங்களில் 1ம், 2ம் வகுப்புகள் குளிரூட்டப்பட வேண்டும். ஆனையிறவு பாதை நவீன மயப்படுத்தப் படவேண்டும் என்று கோரிக்கைகள் ஒரு பக்கம் ஒலிக்க, மறுபக்கம் அக்கா மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் மகன் காண்டீபனுக்கு பாடசாலை அனுமதிபெற பிரிட்டிஷ், இந்திய தூதுவராலயங்களில் செல்வாக்குகளை பிரயோகித்துக்கொண்டிருந்தார்.

இன்னொரு பிரதிநிதி கொழும்பில் எடுத்த வீட்டுக்கு சீலிங் அடிக்க இந்தோனேசிய தேக்கு நல்லமா' மலேசிய தேக்கு நல்லமா? என ஒரு முஸ்லிம் வியாபாரியிடம் விவாதித்துக்கொண்டிருக்க, மற்றொருபுறம் யாழ். வெங்காயத்துக்கும், உருண்டை கிழங்குக்கும் நல்ல விலை நிர்ணயிக்கக்கோரி பாராளுமன்றத்தில் கட்டை பஞ்சாயத்துகள் நடந்து கொண்டிருந்தன.

அப்போது கிழக்கு மாகாணத்தில் பிடிக்கப்பட்ட மீன்கள், 69% வீதமான இலங்கையரின் உணவுத் தேவையை பூர்த்தி செய்தது. இங்கு விளைந்த நெல். 83% ஆன இலங்கையரின் உணவுத்தேவையை பூர்த்தி செய்தது. இதைப்பற்றி அங்கே பாராளுமன்றத்தில் பேச, நல்ல விலையைப்பெற ஆளில்லாமல் இருந்தது. அண்ணன் ராசதுரைக்கு, தம்பி காசியானந்தனுக்கு எதிராக வேலை செய்யவே நேரம் போதாமல் இருந்தது. அந்தளவுக்கு யாழ் லோயர்கள் இங்கு பிள்ளை கிள்ளி தொட்டில் ஆட்டும் விளையாட்டை அழகாக அரங்கேற்றியிருந்தனர்.

இவர்களது உணர்ச்சி தாலாட்டுகளுக்கு, ஆள் போதாவிட்டால் டொக்டர் உதுமாலெவ்வை, மசூர் மவுலானா, எச்.எல்.எம்.காசீம், அஷ்ரஃப், இலியாஸ் போன்ற காக்காமார்களையும், மேடையில் ஏற்றி, பிட்டும் தேங்காப்பூவும் கதை சொல்லி எம் மனதை கொள்ளை கொள்வார்கள்.

(வெகு காலத்துக்கு பின்பு சகோதரர் அஷ்ரஃப் ஹாஜியார் அவர்கள் செல்வநாயகம் ஐயா அவர்களுக்கு புத்தகமும் வெளியிட்டு சூட்டோடு சூட்டாக பிட்டும் தேங்காப்பூவும் கதைசொன்னார். புல்லரித்து விட்டது போங்கள். காக்கா அஷ்ரஃப் அவர்களே!! கிழக்கு மாகாண சோனியும், தமிழனும் எப்போதையா பிட்டும் தேங்காப் பூவுமாக வாழ்ந்தான். நாம் எப்போதும் நகமும் சதையுமல்லவா? 16வருடத்துக்கு பின் திடீரென இக்கதை சொல்லவேண்டிய அவசியம் என்ன காக்கா? மீண்டும் ஏதாவது எலிவாலைப் பிடிக்கும் எண்ணமா? ஏற்கெனவே நீங்கள் பிடித்துள்ள புலிவால்கள் போதாதா?)

''லோயர்கள்'' அரசியல் போய், 1979வாக்கில் ''தோழர்கள்'' அரசியல் வந்தது. ரொம்ப கண்ணியம், தொண்டைக்குழிக்குள்ளால் பேச்சு, குரலில் ஒரு கரகரப்பு இருக்கும். அசட்டுத்தனமான பார்வை. நீண்ட கால்சட்டை. எல்லாக் கேள்விகளுக்கும் அடிக்குறிப்புடன் புள்ளி விபரம், த.வி.கூவின் தகிடுதத்தங்கள். இரகசிய கூட்டங்கள், நடவடிக்கைகள் என வேலைத் திட்டங்கள் ஆரம்பித்தன.

இக்காலகட்டத்தில் யாழ் நீர்வேலி வங்கிக்கொள்ளை, சாவகச்சேரி பொலிஸ் நிலையம் தாக்குதல், துரையப்பா கொலை, சி.ஐ.டி பஸ்தியாம்பிள்ளை குழு முருங்கன் காட்டில் மர்மக்கொலையென பல நிகழ்வுகள் நடந்து கொண்டிருந்தன.

லோயர்கள் தான் ஏமாற்றிவிட்டார்கள். தோழர்கள் ஏதோ செய்கின்றார்கள். செய்வார்கள் என்ற ஆதங்கத்தில் கிழக்கு மாகாண இளைஞர்கள் தோழர்களுடன் இணையத் தொடங்கினர். நானும் இணைந்தேன். உடல், பொருள், ஆவி அனைத்தையும் இணைத்துக் கொண்டேன்.

1983 கடைசிப் பகுதி தோழர் பத்மநாபா தொலைபேசியில் எனது வீட்டுக்கு (067 - 7296) சென்னையில் இருந்து பேசினார். ''இந்தியாவில் பயிற்சி எடுப்பதற்கான சகல வேலைகளும் பூர்த்தியாகிவிட்டன. உடனடியாக 200 இளைஞர்களை அனுப்பிவைக்கவும்'' என்றார். அன்றைய தினமே மூன்று தரம் இவ்வாறு எடுத்துச் சொன்னார். நான் உடனடியாக அக்கரைப்பற்று, தம்பிலுவில், திருக்கோவில், காரைதீவு, நற்பிட்டிமுனை, கல்முனை, கல்லாறு, களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு, செங்கலடி, மூதூர் ஆகிய ஊர்களுக்கு எனது சொந்த மோட்டார்சைக்கிளில் (சி/90, 83ஸ்ரீ 7290) சென்று தோழர்களை சந்தித்து உடன் யாழ் போகுமாறு சொன்னேன்.

கையில் பஸ்செலவுக்கு கூட பணம் இல்லாது எவ்வாறு யாழ் போவது என தோழர் அனைவரும் ஒட்டு மொத்தமாக கைவிரித்தனர். நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. நாலாம் நாள், நானும் அக்கரைப்பற்றைச் சேர்ந்த கருணாநிதியும் களுவாஞ்சிக்குடியைச்சேர்ந்த இன்னுமொரு இளைஞனுமாக சேர்ந்து அன்று காலை சிகரட் விற்பனைக்காக வந்த சிகரட் வேனை களுவாஞ்சிக்குடி சந்தைச் சதுக்கத்தில் மறித்து ரூபா. 9700 கொள்ளையிட்டோம். (அடுத்த நாள் காலை பத்திரிகைகளில் சிகரட் வேன் கொள்ளை. ரூபா 43ஆயிரம் அபக

→20

www.tamilarangam.net



# பொ.ஐ.மு.வும் 3 ஆண்டுகளும்!



எதிர்வரும் (ஒகஸ்ட்)16ம் திகதியுடன் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்து மூன்று ஆண்டுகள் ஆகின்றன. இந்த நாளை "இளைஞர்களுக்கு துரோக-மிழைத்த நாளா"கப்பிரகடனம்செய்து நாடளாவிய ரீதியில் 150 ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடாத்துவதென தீர்மானித்துள்ளதாக ஐ.தே.க. அறிவித்துள்ளது. பொ.ஐ.மு. அரசாங்கம் இந்த நாட்டு இளஞ் சந்தியினருக்கு துரோகமிழைத்ததைக் கண்டிக்கு-முகமாகவும்தேர்தலுக்குமுன் அதுவாரி வழங்கிய அளவுகணக்கற்ற வாக்கு-றுதிகளுள் எதையும் நடைமுறைப் படுத்தவில்லை என்பதை மக்கள் முன் தெரிவிக்குமுகமாகவும்இந்த ஆர்ப்பாட்-டங்களை ஒழுங்கு செய்துள்ளதாக ஐ.தே.க. அறிவித்துள்ளது. ஐ.தே.க.வின் இந்த அறிவிப்பு வெளியாகிக் கொண்டிருக்கையில் அரசாங்கத்தின் வாக்குறுதியை மீறும் மேலும் இரு புதிய அறிவிப்புகள் வெளிவந்துள்ளன.

ஒன்று, தொலைத்தொடர்பு சேவையை தனியார் மயமாக்கிய நடவடிக்கை. மற்றையது பாணின் விலையை மேலும் 75 சதத்தால் அதிகரித்தமை.

பாணின் இன்றைய விலை, ரூபா 8.25 ஆகிவிட்டது. ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் ரூபா 5 ஆக இருந்த பாணின் விலையை ரூபா 3.50ஆக குறைக்க முடியும் என்றும், அதற்கு பல திட்டங்கள் தம்மிடம் இருப்பதாகவும் அறிவித்த பொ.ஐ.மு. ரூபா 3.50க்கு பாண் வழங்குவதை அதிக காலம் தொடரவில்லை. எந்தக் காரணங்களை ஐ.தே.க. தெரிவித்ததோ அதே காரணங்களைக் காட்டியே பாணின் விலையை அதிகரித்தது. உலகச் சந்தையில் மாவின் விலை கூடும் போதெல்லாம் பாணின் விலை கூடுவது சாதாரணமானது தான் என்ற பாணியில் இப்போது அறிக்கை வேறு விடுகிறது அது.

ஐ.தே.க. தான் எப்படி கடந்த காலத்தில் நடந்தது என்பது ஒரு புறமருக்க அது சொல்வது போலவே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வரும்போது சொன்ன முக்கியமான வாக்குறுதிகளை எடுத்துப்பார்த்தால், அவற்றில் ஒன்றைத் தானும் அது நடைமுறைப்படுத்துவதில் உறுதியாக இருக்கவில்லை என்பது தெளிவாகும். யுத்தத்தை நிறுத்துவது சமாதான ரீதியாக இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பது, தனியார் மயமாக்கலை நிறுத்துவது, ஜனாதிபதி முறைமையை ஒழித்து பாராளுமன்ற ஆட்சி முறையைக் கொண்டுவருவது, ஊழல், அதிகார துஷ்பிரயோகம், வீண் விரயம் என்பவற்றைக் கட்டுப்படுத்துவது, அரசியல் படுகொலைகளை நிறுத்துவது என்று பொ.ஐ.மு. அறிவித்த வாக்குறுதிகளின் மழையில் உண்மையில் மக்கள் திக்கு முக்காடித்தான் போனார்கள்.

ஜனநாயகம் வரும், சமாதானம் வரும், நாட்டிலே நல்லாட்சி வந்து விட்டதால் நாம் இனி நிம்மதியாக வாழ்ந்து விடலாம் என்ற நப்பாசையில் அவர்களும் இந்த அரசாங்கத்துக்குப் பதவியைக் கொடுத்துப் பார்த்தார்கள். ஆறு கடக்கும் வரை அண்ணன் தம்பி ஆறு கடந்த பின் நீ யாரோ நான் யாரோ என்ற கதையாக புதிய அரசாங்கமும், மற்றெல்லா அரசாங்கங்களையும் போலவே மக்களை தூக்கி யெறிந்து விட்டு நடக்கத் தொடங்கியது. எந்தத் தவறுகளையெல்லாம் ஐ.தே.க. வின் பதினேழு ஆண்டுகால காட்டாட்சியின் போது நடந்த தவறுகள் என்று சுட்டிக் காட்டியதோ அதே தவறுகள் வேறு நபர்களுடன் வேறு வடிவங்களில் தொடர்ந்தன. ஆட்கள் மாறினார்கள் அரசாங்கம் மாறியது பச்சைக்குப் பதில் நீலமும் சிகப்பும் கலந்த புதிய நிறம் வந்தது. ஆனால் வேறு எவையும் மாறவில்லை. மாறாக அவை முன்பிருந்ததை விட அதிகரித்த வேகத்தில் வளர்ந்து கொண்டே சென்றன.

வடக்கு கிழக்குக்கான பேச்சுவார்த்தை முயற்சி, எல்லா பிழையும் புலிகளதே என்று புலிகள் மீது குற்றஞ் சாட்டியபடி உடைப்பில் போட்டது. ஐ.தே.க.கால இன ஒழிப்பு, யுத்தம் திரும்பவும் சமாதானத்துக்காக என்ற பெயருடன் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. "நான் எந்தப் பிசாசுடனும் கூட்டுச் சேருவேன்" என்ற ஜே.ஆரின் புகழ் மிக்க வாசகத்தை அப்படியே பிரதிபலிக்கும் விதத்தில், இன்னொரு ஐ.தே.க. வாக பொ.ஐ.மு. இயங்கத் தொடங்கியது. உலக வங்கிக்கும், சர்வதேச நாணய நிதியத்துக்கும் தாளம் போட்டபடி மானியங்களை வெட்டுவதிலும் தனியார் மயமாக்கலிலும் இறங்கியது. ஊழல் தவறான முகாமைத்துவம் என்பவை காரணமாக நஷ்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களையே தனியார் மயமாக்குகிறோம் என்று கூறியபடி ஐ.தே.க.வால் தொடங்கப்பட்டதே இந்த பொதுச் சொத்துக்களை தனியாருக்கு விற்கும் செயல். இதையே இந்த அரசாங்கமும் செய்தது. அதிலும் அதிகளவு லாபம் தருகிற நிறுவனங்களையும் மிகவும் மலிவான கேள்விக்கு கொடுக்க முயன்றது. இலங்கை மின்சார சபை ஊழியர்கள் இவ்வாறு தனியாருக்கு கொள்ளை யடிப்பதற்கு வாய்ப்பாக மின்சார சபையின் சொத்துக்களை விற்பதை எதிர்த்து வேலைநிறுத்தத்தில் இறங்கிய போது அவர்களது வேலை நிறுத்தம் தடை செய்யப்பட்டது. துப்பாக்கி முனையில் ஊழியர்கள் மிரட்டப் பட்டார்கள். தொழிலாளர் உரிமைகள், தொழில் சாசனம் என்பவற்றைப் பற்றி வாய் கிழியப் பேசிய அரசாங்கம் தொழிலாளர்களின் போராட்டத்தை துப்பாக்கி முனையில் நசுக்கியது.

ஜனாதிபதி முறைமையை ஓராண்டுக்குள் ஒழித்துவிடுவதாக கூறிய ஜனாதிபதி அலரி மாளிகைக்கு குடிபோனதைத் தவிர வேறு எதையும் செய்யவில்லை. பதிலாக அதைத் தொடர்ந்து பேணுகிற விதத்திலேயே அவரது பேச்சுக்கள் அமைந்து வருகின்றன. தென்கொரிய சர்வாதிகார அமைப்பின் காரணமாக அங்கு ஏற்பட்டுவரும் அபிவிருத்தி பற்றி அவர் சிலாகித்துப் பேசியது யாரும் அறியாத விடயமல்ல.

பத்திரிகை சுதந்திரம் பற்றி பேசியும், பத்திரிகையாளர்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றுக் கொண்டும் பதவி வந்த அரசாங்கம் அவர்களையும் தூக்கி எறிந்தது. அடிதடி மிரட்டலில் இறங்கியது. குற்றவியல் சட்டத்தின் கீழ் அவர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்தது.

இப்படியே அரசாங்கம் சொன்னதைச் செய்யாமல் விட்டது மட்டுமல்லாமல், சொன்னதற்கு நேரெதிராகவே பல விடயங்களில் ஈடுபட்டு வருகிறது என்பது பற்றி நிறையவே சொல்லிக்கொண்டு போகலாம். ஐ.தே.க. ஆட்சிக்காலத்தில் இருந்த ஆட்கடத்தல் காணாமல்போதல், அரசியல் படுகொலைகள் கூட இன்னமும் இருந்து வருகின்றன. ஐ.தே.க. ஆட்சிகால படுகொலைகள் பற்றிய விசாரணைகளில் பெரும் பாலானவற்றிற்கு இவை பற்றிய தகவல்களை அறிவதை விடவும் ஐ.தே.க. வினை அம்பலப்படுத்துவதே பிரதான நோக்கமாக இருந்து வந்தது. முக்கியமான பல கொலைகள் பற்றிய விசாரணைகள் அப்படியே தூங்கிக் கிடக்கின்றன. பதிலாக புதிய படுகொலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகியுள்ளன.

ஆக, இந்த அரசாங்கம் எதுவுமே செய்யவில்லையா என்ற கேள்வி இந்த இடத்தில் எழுகிறது. இதேவேளை, புதிய அரசாங்கம் ஐ.தே.கவை விட எவ்வளவோ மேலானது அதில் ஆயிரம் குறைகள் இருந்தாலும் கூட அது ஐ.தே.க. வினை விட சிறப்பானது தானென்று அரசுக்கு சார்பாக வாதிப்பவர்கள் கூறுகிறார்கள். இந்த அரசாங்கம் வடக்கு கிழக்கு இனப்பிரச்சினை தொடர்பாக நேர்மையாக நடந்து வருகிறது, பிரச்சினைகளை அணுகுவதில் அதன் அணுகுமுறை ஜனநாயகபூர்வமானது, சமாதானத்தை நாட்டில் ஏற்படுத்துவது தொடர்பான ஜனாதிபதியின் நடவடிக்கைகள் பாராட்டப்பட வேண்டியவை, அரசியல் தீர்வுத் திட்டமொன்றை இதுவரை காலமும் இல்லாத அளவுக்கு வடக்கு கிழக்கு மக்களுக்கு அதிகாரங்களை வழங்கும் திட்டமொன்றை அது முன்வைத்துள்ளது, இத்தியாதி இத்தியாதி என்று அவர்கள் கூறுகிறார்கள்.

ஆக, அரசாங்கம் என்னவெல்லாம் செய்திருக்கிறது என்பதற்கு இவர்களது இத்தனை நியாயங்களும் இருக்கவே செய்கின்றன. ஆனால் துரதிருஷ்டம் என்னவென்றால் இவையெல்லாம் இவர்களால் வெறுமனே சொல்லப் படுகின்றன என்பதைத் தவிர எந்த நடைமுறை உதாரணங்களையும் இவர்களால் காண முடியவில்லை என்பது தான்.

இனப்பிரச்சினைக்கான தீர்வாக முன்வைக்கப்பட்ட பொதி, என்ன விடங்களை உள்ளடக்கி இருக்கிறது என்பது இன்னமுமே தெளிவாக இல்லை. தெளிவு படுத்தப்பட்டவை மாகாண சபைகளது அதிகாரங்கள் பற்றி பேசுகின்றனவே ஒழிய அவை இனப்பிரச்சினையை தீர்க்குமா என்பது தெளிவாக இல்லை. அவை கூட மத்திய அரசால் தேவை ஏற்படும் பட்சத்தில் பாதிக்கப்படக் கூடிய அதிகாரங்களாகவே உள்ளன என்று சிங்கள மொழி மூல பிரச்சாரங்கள் நடாத்தப்படுகின்றன. எல்லாத் தமிழ்க் கட்சிகளும் வேறு இதைப் போதாது போதாது என்று கூறுகின்றனர்.

ஜனாதிபதி ஆட்சி பற்றி யாரும் மூச்சு விடுவதாகக் காணோம். அது மறந்து போன கதையாகவே இருக்கிறது.

இது தான் நிலவுகிற நிலை.

இந்த நிலையிலேயே மூன்று ஆண்டுகள் ஓடி மறைந்து விட்டன.

இன்றுமுள்ள மீதி காலத்தில் இந்த அரசாங்கம் புதிதாக எதைத்தான் செய்யப்போகிறது என்று எதிர்பார்ப்பது?

ஐ.தே.க. 17 வருட காலம் ஆட்சியிலிருந்து மக்களுக்காக செய்ததெல்லாவற்றையும் கடந்த மூன்றாண்டுகளுக்குள் சாதித்து விட்டிருக்கிறது இந்த அரசாங்கம்.

இதை அரசாங்கத்தின் சாதனை என்று சொல்லாமல் வேறு என்னவென்று சொல்வது?

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ல.ச.ச.கட்சியின் செயலாளர் பட்டி வீரக்கோன் அண்மையில் ஒரு பேட்டியில் இவ்வாறு சொல்கிறார்:

"இந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகளும் ஐ.தே.க. வின் நடவடிக்கைகள் போலவே இருக்கின்றன"

-இதைவிட விட வேறு என்ன சாட்சி வேண்டும்.

மூன்று ஆண்டு சாதனைகள் அபாரம் தான் போங்கள்

# கூட்டணியே காரணம்!

யாழ் நகர மேயர் அல்பிரட் துரையப்பாவின் 22வது சிரார்த்த தினம் யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரால் அனுஷ்டிக்கப்பட்டது. கூட்டமும் நடை பெற்றது. துரையப்பாவின் ஆதர வாளர்கள் பலர் பேசினார்கள். எல்லோரும் கூட்டணியைத் தாக்கியே பேசினார்கள்.

பிரபாகரனில் குற்றமில்லை. தனி நாடு, தமிழ் ஈழம் என்று தீவிர வாதத்தை வளர்த்தவர்கள் கூட்ட ணியினரே அன்று துரையப்பாவின் கொலையை கண்டிக்காத கூட்டணி இன்று தங்கத்துரையின் கொலையை கண்டிக்கிறது என்றார் ஒருவர்.

துரையப்பா கொலை வழக்கில் எதிரிகளுக்காக வாதாடியது கூட்டணி. தனிநாடுதான் எமது தீர்வு என்று சொன்னவர்கள் இன்று கொழும்பில் இருந்து கொண்டு அதிகாரப்பரவலாக்கல் பற்றிப் பேசுகின்றனர் என்றார் ஒருவர்.

செத்துமடிந்தாலும் தமிழ் ஈழமே லட்சியம் என்று கூறிய தலை வர்கள் வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் கோரி சிறப்பாக வாழுகின் றனர் என்றார் மற்றொருவர்.

இதனை ஒரு தேர்தல் பிரச்சாரக் கூட்டம் போல சுதந்திரக் கட்சியி னர் பயன்படுத்தியுள்ளனர். எமது நாடு யாழ்ப்பாணம், மக்கள் அழி வுக்கு கூட்டணியே காரணம், மக் களே சிந்தியுங்கள். கூட்டணியை நம்பி ஏமாற வேண்டாம் எனவும் பேசப்பட்டது.

**மரிவேந்தன்**

# கேட்காதே...

எதிர்ப்பதாக ஜே.வி.பியினர் கூறியுள்ளனர்." என சில பிரபல்யமான பாடசாலைகளில் ஆசிரியர்கள், பெற்றோர்கள் மத்தியில் பிரச்சாரப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான அரசின் கட்டுக்கதைகளுக்கு ஜே.வி.பி பலியாவதற்குக் காரணம், தமிழ் மக்களின் பிரச்சினை குறித்த அதன் தெளிவற்ற கொள்கையும், இரட்டைப்போக்குமே.

ஜே.வி.பி.யின் பிரச்சாரத்தை முறியடிக்க வெனப் பல புதிய வாக்குறுதி களை அண்மையில் கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான அறிவித்திருந்தார். அதில் ஒன்று சீர்திருத்தத்தில், க.பொ.த. உயர் தரப் பரீட்சையை ஒருவர் இருமுறை மாத்திரம் தோற்றலாம் என்ற ஆணைக்குழுவின் விதந்துரைப்பை 3 முறையாக மாற்றியுள்ளதாகவும் புதிய பல்கலைக்கழகங்கள் ஆறு திறக்கப்படவுள்ளதாகவும், தெரிவித்திருந்தார். ஆனாலும் இது பூரணமான, பொறுப்பான தார்மீக ரீதியான பதிலே அல்ல. பல பத்திரிகைகளுக்கு இது குறித்து அமைச்சர் பேட்டி அளித்துள்ள போதும் அதில் மழுப்பல் பதில்களே. பெரும்பாலும் கூறப்பட்டுள்ளன. சகல கேள்விக்குமான பதிலை அமைச்சர் எங்கும் தந்ததில்லை.

## 1997 சிறந்த முட்டாள்களை உருவாக்கும் ஆண்டு

1997ஆம் ஆண்டினை அரசாங்கம் "கல்விச் சீர்திருத்த ஆண்டு" என பிரகடனப்படுத்தியிருந்தது. அது அப்படியல்ல, கல்விச் சீர்திருத்தம் என்ற பெயரில் ஆதிக்க சக்திகளின் சந்தைக்கு உகந்த சிறந்த முட்டாள்களை உருவாக்குவதற்கான தொடக்க ஆண்டே இது என்றால் பொய்யில்லை.

ஜயதிலக்க கமிட்டியின் உள்ளடக்கம், அதன் பாதிப்புகள் மற்றும் தமிழ் மாணவர்களின் கல்வியை எப்படிப் பாதிக்கப் போகிறது என்பது பற்றியும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரின் பேட்டியையும் அடுத்த இதழில் காண்போம்.

**-கோமதி**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இறுதிப் பகுதி.

இயற்கையுடனான உறவுதான் இவருக்கு இப்படி ஆகிப்போய் விட்டதெனின் மனிதனே புலம் பெயரா நினைவுகளும் உறவுகளும் எவ்வாறு அவருக்குள் வாழ்ந்து கொண்டிருக்கின்றது?

தனது சிநேகிதியின் நினைவுகளைக் கூட அவருக்குள் எப்படித்தான் ஞாபகப்படுத்திக் கொள்ள முடிகின்றது?

*ஒழுங்கைக்கு இறங்கு முன்*
*படலையிலோ கிடுகு இடுக்குகளிலோ*
*உன்னைச் சொருகி விட்டுப் போகவேண்டும் நீ*
*உச்சங்களைச் சுமந்த படி*

*எதிர்த்துப் பேசியோ*
*முறைத்துப் பார்த்தோ-நீ*
*ஆண்குறியைத் தீ மூட்டி விடக் கூடாது.*

**பக்.46**

இங்கு சிநேகிதியிடமிருந்தும் ஒழுங்கைகள் நாடு போன்றவற்றிடமிருந்தும் மேற்கொள்ளப் படும் விலகிய மனமும் தூரமும் ஆண், பெண் ஆதிக்க உறவுகளை உடலின் உறுப்புக்களை வைத்து அடையாளப்படுத்துவதும் கவிதைக்கு உரியது. இந்த விளக்கம் மேற்கின் மனம் பூர்விக மனத்துக்குள் நுழைவதால் நேர்வது. ஆண்குறி எனும் வார்த்தைப்பிரயோகமும் கூட வெளியில் இருந்து விமர்சனமாக மேற்கொள்ளப் படுவதுதான்.

தான் முன்பு கவனித்திராத, தவறவிட்ட மரமோ தாவரமோ எதுவோ ஒன்றின் வளர்ச்சியை நினைவுக்குள் கொண்டுவரும்போது அலசிப் பார்க்கிறான், புலம்பெயர்ந்தவன்.

*கிழடு தட்டி*
*கம்பி வேலியில் முதுகு வைத்துச் சாய்ந்திருந்தது.*
*..........*
*..........*
*பார்த்துக் களிப்புறும் எனது ஆசை*
*நிறைவேறாமல் போகும் எனில்,*
*எனது கனவுகளை*
*ஆதன் அருகில் புதைத்து விடுங்கள்*
*வேர்களில் நான் முளைக்க.*

**/பக்.48 - 49**

எங்கேயோ போகமாக வாழ்ந்து கொண்டிருப் பவன் என ஆதார நாட்டு மக்களால் நினைக்கப்படுபவன், ஏன் இங்கிருந்து கொண்டு, 'வேர்களில் நான் முளைக்க' கனவுகளைப் புதையுங்கள் எனக் கேட்கிறான்?

*எனது உடலின் உஷ்ணத்தை*
*குளிர் தின்றுகொண்டிருந்தது*
*..............*
*..............*
*விரல் நகங்களை*
*சதையிலிருந்து விளக்கும் வெறி அதுக்கு.*
*நான் ரயிலுக்காக காத்திருக்கிறேன்.*

**/பக். 38**

ரெஸ்டோரெண்டில் தட்டுக் கழுவிட்டோ, லொண்றியில் (வருணம்) செய்து விட்டோ, மூன்றாம் உலகத்தவர்களுக்கென ஒதுக்கப்பட்ட வேலைகளில் இருந்து நள்ளிரவில் மீண்டு வீடு திரும்புவதற்கு குளிர் நாட்களில் ரயிலுக்கோ பஸ்ஸுக்கோ காத்திருப்பது மிகக்கொடு மையான அனுபவம்.

ஐரோப்பியர்கள் எல்லாம் தூங்கிக்கொண்டிருக்கும் அதிகாலையில் எல்லாம் ஜடமாக உறைந்திருக்கிறபோது அகதி மனிதன் மட்டுமே நகர்ந்து கொண்டிருப்பதான அனுபவம் மிகக் கொடுமையானது. இந்த உச்சியிலை மரங்கள் பசும் புற்கள் போன்றவற்றுக்கு அப்பாலும் அவன் எதைத் தான் எதிர்பார்க்கிறான்.

*கோடை கால பசுமை பரப்புள்*
*நலிந்து கிடந்தன*
*கரடு தட்டிய மலைகள்*
*அப்பால் தான்*
*எல்லாம் நடந்து கொண்டிருக்கிறது*

*ஊசித் தலையுடன்*
*இரட்சத உருவமாய்*
*பூமியை நசுக்கும் மலைகளின்*
*முதுகுப் புறத்தில் நின்று*
*எதை நான் தேடுகிறேன்?*

**/பக் 27-28**

ஆயிரக்கணக்கான மைல்களுக்கும் சமுத்திரங் களுக்கும் அப்பாலும் இருந்தாலும் மலைக்கும் பசுமையும் அவனை மலைகளுக்கு அப்பால் இருந்து தாய் நாட்டை பார்க்கும் அருகாமை யைக் கொண்டு வந்து விடுகிறது. சில நேர சாயங்கால ஆரஞ்சு வானம் எமது வீட்டைக் கூட அருகில் இருந்து உணரச் செய்து விடுகிறது.

அம்மா கொழும்பில் இருந்து பேசுகிறாள். சகோதரங்கள், உறவுகள், மண்ணின் உறவுகள் என எத்தனையோ பேர். எத்தனை பேர் இவனது உயிரற்ற வாழ்க்கைப்பற்றின கவலை களைப் புரிந்து பரிவுடன் நோக்குகிறார்கள். புரிந்து கொள்ளப்படாமல் நள்ளிரவுகளில் கேட்கும் தொலைபேசி மணி -

*தனது காலில் தட்டுப்படும் எல்லாவற்றையும்*
*உதைத்து நொருக்கி*
*இருளில்*
*என்னை வந்து உலுக்கி எழுப்புகிறது*


*கடைவாயால் ஒழுகும் சிரிப்பும்*
*தேவைகளும்*
*எனது உழைப்பை அதிகம் கேட்டு*
*சுற்றி நின்று தொந்தரவு செய்யும்*


**/பக் - 56**

முதலிலேயே அநேகமாக ஏழு நாட்கள் தினமும் குறைந்த பட்சம் 16 மணிநேரம் வேலை செய்வான். இப்போது மறுபடியும் உடல் இற்றுப்போகிற மாதிரி வேலை செய்ய வேண்டும். லொறி வாங்கவும், சீதனம் கொடுக்கவும், கோவில் தேர் விடவும், இங்கு இவன் செத்து செத்து பிழைக்கவேண்டும்.

இவன் தூங்குவதே இல்லை. தூங்க வேண்டும் என்பது கூட இவன் கனவுதான். இவனது அவஸ்தைகளுக்கு முடிவேயில்லை.

*இன்று எனது அறையை யார்*
*சோதனை செய்தார்?*
*................*
*அடுக்கி வைத்த பழைய நினைவுகள்*
*கிளறப்பட்டுக் கிடந்தன*
*................*
*அம்மா!*




# பிளவுண்ட மனங்களும் நாடோடிப் பாடல்களும்

*எனது வேர்களை பத்திரப்படுத்து*
*நன்கே நீர் ஊற்று*
*அதற்குள் எனது கனவுகளை ஒளித்து வை!*

**/பக் -41-42**

சோதனை. இராணுவத்தின் சோதனை. அமைதிப்படை என்பவற்றால் சோதனை. மாற்று இயக்கத்தவர் சோதனை. அடுத்த மனிதனின் சோதனை. இக்ககரைக்கு வந்தாலும் நினைவுகளின் சோதனை.

இவையெல்லாவற்றிற்கும் காரணம் தான் என்ன? சாவு, நம்பிக்கையின்மை, நினைவுகள் எழுப்பும் அவலம், ஏக்கம் என்றுதான் தொலையும் இந்த நிரந்தரத் துயரம்.


ரவியின் கவிதைகளில் மட்டுமே அநேகமாக ஒரு பத்தாண்டுகளில் வெளியான கவிதைகளில் ஒரு சிலவற்றை குறிப்பிடத்தக்க கவிதை; இனியொரு மூளை செய்வோம், அதை எந்த நாளும் காப்போம்!

வீழ்ந்துபட்ட அரசியல், விடுதலைக் கருத்தியல்கள், கலாசார பெருமையின் போலி நிலை போன்றவை குறித்த அற்புதமான முழுமைப் பெற்ற ஒரு குறியீட்டுக் கவிதை இது. இதுவும் கூட விழுது விடும் கொலுயென்றே ரவியால் பார்க்க முடிந்திருக்கிறது.

*புத்தகங்களை உதறியபோது கொட்டிய*
*சொற்களில் எல்லாம்*
*அது விழுது விட்டிருந்தது*
*...........*
*வீடுதான் கொலுவைத் தாங்கி வைத்திருக்கிறது*
*வீடு குலைக்கப்பட வேண்டும் என்றனர் சிலர்*
*................*
*கொலுவை வெட்டி எறிந்தாக வேண்டும்*
*எனப்பட்டது*
*வெட்டினேன்*
*ஆனாலும் என்னையறியாமலே*
*குசினிக்குள்ளோ கட்டிலின் கீழோ*
*குழந்தையின் தொட்டிலிலோ*
*விழுதின் எச்சங்கள் முளைவிடுவதுண்டு*
*ஜீரணமாகாமல்*
*நான் வாந்தி எடுக்கும் போதும் கூட*
*ரோமம் முளைத்த சொற்களாய் வந்து*
*விழுகின்றனர்*

**/பக் -5**

குசினி, கட்டில், தொட்டில் போன்றவை தனி மனிதனின் அந்தரங்கம் சார்ந்தவை. அதில் கூட விழுதுகள், வாந்தியில் கூட விழுதுகள், ரோமம் முளைத்த சொற்கள். கருத்தியல் கலாசாரம் நம்பிக்கைகள் போன்ற சகலமும் குறித்த அதிகாரத்துக்கெதிரான சகிப்பின்மையை வெளியிடும் உக்கிரமான கவிதை இது.




"ஐரோப்பியர்கள் எல்லாம் தூங்கிக் கொண்டிருக்கும் அதிகாலையில் எல்லாம் ஜடமாக உறைந்திருக்கின்ற போது அகதி மனிதன் மட்டுமே நகர்ந்து கொண்டிருப்பதான அனுபவம் கொடுமையானது."

**யமுனா ராஜேந்திரன்**

*உண்பதற்கு மட்டுமே வாய்*
*என்றான போது மூக்குத் துவாரத்தினூடோ*
*மலவாசலினூடோ*
*உண்பதை மாற்றி விட்டால் என்ன*

**/பக் - 24**

என்று கேட்கும் ரவியிடம், இந்த சாவு, அழிவு போன்றவற்றில் இருந்து கற்றுக்கொண்டு நம்பிக்கையாகப் பார்க்க ஏதேனும் மிச்சம் இருக்கிறதா?

*அவலமாய் விழும்*
*மழை நீர்த் துளியும்*
*துகள்களாய்ச் சிதறி*
*மறைந்தே போயின*
*ஆனால்*
*வெள்ளம் என*
*சேதி வந்தது மறுநாள்*

**/பக் -16**

உடைந்த கனவுகளை திரட்டிக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. இறந்து பட்ட இயற்கையைப் பற்றியும் குழந்தைகளுக்காகவது சொல்லத்தான் வேண்டும்.

*எனது நீலச் சிறகுப் பறவை*
*இறந்ததாய்ப் பேசி தொலைக்காதீர்கள்*
*அது தன் இராட்சத செட்டை பெயர்த்து*
*பறந்து விடும் என*
*என் குழந்தைக்கு*
*நான் கதை சொல்லிக்கொண்டிருக்கிறேன்*

**/பக் - 60**

3

*காயம் பட தெறிக்கும் சொற்கள்*
*வெளியே விழுந்திடாதபடி*
*அவதானமாய் வாயை மூடிக் கொள்கிறேன்*
*.....................*
*.....................*
*மனிதம் மட்டும் அகலும் போது*
*நான் சுதந்திரமானவன்*
*என்று அர்த்தப்படுத்திக் கொள்வேன்*

**(பக் / 44 செட்டைக் கழற்றிய நாங்கள்)**

*எனக்கு இது மிகவும் சுலபம்.*
*நிரந்தரமான ஒரு புன்னகையோடு*
*எனது கழுத்தை*
*கொலைக் களத்தில் வைப்பேன்*
*வாழ்க்கையைக் காட்டிலும்*
*கொடுமையான ஒன்று*
*எங்கேனும் எனக்கு காத்திருக்கிறது எனச்*
*சொல்லமாட்டேன்.*
*ஆனால் கொலையாளி தனது*
*வெட்டறிவாளை ஓங்கி*
*எனது கண்களுக்குள் நேராகப்*
*பார்த்தேயாகவேண்டும்*

*என் கண்களுக்குள் அவன் என்ன பார்த்தான்*
*ஒரு பச்சை கண்ணாடியில்*

*இதைத்தான்;*
*இன்னொரு கொலையாளி அவனுக்கு*
*மேலே வெட்டறிவாளை*
*தாங்கிக்கொண்டிருக்கிறான்*
*அவனுக்கு மேலே இன்னொரு கொலையாளி*
*அவனுக்கும் மேலே வேறு ஒரு கொலையாளி*
*அவனுக்கும் மேலே மற்றொரு கொலையாளி*
*அவனுக்கும் மேலே பிறிதொரு கொலையாளி*

*இன்னொருத்தனுக்கும் மேலே*
*இன்னொருத்தன் என*
*தொடர்ச்சியாக இடையராது*
*நம்புங்கள்*
*இது எனக்கு மிகச் சுலபம்*

*நிரந்தரமான ஒரு புன்னகையோடு*
*எனது கழுத்தை*
*கொலைக் களத்தில் வைப்பேன்*

*வாழக்கையைக் காட்டிலும்*
*கொடுமையான ஒன்று*
*எங்கேனும் எனக்குக் காத்திருக்கிறது என*
*சொல்லமாட்டேன்*
*ஆனால் கொலையாளி தனது*
*வெட்டறிவாளை ஓங்கி*
*எனது கண்களுக்குள் நேராகப்*
*பார்த்தேயாகவேண்டும்.*

*கண்களுக்குள் நேரடியாக.*

**(ஜோசிப் ஒஸ்தி பொஸ்யினியா** In klaonica)

எல்ஸால்யிவர் தேசவிடுதலைப் போராட்டங்களை அனுபவம் கொண்ட சமுகம். பொஸ்னியா பழைய சோசலிசச் சமுக அமைப்பின் ஒரு பகுதி. எல்லா எல்ஸால்வயிர் கவிஞன் ரோஜர் போல்டன் எனும் மகா கவிஞன் கருத்து மாறுபாட்டினால் கொலையுண்டவன். ஜோசப் ஒஸ்தி இனப்படுகொலைகளுக்கு ஆளான நாட்டிலிருந்து வந்தவன்.

தேச விடுதலைப் போராட்டக் கவிதைகளிலும், இன அழிப்புக்கு எதிரான போராட்டக் கவிதைகளிலும் ஈழப்போராட்டம் தொடர்பான கவிதைகளிலும் பல்வேறு பொதுவான அம்சங்கள் இருக்கின்றன.

புலம்பெயர்ந்த கவிதைகளைப் புரிந்து கொள்வதில் இந்த ஒப்பீடுகள் இப்போது மிகவும் அவசியமானதாகும். கவிதைகளில் இடம்பெறும் நேரடியான அரசியல் பிரச்சினைகள் அது எழுப்பும் அகவுலக நெருக்கடிகள், கவிதையை வெறுமனே தத்துவ விசாரமாகவே, வாழ்வின் அர்த்தத்தை நோக்கிச்

→13

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## வடமாகாண முஸ்லிம்களின் வெளியேற்றத்திலிருந்து இன்றுவரை

| காலம் | நிகழ்ச்சி |
|---|---|
| 1990 செப். முன் | தமிழ் முஸ்லிம் இன உறவு என்றும் போல் ஐக்கியமாகக் காணப்பட்டது. |
| 1990 ஒக். முன் | தமிழீழ விடுதலைப் புலிகளால் மன்னார், யாழ்ப்பாணத் தனவந்தர்கள் பலர் பணம் பறிக்கும் நோக்கில் கைதியாக்கப்பட்டனர். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்திருந்த முஸ்லிம்கள் ஆயுதங்கள் பறிக்கப்பட்ட பின் இயக்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். |
| 1990 ஒக்டோபர் இறுதி | தமிழீழ விடுதலைப் புலிகளின் முஸ்லிம்களை வெளியேற்றும் உத்தரவு. |
| 1990 ஒக்டோபர் 22 | மன்னார்த் தீவு வெளியேற்ற உத்தரவு (48 மணித்தியால அவகாசம்) |
| 1990 ஒக்டோபர் 24 | முசலி, மாந்தைப் பிரதேசங்கள் (48 மணித்தியால அவகாசம்) |
| 1990 ஒக்டோபர் 24 | முல்லைத்தீவு, வவுனியா (48 மணித்தியால அவகாசம்) |
| 1990 ஒக்டோபர் 24 | கிளிநொச்சி மாவட்டங்கள் (48 மணித்தியால அவகாசம்) |
| 1990 ஒக்டோபர் 30 | யாழ்ப்பாண மாவட்டம் (24 மணித்தியால அவகாசம்) |
| 1990 நவம்பர் | வடமாகாணம் முஸ்லிம்கள் அற்ற பிரதேசமாகியது. |
| 1990 நவம்பர் | **முஸ்லிம் அகதிகள் வருகை:** வடமாகாண முஸ்லிம் அகதிகள் தென் மாகாணங்களை நோக்கி கடல் வழியாகவும், காட்டு வழியாகவும் சாரி சாரியாக தஞ்சம் கோரி வருகை. புத்தளம், குருநாகல், அனுராதபுரம் போன்ற இடங்களில் இருந்த முஸ்லிம் பாடசாலைகளிலும், பள்ளிவாசல்களிலும் முஸ்லிம் அகதிகளுக்கு தற்காலிக தஞ்சம். |
| 1991 பெப்ரவரி | பாடசாலைகள் திரும்பவும் ஆரம்பிக்கப்பட்டதால் அயலில் உள்ள அரசு, தனியாருக்குச் சொந்தமான தரிசு நிலங்களில் தற்காலிக குடிசைத் தொகுதி (அகதி முகாம்)கள் அமைக்கப்பட்டன. |
| 91 பெப்.முதல் இன்றுவரை | **அகதிகளாக முஸ்லிம்கள்** பலவந்தமாக வெளியேற்றப்பட்டவர்கள் என்ற பொருள்பட்ட - அகதிகள் (Refugees) என்று வடக்கு முஸ்லிம்கள் அரசாங்கத்தாலும், சர்வதேச தாபனங்களாலும் (உ+ம UNHCR) அங்கீகரிக்கப்பட மறுக்கப்பட்டனர். இடம்பெயர்ந்தவர்கள் (Displaced People) என வரைவிலக்கணப்படுத்தப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன. **திட்டமிடப்படாத அகதி நிவாரணமும் அதன் விளைவும்** * உடல் நல ஊட்டச்சத்து சீர்கெட்டுச்செல்லல் * சுகாதார சீர்கெடு * சரும, மூளை, வயிறோட்ட, உளவியல் நோய்களின் அதிகரிப்பு * மாலை நேரப்படசாலை முறையும், கல்வி வீழ்ச்சியும் * உயர் கல்வி வீழ்ச்சி * பாதுகாப்பற்ற முகாம்கள் தீக்கிரையாகுதல் * முகாம் காலாசாரம் ஒழுக்க வாழ்க்கைக்கு சவாலாக அமைந்தமை. |
| 1991 நவம்பர் | **மீள் குடியேற்ற முயற்சிகள்:** இராணுவ கட்டுப்பாட்டில் இருந்த மன்னார் தீவு, முஸ்லிம் கிராமங்கள் சிலவற்றிற்கு ஏறக்குறைய 300 குடும்பத்தவர்கள் மீள் குடியேற்றப்படல். |
| 1993 | அது போல் வவுனியா மாவட்ட எல்லையில் அமைந்திருந்த முஸ்லிம் கிராமங்களும் மீள் குடியேற்றம் செய்யப்பட்டது. ஆயினும் மிகப் பெரும்பான்மையான வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் இன்று வரை அகதி முகாம்களில் இருக்கின்றனர். |
| | **வட மாகாண முஸ்லிம்கள் பற்றி விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு** |
| 1990 ஒக்டோபர் | புலிகளின் பிரசாரம்: 'தமது சொந்த பாதுகாப்பிற்காக முஸ்லிம்கள் வடக்கை விட்டு வெளியேறுகின்றனர்.' |
| 1993 | 'யோகி' ( விடுதலைப் புலிகளின் அரசியல் பிரச்சாரப் பொறுப்பாளர்): 'முஸ்லிம்கள் வடக்கின் நிலையான குடிகள் அல்லர். வந்தவர்கள் மாத்திரமே.' |
| 1994 ஏப்ரல் | அன்டன் பாலசிங்கம் விடுதலைப் புலிகளின் பிரதான கொள்கை வகுப்பாளர்) முஸ்லிம்கள் தவிர்க்க முடியாத காரணத்தால் வெளியேற்றப்பட்டனர். |
| 1994 செப்டம்பர் | வேலுப்பிள்ளை பிரபாகரன் (விடுதலைப் புலிகளின் தலைவர்): 'முஸ்லிம்கள் துரதிருஷ்டவசமாக, சந்தர்ப்ப சூழ்நிலைகளால் அகதிகளாக வேண்டிய நிலை எழுந்தது. இதையிட்டு வருந்துகிறோம். அவர்கள் திரும்பிவர அனுமதிப்போம்.' |

**சமாதான முயற்சிகளில் வடக்கு முஸ்லிம்களின் பிரச்சினை**

| கடந்த 4 வருடங்களில் | முயற்சி | வடக்கு முஸ்லிம்கள் பற்றி |
|---|---|---|
| | சமயத்தலைவர்கள் விடுதலைப் புலிகளுடனான சந்திப்பு | கதைக்கப்படவில்லை. |
| | சர்வதேச சமாதானக்குழுக்களின் முயற்சிகள் (UNHCR, ICRC) | ஆக்கமுள்ள முயற்சிகள் எடுக்கப்படவில்லை. |
| 1992 | சர்வகட்சி மாநாடு (APC) | கலந்துரையாடப்படவில்லை. |
| 1993 | பாராளுமன்றத் தெரிவுக் குழு | கலந்துரையாடப்படவில்லை. அத்துடன் சிபாரிசு செய்யப்படவுமில்லை. |
| ஜூன் 1994 | அஷ்ரஃப் தொண்டமான் உடன்பாடு | ஒன்றும் இல்லை. |
| ஜூலை 1994 | அஷ்ரஃ சந்திரிகா உடன்பாடு | வடக்கு முஸ்லிம் மீள் குடியேற்றம் துரிதமாக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| 1994 ஒகஸ்ட் | **பொதுத்தேர்தல்** * வடக்கு முஸ்லிம்களை மாவட்ட ரீதியாக, கிராம ரீதியாக பிளவு படுத்தியது. * அகதிப்பிரச்சினைகள் அடையாளப் படுத்தப்பட வில்லை. * வன்னி மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரசில் ஒரு பிரதிநிதியும் யாழ்ப்பாண மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரசில் ஒரு பிரதிநிதியும் தெரிவு செய்யப்பட்டனர். |
| | **எதிர்காலம்** |
| 1994 ஒக்டோபர் | * புதிய அரசாங்கமும் சமாதானத்திற்கான முயற்சிகளும் * அரசாங்கம் அகதி நிவாரணத்தில்எடுக்க முயன்று வரும் சீர்திருத்த முயற்சிகள் * வடக்கு முஸ்லிம்கள் பற்றிய விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டில் சாதகமான மாற்றம. * மாறாத வாழ்க்கை |

அட்டவணைகள்: எஸ்.எச். ஹஸ்புல்லா நன்றி-அகதி

கட்டுரை:ஏ.எம்.றஷ்மி

படம்:எம்.கே.எம்.ஷகீப்



# காவு கொள்[illegible]

வடக்கிலிருந்து 1990 ஒக்டோபரில் விடுதலைப்புலிகளால்வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களது அகதி அவல வாழ்க்கை இந்த ஆண்டுடன் ஏழு ஆண்டு பூர்த்தியை எட்டுகிறது. இவ்வளவு காலமாகியும் மாறாத் துயருடனும் பிறந்தகத்து நினைவுகளுடனும் காலந்தள்ளும் இவர்களை அவர்கள் வாழும் அகதி முகாம்களுக்குச் சென்று பல பத்திரிகையாளர்கள் சந்தித்து உரையாடினர். இந்த சந்திப்பு ஏற்பாட்டை வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. அகதிகளுக்காக பல வகைகளிலும் குரல் கொடுத்து வரும் இவ்வமைப்பு ஏழு ஆண்டு பூர்த்தியை நினைவு கூரத்தக்கவகையில் பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் இது தொடர்பான சிறப்பு நிகழ்ச்சிகளை நடாத்தும்ஒழுங்குகளையும் இவ்வமைப்பு மேற்கொண்டுள்ளது.

தினகரன், வீரகேசரி, தினக்குரல், யுக்திய, ஐலன்ட், சண்டேலீடர் பத்திரிகையாளர்களுடன் சரிநிகர் சார்பில் புத்தளத்திலுள்ள பல முகாம்களுக்குச் சென்று நிலைமைகளை நேரில் அவதானித்து அங்குள்ளவர்களுடன் கதைத்து பல விடயங்களை தெரிந்துகொண்டோம்.

அவர்களுடனான எமது உரையாடலில் அவர்களின் அவல வாழ்வு உட்பட்ட தாயக நினைவுகளும் மீண்டும் தம் மண்ணுக்கு சென்று குடியேற வேண்டுமென்ற ஆவலும் தெரிந்தது. வடக்கின் தங்களது மீள் குடியேற்றம் என்பது எந்த வித நிர்ப்பந்தமுமின்றி புலிகளின் மனப்பூர்வமான அழைப்புடன் நிகழ வேண்டுமென்பதும் அவர்களது எதிர்பார்ப்பாக இருக்கிறது. மீள் குடியேற்றம் தொடர்பான பல்வேறு தீர்க்கதரிசனமான நிலைப்பாட்டுடன்வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு இம்மக்களிடையே செயற்பட்டு வருகிறது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அவர்களுடனான உரையாடல்களில் சில பகுதிகளை இங்கே தருகிறோம்.

### அந்த நாட்கள்

1990 ஒக்டோபரில் நடந்த அந்த நிகழ்வுகளின்துயர் மிக்க நினைவுகள்பற்றிய கேள்விகளுடன் எமது உரையாடல் தொடங்கியது.

"எல்லாம் நேற்றுப்போல் இருக்கிறது. மட்டக்களப்பில் இடம்பெற்ற தமிழ் முஸ்லிம் கலவரத்தை ஒட்டி "கரிகாலன் குரூப்" உங்களை கொல்லவந்திருப்பதால், நாங்கள் மீள அழைக்கும் வரை நீங்கள் எல்லோரும் இங்கிருந்து வெளியேறுங்கள் என்று புலிகள் அறிவித்தார்கள். இரண்டு மணித்தியால காலக்கெடு விதித்தார்கள். அந்தக் காலக்கெடுவுக்குள் எங்களின் பாரம்பரிய தாய்ப்பூமியான யாழ் மண்ணை விட்டு விரட்டப்பட்டு, யாவற்றையும் இழந்து நிர்க்கதியாக அங்குமிங்குமாய் அலைந்து திரிந்ததிலேயே ஏழு வருடங்கள் போய் விட்டன" என்று தனது அனுபவத்தை வெளியிட்டார் நடுத்தரவயது நபர் ஒருவர்.

இன்னொருவர் "1990 ஒக்டோபர் 30ஆம் திகதி உடைமைகள், உறவுகள் எல்லாவற்றையும் இழந்து விரட்டப்பட்டோம். குழந்தைகள் முதியோர் நோயாளிகள் என எல்லோரும் இரண்டு நாட்கள் நடைவழிப் பயணத்தின் பின் நாங்கள் வாழ்ந்த யாழ்ப்பாண சோனகத் தெருவை நீங்கி வவுனியர வந்தடைந்தோம். அந்த இரண்டு நாட்களும் நாங்கள் அனுபவித்த துயரம் சொல்லி மாளா. எங்கள் உடைமைகளில் அத்தியாவசியமான சிலவற்றையாவது எங்களோடு எடுத்து வர அவர்கள் அனுமதிக்கவில்லை. எல்லாவற்றையுமே உருவிப் பிடுங்கினர். ஏன், காதுகளில் போட்டிருந்த தோடுகளை கழட்ட மறுத்த எம் பெண்களை பெண் புலிகள் பிரம்பால் அடித்தனர். ஆனாலும் எங்களை கண்ணீர்மல்கி வழியனுப்பி வைத்த யாழ்தமிழ் மக்களை நாம் மறக்கவே இயலாது" என்று தனது கசப்பான இறந்தகாலத்தை நினைவு கூர்ந்தார் அவர். 30 வயது மதிக்கத்தக்க, ஹிஜிரத்புரம் அகதிமுகாமின் தலைவர் எம்.ஆர்.நௌஷாத் தான் அவர் என்பதை பின்னர் தெரிந்துகொண்டோம்.

அன்று புலிகளால் வடக்கிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட எழுபத்தையாயிரத்துக்கும்மேற்பட்ட முஸ்லிம்மக்களில்புத்தளம் ஹிஜிரத் முகாமில் 1050பேரைக்கொண்ட 220 குடும்பங்கள் இருக்கின்றன. இவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். இன்னொரு முகாமான நிந்தனி முகாமில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 72 குடும்பங்கள் உள்ளன. நுரைச்சோலையின் இரண்டு முகாம்களில்சுமார் 646 குடும்பங்கள் உள்ளன. இவர்கள் மன்னாரைச் சேர்ந்தவர்கள். இக்குடும்பங்களில் 50 குடும்பங்கள் புல்மோட்டையைச் சேர்ந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. நாம் சென்ற முகாம்கள் அனைத்திலும் மொத்தமாக 938 குடும்பங்கள் அளவில் அகதிகளாக வாழ்கின்றன.

### நீர் வசதி

முகாம்களைச் சுற்றிப் பார்வையிட்ட போது அவர்களது நீர் வசதிகள் பற்றிய சந்தேகம் எழுந்தது. அவர்களிடமே கேட்டு வைத்தோம்.

"ரூபா பத்தாயிரம் செலவு செய்து தோண்டிய கிணற்றில் நீர் இல்லை. உள்ள கொஞ்ச நீரும் குடிக்க உதவாத அளவு உப்பு நீர். இங்கு நான்கு நாட்களுக்கு ஒருமுறை பவுசரில் நீர் கொண்டுவந்து தருகிறார்கள். அது இங்குள்ள மக்களுக்கு குடிக்கவே போதுமானதாக இல்லை."என்று பதிலளித்தார் ஹிஜிரத்புர பெண்மணியொருவர்.

ஹிஜிரத்புரத்தை விட தாயிப் நகரின் அவலம் கொடுமை. "பழைய காலத்தில் கட்டப்பட்ட கிணற்றின் உள்ளிறங்கியே சொட்டுச்சொட்டாக ஊறும்ஊற்றிலிருந்து நீரைப் பெறவேண்டிய நிலை. இதனால் நெஞ்சுவலி கண்டவர்கள் ஏராளம்."என்கிறார் உமர் பாரூக்.

"நிந்தனி முகாமில் 35 அடி தோண்டியும் நீருக்குப் பதிலாய் சேறே வருகிறது. ஏற்கெனவே இங்கு குடியிருக்கும் ஊர் மக்களுக்கு சைனா ஸ்கீம் மூலம் நீர் கிடைக்கிறது. எங்கள் பாடுதான் வலுகஷ்டம்." என்கிறார் ஆரிபின் (40)

நுரைச்சோலை முகாம்களைப் பொறுத்தவரை தண்ணீருக்கான பிரச்சினை அவ்வளவாக இல்லை. போருட் நிறுவனம் 25 கிணறுகளை கட்டிக்கொடுத்துள்ளது.

### சுகாதார வசதி

நீர் வசதி பற்றாக்குறை போலவே அவர்களது சுகாதார வசதிப்பிரச்சினையும் இருக்கிறது.

எந்த முகாமிலும் முறையான சுகாதார வசதிகள் இல்லை. புதிய புதிய தொற்று நோய்களும் பரவியுள்ளன. மிக மோசமான நோயால் பீடிக்கப்பட்டவர்களைக்கூட பல மைல் சைக்கிளில் கொண்டு சென்றே வைத்தியசாலையில் சிகிச்சை செய்ய வேண்டும்.

"ஆத்திர அவசரத்துக்குக்கூட சரியான வாகன வசதி இல்லை. எனது நிறைமாதக் கர்ப்பிணி மகளைக்கூட பிரசவவேதனையின் போது இங்கிருந்து புத்தளத்துக்கு சைக்கிளில் போய் அங்கிருந்து ஆட்டோ பிடித்து வந்தே வைத்தியசாலைக்கு கொண்டு சென்றோம்." என்கிறார் தாயிப் நகரரைச்சேர்ந்த இம்ரான் என்பவரின் முதிய தாய்.

ஹிஜ்ரத்புரத்தில் சுகாதார வசதிகள் தொடர்பாக வினவியபோது கட்டிக்குறையில் கிடக்கும் மலசலகூடத்தைச் சுட்டிக்காட்டி சிரித்தார் ஒருவர்.(இங்கு ஆர்.டி.எப். இப்போது மலசலகூடங்களை கட்டிக் கொடுத்துவருகின்றது.) நுரைச்சோலையில் போருட் 25 மலசலகூடங்களை கட்டிக் கொடுத்து உள்ளது என்பது தெரிய வந்தது.

### பங்கீட்டு உணவுப் பொருள் விநியோகம்

ஹிஜ்ரத்புரத்தில் ஒரு நபருக்கு 15 நாளுக்கு 168 ரூபாய்வீதம் 5 பேருள்ள குடும்பம் ஒன்றுக்கு 840 ரூபாய் பெறுமானமுள்ள பொருட்கள் வழங்கப்படுகின்றன. நுரைச் சோலையிலும் அவ்வாறே. தாயிப் நகரில் ஆளுக்கு 6 கிலோ அரிசி, அரைபோத்தல் தேங்காய் எண்ணெய், 300 கிராம் சீனி, 250 கிராம் பருப்பு என ரேஷன் வழங்கப்படுகிறது.

எந்த முகாமிலும் 5 பேருக்கு மேலுள்ள குடும்ப அங்கத்தவர்களுக்கு ரேஷன் இல்லை. புதிதாக முகாம்களில் பிறந்த பிள்ளைகளுக்கும் ரேஷன் இல்லை. அவர்கள் புத்தள வாசிகளாம் என்றார் ஒரு தாய்.

### தொழில் வசதி

தொழில் வசதி பற்றி அவர்களது நாளாந்த சீவியத்துக்கான நிலைமை பற்றி விசாரித்து அறிந்தோம்.

"நாங்கள் யாழ்ப்பாணத்தில் அங்காடி வியாபாரம் தையல் கூலி தொழில் செய்து வந்தோம். இங்கு நிலைவேறு. இங்குள்ள புத்தள மக்களுக்கே ஒழுங்கான தொழில் இல்லை." என்கிறார் ஹிஜ்ரத்புர முகாம் தலைவர் நௌசாத்.

"ஊரில் விவசாயத் தொழில் செய்தோம். இப்போது நுரைச்சோலை அனல் மின்சார நிலையம் திறப்பது தொடர்பான பிரச்சினைகளால் தோட்டங்கள் கைவிடப்பட்டுள்ளன. எங்களுக்கு கூலித் தொழில் கூட இல்லாது போயிற்று." என்றார் நுரைச்சோலை அகதி முகாமிலுள்ள ஒரு இளைஞர்.

தான் உப்புப்பொதி செய்யும் வேலைக்குப்போவதாகவும் ஒரு நாளைக்கு 100 ரூபா வரை ஊதியம் கிடைக்கும் எனவும் அதுவும் மாதம் முழு நாளுமே வேலை கிடைப்பதுமில்லை வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள இந்தக்காலத்தில் மிகவும் கஸ்ரம் என்றார் ஒரு பிள்ளையின் தந்தையான இள வயது நபர் ஒருவர்.

### கல்வி நிலை

மிகவும் புறக்கணிக்கப்பட்ட நிலையின் மத்தியிலேயே இவர்கள் தமது கல்வியைத் தொடர வேண்டியுள்ளது.

"ஆசிரியர்களுக்குரிய எந்த தளபாட வசதிகளும் இல்லை. கரும்பலகை வசதிகூட முறையாக இல்லை. கல்வி நிலை மோசமாகவே உள்ளது. ஆசிரியர் பற்றாக்குறை வேறு. கற்பித்தலுக்கான வளங்கள் இல்லை. புனர்வாழ்வு அமைச்சு, மாகாண கல்வித் திணைக்களம், கல்வி அமைச்சு ஆகிய எல்லாவற்றுடனும் தொடர்பு கொண்டு பேசிப்பார்த்தும் பலன் பூச்சியமே. ஒருவரில் ஒருவர், பொறுப்பைப் போட்டுத் தப்பிக் கொள்கின்றனர். 250 மாணவர்கள் கற்கும் இந்தப் பாடசாலையில் ஆறு வகுப்புக்கள் உள்ளன. ஒன்றரை வருட காலமாக மாணவர்கள் நிலத்திலிருந்தே கற்றுவந்தனர். புனர்வாழ்வு அமைச்சு இழுத்தடிப்பதிலேயே காலந்தள்ளுகிறது. என்று சொன்னார் நுரைச்சோலை முகாமிலுள்ள ஒரு ஆசிரியர்.

ஆறு பிள்ளைகளின் தாயான அவ்வாம்மா "பிள்ளைகளின் படிப்பு கஷ்ரம். இங்கு (ஆலங்குடா) சின்ன வகுப்புகளே உள்ளன. தொடர்ந்து படிக்க வேண்டுமானால் மூன்று கிலோ மீற்றர் நடந்து நுரைச்சோலையிலுள்ள பாடசாலைக்கு செல்ல வேண்டும்." என்றார் அவர்.

"இங்கு 1040 மாணவர்கள் உள்ளனர். 32 ஆசிரியர் வரை தேவை இருப்பினும் 11

ஆசிரியர்களே உள்ள[...]
இடை நிறுத்தம் செ[...]
என்கிறார் பாரூக்(40).

ஹிஜ்ரத்முகாமை[...]
என்பவர் தான்யாழ்ப்பா[...]
ஆண்டு 8 வரை கல்வி [...]
ளாக பெயர்ந்து வந்த[...]
பாத்திமா கல்லூரி[...]
கூறினார். ஆரம்பத்தில்[...]
ஏன் யாழ்ப்பாணத்தை[...]
ஒருவரால்கூட தாம்அ[...]
தாகவும்இப்படியான [...]
கல்வியை இடைநடுவ[...]
ஏற்பட்டதாகவும் சொ[...]

தாயிப் நகர் [...]
பிள்ளை[...]லர் மூல[...]
அதிகமான தூரம்நட[...]
சென்று கற்க வேண்[...]
நடுவில்படிப்பை நிறுத்[...]
கூறினர்.

தொடர்ந்தும் கல்[...]
பலர் பிறப்பு அத்தாட்சி[...]
விடுகைப் பத்திரம்[...]
காரணத்தால்இங்கு [...]
முடியாத நிலைக்கு[...]
"திண்ணையிலுள் [...]
புதிதாக சேர்ந்த மாண[...]
வசதியோ தளபாட வச[...]
அவர்களுக்கு பதி[...]
பாடசாலை ஆரம்பிக்கி[...]
நகரைச்சேர்ந்த மாண[...]

தாயிப்நகரில்பால[...]
15 பேருக்கு ஈ.பி.டி.பி. ம[...]
ரூபாய் வீதம் வழங்கு[...]
த்தக்கது.

### நிவாரண [...]

ஹிஜிரத்புரத்தை[...]
ஆரம்பத்தில் ஒரு பொ[...]
தான் தங்கியிருந்தன[...]
சொந்தப் பணத்தைத் [...]
வாங்கி குடும்பத்துக்கு[...]
பிரித்து எடுத்து அரசு[...]
தைக் கொண்டு குடில்[...]

தாயிப் நகரை[...]
ஆரம்பத்தில் தங்கியிரு[...]
தீயில் நாசமானதை[...]
கொடுத்த ஏழாயிரம் ரூ[...]
வீதம் ஈ.பி.டி.பி. அறவி[...]
பேச்சர்ஸ் காணியில் வ[...]
காணிகளுக்கான உ[...]
வழங்காது ஈ.பி.டி.பி. இரு[...]
பலர் குறைப்பட்டனர்.

www.tamilarangam.net





## வடக்கு முஸ்லிம்கள்:

## ...ட்ட வாழ்வு!

தாயிப் நகரில் வீதிகளுக்கு மட்டும் மின்சாரம் வழங்கப்பட்டு அதற்காக குடும்பம் ஒன்றிடம் மாதாந்தம் 20 ரூபா அறவிடப்படுகிறது.

நுரைச்சோலையிலுள்ள அகதி மக்களுக்கு வீடமைப்புக் கடன் கிடைத்துள்ளது. (வாக்களிக்கப்பட்ட தொகை பூரணமாக வழங்கப்படவில்லை.) இவர்களும் சொந்தமாக வாங்கிய நிலங்களில் குடிசைகளை அமைத்து வாழ்கின்றனர்.

அகதி முகாம்களில் திருமணம் செய்த தம்பதிகளுக்கு ஆரம்பத்தில் வழங்கப்பட்ட இருபத்தையாயிரம் ரூபா உதவியும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர்.

அகதிகளாக கொட்டில்களில் இருந்த ஆரம்ப நாட்களில் ஐ.சீ.ஆர்.சி., எஸ்.டி.ஐ., ஐ.யு.எஸ்.ஏ..என்று பல்வேறு தனியார் அமைப்புகள் நிவாரண உதவிகளைச் செய்து வந்தன. இப்போது ஆர்.டி.எப் மட்டுமே சில உதவிகளைச் செய்து வருகிறது என்று பலா தெரிவித்தனர்.

### மீள் குடியேற்றம்

மீள் குடியேற்றம் குறித்து அவர்கள் பெரிதும் புலிகளது பதிலையே எதிர்பார்த்துக் காத்திருப்பதாக தெரிகிறது. தாம் பாதுகாப்புடனும் கௌரவத்துடனும் மீண்டும் சொந்த இடத்துக்குப்போய் குடியேறுவதற்கு அவர்கள் யாரையும் நம்பும் நிலையிலில்லை. கடந்த கால கசப்பான அனுபவங்கள் அவர்களை இப்போது இவ்வாறு எண்ண வைக்கிறது.

"சொந்த மண்ணை மறக்க முடியாது. அரசு எங்களுக்கு செய்து தந்திருப்பது தற்காலிகமானதே. அரசும் புலிகளும் சேர்ந்து, எங்கள் பிரச்சினை தொடர்பான பொது உடன்பாடு ஒன்றுக்கு வர வேண்டும். அதன் மூலம் புலிகளின் பூரண அனுமதியுடன் நாங்கள் எங்கள் சொந்த இடங்களுக்கு செல்ல வேண்டும். எங்களுக்கு நட்ட ஈடுகளும் நிவாரணங்களும் வழங்கப்பட வேண்டும். நாங்கள் இங்கிருந்து அங்கு சென்று திரும்பவும் அகதிகள் போல் வாழும் நிலமை ஏற்படக்கூடாது."

92இல் இராணுவம் கைப்பற்றிய மன்னார் பகுதிகளுக்கு பத்து வீதமான மக்கள் கூட சென்று மீள் குடியேறவில்லை. அங்கு போய் குடியேறிய மக்களும் நிம்மதியுடன் வாழவில்லை. தாண்டிக்குளத்தில் எவ்வளவு பாதுகாப்பு நிலைமையிருந்தும் அண்மையில் நடந்த சண்டையின் போது வவுனியாவில் சில பகுதியில் இருந்த முஸ்லிம் மக்கள் அகதிகளாக வெளியேறியுள்ளனர். முற்றுமுழுதான யாழ் மண்ணை அரசு கைப்பறினாலும் வேறு ஆயதம் தாங்கிய குழுக்கள் அங்கிருக்கும் வரை எந்த நம்பிக்கையில் நாம் அங்கு குடியேறுவது."

"முன்பு யாழ் மக்களோடு நாம் எவ்வளவு அந்நியோன்யமாக வாழ்ந்தோமோ அவ்வாறே மீளவும் வாழ விரும்புகிறோம்."

நாங்கள் அகதிகளாக விரட்டப்பட்டு ஏழு வருடங்கள் ஆகிவிட்டன. இப்போது எங்களில் பலர் திருமணம் செய்து குழந்தை குட்டி என்றாகிவிட்டனர். இந்த யுத்தம் என்று தீரும்? எப்போது சமாதானம் பிறக்கும் எப்போது நாங்கள் எங்கள் மண்ணுக்கு திரும்பிச் செல்வோம் என்று திட்டமாகக் கூற முடியாது எங்களுக்காக இங்கு குடியேற்ற வசதிகளை அரசு செய்து தந்தால் அவற்றை எங்கள் பிள்ளைகளுக்கு கொடுத்துவிட்டு நாங்கள் எங்கள் மண்ணுக்கே திரும்பிச் செல்வோம்" என்றார் ஒருவர்.

"இப்போது நான் யாழ்ப்பாணம் திரும்பிச் செல்ல மாட்டேன். அவர்களோடு சேர்ந்து வாழ பயம்." என்கிறார் செளரா உம்மா (70) என்ற மூதாட்டி.

"திரும்பிப் போக விருப்பம் தான் அவ்வளவு காலம் ஒன்றாக வாழ்ந்த எங்களை எல்லாவற்றையுமே பறித்து நடுத் தெருவில் நிராதரவாக விரட்டியவர்களை நம்பி நாங்கள் எப்படி போய் அங்கு வாழ்வது. நான்கு வயதுக்கு வந்த சகோதரிகளும், நானும் தம்பியும் எனது வயோதிபத் தாயும் அவர்கள் விரட்டியதிலிருந்து இன்றுவரை அனுபவித்த துயரங்கள் கொஞ்சநஞ்சமல்ல" என்கிறார் பாலர் பாடசாலை ஆசிரியையான சர்மிலா(20).

இப்படி திரும்பிப்போக விரும்புவோர் மத்தியில் அதற்குத் தயங்கி போக மறுப்பவர்களும் இருக்கவே செய்கிறார்கள். இது தொடர்பான பல விதமான உணர்வுகளை அவர்கள் மத்தியில் காணக்கூடியதாக இருந்தது. 35 வயதான ரமீசா இப்படிச் சொல்கிறார். "நாங்கள் திரும்பிப் போகவே விரும்புகிறோம். எங்களை வெளியேற்றும் போது அழுது நின்ற யாழ்ப்பாண தமிழ் மக்களை மறக்க முடியாது. இங்கு எங்கள் பிள்ளைகள் வளர்ந்து விட்டார்க்ள். இங்கு கல்வியும் கற்கின்றார்கள். திரும்பவும் நாங்கள் அங்கு சென்றால் எங்கள் பிள்ளைகளை அவர்கள் பிடித்துச்சென்று விடுவார்கள். அங்கு போய் வாழ்வது கஷ்ரமாகவே இருக்கும். இங்கு நிம்மதியாகவாவது தூங்கலாம்."

தாயிப் நகரைச்சேர்ந்த (தேவாபாத்) ஒரு தாய் இப்படிச் சொல்கிறார்.

"யாழ் திரும்பியும் திரும்பவும் கஷ்ரப்படத்தானே போகிறோம். பிரச்சினை முற்றாக தீர்ந்து விட்டதென்றால் பரவாயில்லை. கொழும்பு வவுனியா என்று மூன்று தடவைக்கு மேல் இடம்பெயர்ந்து வந்து கடைசியாக இங்கு வந்துள்ளோம். பயந்து நடுங்கி சிலர் இறந்து உடுதுணியைக்கூட இழந்தே நாங்கள் இங்கு வந்து சேர்ந்தோம்."

ஒரு சிலர் மன்னார் வரை சென்று மீளக்குடியேறலாமா என்று பார்த்துவிட்டு அவநம்பிக்கையுடன் திரும்பி வந்திருந்தார்கள். அவர்களில் ஒருவரான நுரைச்சோலையைச்சேர்ந்த ஒருவர் கூறுவதைக் கேளுங்கள்.

"நான் மே 25இல் தன்னந்தனியே மன்னாருக்கு சென்று பார்த்தபோது அது இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசம் போலவே இல்லை. அங்கு இராணுவத்தையோ புலிகளையோ காணமுடியவில்லை. எமது ஊரைச் சென்று பார்த்தபோது எதையுமே இலகுவில் இனங்காண முடியவில்லை. காடு வளர்ந்து புதர் மண்டிப்போய் விட்டது. எனது ஊரில் 1990இல் 4500 முஸ்லிம் குடும்பங்கள் இருந்தன. இப்போது வீடு வாசல் கூட அங்கு இல்லை."

ஏ.சீ.ரம்சி என்பவர் தனது அனுபவத்தை இப்படிச் சொல்கிறார்.

"15 பேர் எங்கள் சொந்த இடங்களைப் பார்க்கச் சென்றோம். நான்கு நாட்கள் வரை அங்கு நின்றோம். ஊரில் பாதைகள், வீடுகள் எதுவும் இல்லை. இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்றார்கள். நாம் ஊர் (பண்டார வெளி) சென்ற பாதையில் புலிகளைச் சந்தித்தோம். எங்களுக்கு எதுவித பிரச்சினையும் தராது ஊர் சென்று வர அனுமதி தந்தார்கள். அங்கு நாம் எங்கள் பள்ளிவாசலை துப்பரவு செய்து தங்கினோம். நிரந்தரமான மீள்குடியேற்றம் தொடர்பான நாம் புலிகளைக்கேட்டபோது தங்கள் மேலிடத்தோடு தொடர்புகொண்டு யூ.என்.எச்.சீ.ஆர்.. ஐ.சீ.ஆர்.சீ. ஊடாக பேச்சுவார்த்தை நடாத்திவந்து குடியேறுங்கள் என்றனர்."

"புலிகள் . அரசாங்கத்தின் உடன்பாட்டோடுதான் நாங்கள் ஊருக்குச் செல்ல விரும்புகிறோம். அங்கு எல்லாம் தரை மட்டமாய் போய்விட்டது. உயிலங்குளம் போய் அங்கிருந்து 25 கிலோமீற்றர் கால் நடையாகவே எங்கள் ஊருக்குச் சென்றோம். இடையில் அகப்பட்ட தமிழ் மக்கள் எங்களை வரவேற்றனர். மீள வந்து குடியேறும்படி வேண்டினர்."-முஸ்தபா (நுரைச்சோலை)

பெப்ரவரியில் எடிபல இராணுவ நடவடிக்கையின் பின் முசலிப்பிரதேச சகல அரச ஊழியர்களையும் அரசு மன்னாருக்குப் போகச் சொல்லியிருந்தது. சிலர் முசலிக்கும் போய் வந்துள்ளனர். அவர்களுக்கு அங்கு எந்த இடையூறுகளும் நேரவில்லை."

நாங்கள் கட்சி அரசியலில் நம்பிக்கை இழந்துபோயுள்ளோம். எஸ்.எல்.எம்.சி. வெறுமனே அறிக்கைகளை விட்டதே தவிர எங்களை வழிநடாத்தக்கூடிய ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை.

"கொழும்பிலிருந்துகொண்டு புலிகளை பாசிசவாதிகள் என்றும் பயங்கரவாதிகள் என்றும் அறிக்கை விடும் அரசியல்வாதிகளின் மேற்பார்வையின் கீழ் எங்கள் மீள் குடியேற்றம் நடக்குமாயின் நாங்கள் புலிகளின் கோபத்துக்கு ஆளாகக்கூடும்."

"எருக்கலம்பிட்டி, தாராபுரம் ஆகிய மீள்குயேற்றங்கள் தோல்வியில் முடிந்தது போல எங்கள் குடியேற்றங்களும் தோல்வியில் முடிந்துவிடக்கூடாது என்பதற்காகவே "முசலிப்பகுதி பிரதேச மக்கள் ஒன்றியம்" என்ற பெயரில் அமைப்பொன்றை நிறுவி மீள்குடியேற்றம் தொடர்பான ஆலோசனைகளை மக்களுக்கு வழங்கிவருகிறோம்." என்றார் இவ்வொன்றியத்தின் செயலாளர் மிஹ்லார்.

"1990 ஒக்டோபரில் நாம் வெளியேற்றப் பட்டபோது தமது பொருட்களை எடுத்து வரச்சென்ற நாலு முஸ்லிகளில் மூவரை புலிகள் கொன்றார்கள். ஒருவர் தப்பி வந்தார். ஆனால் ஏழு வருடம் கழித்து இப்போது சென்றவர்களை அவர்கள் எதனையும் செய்யவில்லை. எங்கள் மண்ணுக்கு செல்ல புலிகளின் உத்தியோகபூர்வமான அழைப்பை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம். மன்னார் தீவில் இப்போதும் சண்டை நடக்கிறது. எருக்கலம்பிட்டி, தாராபுரம் எந்த இடையூறுமின்றி இருப்பதாக அறிய முடிகிறது. இது புலிகள் பற்றிய நம்பிக்கையை எம்மில் மேலும் அதிகரித்தது. ஆனால் அண்மையில் நிகழ்ந்த இறக்கக்கண்டி மற்றும் கிழக்குச் சம்பவங்கள் இந்த நம்பிக்கையை கேள்விக்குரியதாக ஆக்கியிருக்கிறது."

"500 கிலோ மீற்றர் பரப்பளவுள்ள வடக்கின் மிகப்பெரிய முஸ்லிம் பிரதேசமான எங்கள் முசலி மண்ணில் நாங்கள் மீளக்குடியமர எங்களின் பாதுகாப்புக்கு புலிகள் உத்தரவாதம் அளிக்கவேண்டும்." என்றும் மிஹ்லார் தன் கருத்துக்களை தெரிவித்தார்.

ஆக மக்கள் அகதி வாழ்க்கையில் அலுத்துப்போய்விட்டனர். அகதி வாழ்வு அவர்களை மிகவுமே அடித்து நொருக்கிப் போட்டுவிட்டிருக்கின்றது. உணவு, சுகாதாரம், கல்வி போன்ற அத்தியாவசியமான அடிப்படை வசதிகள் கூட முறையாக இல்லை. அவர்களுடைய அடுத்த சந்ததிகள் கூட திக்குத்தெரியாத இருளில் தடுமாறுகின்றன.

சமாதானம் என்று ஆசை காட்டி ஆட்சிக்கு வந்த சந்திரிகா அரசோ முஸ்லிம்களின் உரிமைகளை வென்றெடுக்க வென்று ஓட்டுக்கேட்டுப்பெற்று இன்று அரசின் பங்காளியாக இருக்கும் முஸ்லிம் காங்கிரசோ வேறு எந்த அரசியல் கட்சிகளுமோ இடம் பெயர்ந்த மக்களுக்காய் ஆக்கபூர்வமாய் எதனையும் செய்வதாயில்லை. புலிகள் மனம்வருந்துவதோடு சரி.

மாறி மாறி அவர்களின் தலையில் சம்பல் அரைக்கிறவர்களாகவே அனைவரும் உள்ளனர்.

அவர்களது விடிவுகாலம் எப்போது பிறக்கும்,இது வெறும் அவர்களின் கேள்வி மட்டுமல்ல, முழுத் தேசத்தினதும் கேள்வியும் கூட!

---

காவு கொள்ளப்பட்ட வாழ்வு

பழுக்கக் காய்ச்சிக் கிரணத்தால்
சூரியனும்-
அவர்களின் உடலின் போர்வையெங்கும்
கோலிட்டுக் கறுப்பாக்கியது.
விடாய் தீர
கிணற்றின் உப்பு நீரையெல்லாம் குடித்துக் கனன்றது.

கலைத்து அவர்களின் கேசத்தைப்
பரட்டையாக்கிய அதே காற்றுத்தான்
கோரத்தாண்டவத்தைக் குடிசை வாழிடக் கூரையில்
புரிந்தது.

எப்போதாகிலும் பெய்கிற மழையோ
வளத்தை உறுஞ்சித் தரிசாக்கி நிலங்களை
அவர்கள் வாழ்வைப்போலச் செய்தது.

புத்தளத்தின்,
உப்பளக் கரைகள் தோறும் அவர் கண்ணீரே
குவியலாய்ப்போய்ப் படிந்திற்று.

முக்காடிட்ட பெண்கள்
தெருவில் நீர் வண்டிக்காய்க் காய,
கணவன்கள்,
மிக்க ஆழ் கிணற்றில் உவர் நீர் மெண்டு மெண்டு
நெஞ்சில் வலி கண்டு வீட்டில் சுருண்டனர்.

2
பாட்டிமார்,
கிடத்தித் தம்மடியில் பேரர்களை,
ஆண்ட கதையும்,ஒன்றாய் வாழ்ந்த கதையுஞ் சொல்லி
நீர் மல்கினர்.

உடமைகளை உருவிப் பிடுங்கும் படலத்தே
கழற்ற மறுத்த தோடொரு சோடிக்காய்
பிரம்பு பதம் பார்த்த பிருஸ்டத்தில் வீங்கிய தடத்தின்
நோவு கூறினர் நடுத்தர வயது மாதுகள்.

நாற்பது ஐம்பது வயதுக்காரரோ-
தாம் அவதரித்த செம்மண்ணின்
ஏழுவருடப் புதர் மண்டிப் போன கதையினிடை,
பலவந்தத்தில் தம்மைப்
புலம் பெயர்த்து விரட்டுங்கால்
நெஞ்சுக்கு நீட்டப்பட்ட துவக்குக்குழல்களின் முன்
நா எழ நாவெழ- உதட்சை செருகிப் பல்லினிடை,
உள்ளே குமுறிய கொந்தளித்த-
வக்கற்ற மக்கள்தம் கோடிக் கோடி அர்த்தம் பொதிந்த
கண்களின் கடைசி மிரட்சியையும் .
இறுக்கிய கைகள் தளர்ந்து நடுவிரலில் நழுவிப் பிரிகையில்
அம்மாந்தர் உகுத்த அடர் நீர்த் துளிகளையும்
மறவாமல் நினைவுகூர்ந்தனர்.

3
அவர்கள் இன்னும் வாழ்ந்தனர்-
அவர்களில்,
இளைஞர்களும் யுவதிகளும்
ஒருவர் பால் மற்றொருவர் ஈர்ப்புற்றனர்.
காதல் கொண்டனர்,
மணவாளன் மணவாட்டியாகினர்,
கலவினர்,
சந்ததி பல்கிற்று-பெருகிற்று.

4
காவு கொள்ளப்பட்ட வாழ்வின் எச்சமென்றான
அவர்களின் சந்ததி
பள்ளிவாழ்விழந்து
சுழன்றடிக்கும் கிறவல் தெருக்களில்
எதிர்க்காற்றில்
புழுதியொடு போரிடுவதை நான் கண்டேன்.

5
காற்றில் பல்லிலைகள் சரசரக்க
நீட்டி நிமிர்ந்து உயர்ந்து நின்ற வலிய பனைகளுக்கும்
எல்லாம் தெரியும்.

19970807

---

**புத்தள மாவட்ட பிரதேச ரீதியான அகதிக் கல்விநிலை**

| பிரதேசம் | வலயம் | அகதி ஆண் மாணவர் | அகதி பெண் மாணவர் | அகதிகள் பயிலும் பாடசாலைகளின் மொத்த மாணவர் களில் அகதி மாணவர் வீதம் | 5 - 19 வயதுடைய அகதி மாணவர்களில் பாடசாலை செல்லாதோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1. கறபிட்டி குடாநாடு | கறபிட்டி நகரம் | 273 | 331 | 37 | 22 |
| 2. கற்பிட்டி | குறிஞ்சாப்பிட்டி, கண்டக்குழி | 777 | 582 | 66 | 949 |
| 3. கற்பிட்டி | பள்ளிவாசல் முசல்பிட்டி | 255 | 245 | 31 | 98 |
| 4. கற்பிட்டி | முதலைப்பாளி | 306 | 310 | 31 | 594 |
| 5. கற்பிட்டி | திகளி எத்தாளை | 284 | 258 | 62 | 246 |
| 6 கற்பிட்டி | ஆழங்குடா | 256 | 249 | 68 | 799 |
| 7. கற்பிட்டி | நுரைச்சோலை பூலாச்சேனை | 206 | 231 | 25 | 700 |
| | **மொத்தம்** | **2357** | **2206** | **320** | **3408** |
| 1 முந்தல் | கரம்பை | 85 | 65 | 32 | 160 |
| 2. முந்தல் | விருதோடை | 355 | 346 | 49 | 321 |
| 3. முந்தல் | கடையாமோட்டை | 357 | 411 | 43 | 111 |
| 4. முந்தல் | கணமூலை | 40 | 89 | 29 | 507 |
| 5. முந்தல் | பெருகுவட்டான் | 130 | 156 | 18 | 593 |
| 6. முந்தல் | எனையவை | 125 | 135 | 16 | 40 |
| | **மொத்தம்** | **1122** | **1202** | **187** | **1732** |
| 1 புத்தளம் | வடட்ககணடல | 160 | 219 | 66 | 556 |
| 2. புத்தளம் | 2 வது மைல் கட்டை | 200 | 165 | 1- | 622 |
| 3. புத்தளம் | தில்லையடி | 158 | 183 | 45 | 322 |
| 4 புத்தளம் | குருநாகல் பாதை | 33 | 35 | 20 | 68 |
| 5. புத்தளம் | கரைத்தீவு | 33 | 35 | 28 | 76 |
| | **மொத்தம்** | **584** | **637** | **171** | **1644** |
| **மொத்தம்** | | **4063** | **4045** | **678** | **6784** |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே... 36

(கேள்விகளுக்கு பதிலளித்தல் தொடர்)

எமது பதில்கள் குழந்தைகளை ஒரு சில நிமிடங்களுக்கு மட்டுமே திருப்திப்படுத்தும். அவர்கள் திரும்பவும் அதே அல்லது அது போன்ற மேலதிக கேள்விகளுடன் வரக் கூடும். ஒரு பிள்ளை 'குழந்தை பிறப்பது எப்படி?' என்று திரும்பவும் கேட்குமாயின், நாம் சற்று விரிவான ஒரு பதிலைக் கொடுக்கலாம். ''அம்மாவின் உடம்பில் குழந்தை வளர்வதை தகப்பனார் உருவாக்குகிறார். தகப்பனாரின் உடலிலிருந்து விந்து எனும் ஒரு பாயிபோன்ற திரவம் - அது பல உயிர் அணுக்களைக் கொண்டது - வருகிறது. அதிலுள்ள ஒரு உயிரணு தாயின் உடலிலுள்ள முட்டைக் கருவுடன் சேர்ந்து ஒரு குழந்தையின் உருவாக்கம் ஆரம்பமாகிறது''

குழந்தையின் அடுத்த கேள்வி பெரும்பாலான பெற்றோர்களுக்கு அச்சமூட்டுகிற கேள்வியாக இருக்கலாம். ''தகப்பனாரின் உயிரணு அம்மாவின் உடம்பினுள் எப்படிப் போகிறது? இதற்கான பதிலளிக்கப்படுவதற்கு முன்பாக நாமே பிள்ளை இதை எப்படிக் கருதுகிறது என்று கேட்கலாம். நாம் 'விதைகளை நடுதல்' போன்ற (அப்பா அம்மாவின் உடலினுள் ஒரு விதையை நடுகிறார்) கருத்துக்களை அவர்களிடமிருந்து கேட்கக்கூடும். 'விதைகளை உண்ணுதல்' (அம்மாவிற்கு உண்ணுமாறு ஒரு பழத்துண்டை அப்பா கொடுத்தல்), 'விதைகள் பரம்புதல்' (அம்மாவின் உடலுள் காற்றினால் விதைகள் பறந்து வந்து சேருதல்) சத்திரசிகிச்சை மூலம் (வைத்தியர் அம்மாவின் உடலை வெட்டி அதனுள் ஒரு விதையை வைப்பது) என்று பல கருத்துக்களை அவர்கள் கூறக் கூடும்.

குழந்தையின் இந்த விளக்கங்களுக்குப் பிறகு அதற்கு சுருக்கமாக இப்படி பதிலளிக்கலாம். 'விந்து தகப்பனாரின் ஆண் குறியிலிருந்து வருகிறது. இது அம்மாவின் பெண் குறியில் சேர்க்கப்படுகிறது'' இந்த நேரமே சிறுநீரையும், விந்தையும் வேறுபடுத்தி விளக்குவதற்கு உகந்த நேரமாகும். ''சிறுநீர் என்பது உடம்பின் ஒரு கழிவுப்பொருள். ஆனால் விந்து என்பது உயிரணுக்களைக் கொண்ட ஒரு பாயம் ஆகும்.''

இதை அடுத்த இன்னொரு கேள்வி எழலாம். ''எப்போது நீங்களும் அப்பாவுமாக குழந்தைகளை உருவாக்குவீர்கள்?'' இந்தக் கேள்வியின் தொனி வெளிப்படுத்தும் அர்த்தத்தில் அல்ல இது கேட்கப்படுகிறது. இதற்கு மிகவும் சாதாரணமான ஒரு பதிலே போதும். ''அப்பாமாரும் அம்மாமாரும் தமக்கு வசதியான, தனியாக இருக்கிற நேரங்களில் அதைச் செய்வார்கள். அவர்கள் ஒருவரை ஒருவர் விரும்புகிறார்கள். அவர்களுக்கு அன்பு செய்ய ஒரு குழந்தையும் தேவைப்படுகிறது'' இந்த இடத்தில் தாய் தகப்பன் ஒன்றாக இருப்பதும் ஒருமித்து செயற்படுவதும் அவர்களது தனிப்பட்ட அந்தரங்கமான விடயம் என்பது வலியுறுத்தப்படுவது அவசியமாக இருக்கலாம்.

சில ஆண் பிள்ளைகள், ஏன் தகப்பனார் குழந்தை பெறக்கூடாது என்று நினைக்கக்கூடும். அவ்வாறு அவர் பெறுவதை அவர்கள் விரும்பவும் கூடும். அவர்கள் ''ஏன் அம்மாவின் முட்டை அப்பாவின் உடலுக்குள் போகக்கூடாது?'' என்று கேட்கலாம். இதற்கு பெண்களின் உடம்பில் குழந்தைகள் வளர்வதற்கென கர்ப்பப்பை என்று ஒரு உறுப்பு இருக்கிறது. ஆண்களுக்கு அது கிடையாது என்று கூறலாம். இதற்கும் ஏன் என்ற கேள்வி எழும். ''ஏனென்றால் ஆணினதும் பெண்ணினதும் உடல்கள் வேறுவேறு விதமாகவே உருவாக்கப்பட்டுள்ளன'' என்பதே இதற்கான பதில். குழந்தைகளுக்கு அன்பு செய்யவும், பாதுகாக்கவும் ஒரு தகப்பனார் அவசியம் என்பதை இந்த ஆண் குழந்தைகட்கு உறுதி செய்வது அவசியமான ஒன்றாகும்.

### நிர்வாண உடல்

சில வீடுகள் நிர்வாண குடியிருப்புக்களைப் போல் இருக்கின்றன. பெற்றோரும் பிள்ளைகளும் தாமே உருவாக்கிக்கொண்ட தமது



(ஆதாம் - ஏவாளின்) சுவர்க்கத்தில் நிர்வாணமாகத் திரிகிறார்கள். ஆனால் இந்தச் சுதந்திரத்தின் மத்தியில் வளர்க்கப்படும் குழந்தைகளும் கூட மனித உடல் குறித்த கவலைகளிலோ குற்ற உணர்வுகளிலோ இருந்து விடுபட்டவர்களாக இருப்பதில்லை. நேரடியாகப் பார்ப்பது மட்டும் அவர்களது இரகசியங்களை அறியும் ஆவலை திருப்தி செய்துவிடுவதில்லை. அத்துடன் இது சில இரகசிய, நிறைவேற்ற முடியாத விருப்பங்களைப் பற்றிய ஏக்க உணர்வை வளர்த்துவிட காரணமாகியும் விடுகிறது.

நாலு வயது நிரம்பிய பீட்சி, தனது தகப்பனாருடன் குளியலறையுள் குளிப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தாள். அவள் அவரைப் பார்க்கவும், அவரது உடலைப் பார்க்கவும் விரும்பினாள். அது அனுமதிக்கப்பட்டது. ஆனால் அவள் அவரது ஆண்குறியைத் தொடுவதற்கு விருப்பம் தெரிவித்தபோது, தகப்பனாரது சுதந்திர மனப்பான்மை தரைமட்டமாகியது. உண்மையில் அது ஒரு அதிர்ச்சியாக மாறியது.

கைக்குழந்தைப் பருவத்தில் தாயின் மார்பகங்களை தொடுவதும் பார்ப்பதும், பால் உறிஞ்சுவதறகான நோக்கத்துடன் செய்யப்படுவதால் அது இலகுவாக நிறைவேற்றப் படலாம். ஆனால் பிள்ளைப் பருவத்தில் நிர்வாணமான அம்மாவின் அல்லது அப்பாவின் உடலைப் பார்ப்பது, பிறப்புறுப்புக்களில் அதிர்வுகளையும், பாலியல் விருப்பங்களையும் தூண்டக்கூடுமாதலால் அவை நிறைவேற்றப்பட முடியாதவையாகும். இதன் அர்த்தம் விக்டோரியன் நடத்தைகளை நோக்கிச் செல்ல வேண்டும் என்பதா? இல்லை. ஆனால், இதன் அர்த்தம் என்னவென்றால் எமக்கு அந்தரங்கம் அவசியம். அவை எமது அமைதிக்காக மட்டுமல்ல, குழந்தைகளது இயல்பான வளர்ச்சிக்கும் இது அவசியமாகும். உடையணியும் போதும், குளிக்கும் போதும் எப்பவாவது இருந்து விட்டு பிள்ளைகள் எமது உடலைப் பார்ப்பதை சகித்துக்கொள்ளலாம். ஆனால் இப்பழக்கங்களை நாம் ஊக்குவிக்கக்கூடாது.

எப்போது நீங்களும் அம்மாவுமாக குழந்தைகளை உருவாக்குவீர்கள்?

டொக்டர் ஜெயிம் ஜி ஜினோல்ட்
தமிழில்: அருண்

நாம், குழந்தைகள் எம்மைப் பார்ப்பதை விரும்புகிறோம் என்று அவர்கள் நினைப்பதற்கு வாய்ப்பளிக்கும் விதத்தில் நாம் நடக்கக்கூடாது என்பதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். நாம் நிர்வாணமாக உடற்பயிற்சி செய்கையிலோ, சூரிய ஒளியில் குளிக்கும் போதோ குழந்தைகள் இருப்பது அனுமதிக்கப்பட்டால், அவர்கள் தாம் அங்கு வெறுமனே இருக்க மட்டுமல்ல, எங்களுக்கு ஏதாவது உதவி செய்து சந்தோசப்படுத்தவுமே அனுமதிக்கப்பட்டுள்ளதாக நம்புவர். அவர்கள் அளவுக்கதிகமாக தூண்டப்பட்டவர்களாக, குழப்பமடைந்தவர்களாக பயனற்ற வினோதங்களில் ஈடுபடுபவர்களாக மாறி விடுகிறார்கள்.

நாம், குழந்தைகள் மனித உடல் குறித்து அறியும் தீவிர ஆர்வம் கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்பதை புரிந்து கொள்கிறோம். அவர்களுக்கு பெண்குழந்தைகளுக்கும், ஆண்குழந்தைகளுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளை அவதானிக்க வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அத்துடன் அவர்களுக்கு எப்போதாவது எங்களைப் பார்க்கவும் வாய்ப்பு இருந்திருக்கிறது. அத்துடன் இன்னமும் அதிகமாக எம்மைப் பார்க்க விரும்புகிறார்கள். அவர்களது இந்த ஆர்வத்தை வெளிப்படையாக புரிந்து கொள்வது நல்லது. ஆனால் எமது அந்தரங்கம் குறித்து வலியுறுத்த வேண்டும்.

''நான் குளியலறையில் எப்படி இருப்பேன் என்று பார்க்க நீ விரும்புகிறாய் என்று எனக்குத் தெரியும். ஆனால் குளியலறையில் நான் தனியாக இருக்கவே விரும்புகிறேன். வளர்ந்தவர்கள் எப்படி இருப்பார்கள் என்று நான் சொல்லித்தருகிறேன். நீ கேள். நான் சொல்கிறேன்''

இத்தகைய அணுகுமுறை குழந்தையின் ஆர்வத்தை தடை செய்யவோ, தாக்கவோ மாட்டாது. பதிலாக அது விடயத்தை சமூகத்தில் அங்கீகரிக்கப்படக் கூடிய வழிகளை நோக்கித் திருப்பி விடுகிறது. பார்ப்பதாலும், தொடுவதாலும் வெளிப்படுத்தப்படும் ஆர்வம் இப்போது வார்த்தைகளினூடாக வெளிப்படுத்தப் படுகிறது.

### படுக்கைகளும், படுக்கை அறைகளும்

பிள்ளைகள் பெற்றோருடன் படுக்கைகளையும் படுக்கை அறைகளையும் பகிர்ந்து கொள்தல் நிச்சயமாக நல்லதல்ல. குழந்தைகள் நாம் நினைப்பதை சொல்வதை விட அதிகமாக பார்க்கவும் கேட்கவும் கூடியவர்கள். நடப்பது என்ன என்பதை அவர்களால் விளங்கிக் கொள்ள முடியாவிட்டாலும், காட்சிகளும், ஓசைகளும் அவர்களுக்கு அச்சமாகவும், கனவுகளாகவும் திரும்பவும் தோன்றக்கூடும். ஆபத்து தெளிவானது: **பிள்ளைகள் செவிடர்களோ குருடர்களோ அல்லர். அவர்கள் தூங்கும் போதோ அல்லது தூங்குவதாக தோன்றும்போதோ கூட.**

கட்டிட அமைப்பினைப் பொறுத்தவரை எமது வீடுகள் பாலியல் சார் நடவடிக்கைகளுக்கு எதிரான தன்மையுடையவை. சில நவீன வீடுகளில் பாலியல் சார் அந்தரங்கத்துக்கு உரிய பாதுகாப்புக்கொண்டவை. சுவர்கள் மெல்லியவை. குழந்தைகள் அருகில் இருப்பார்கள். எமது சட்டபூர்வமான காதலின் ஓசை கூட மிகவும் மெல்லியதாக இருக்க வேண்டும் என்பது ஒரு துயரமான நிலைதான்.

### பயனற்ற காதல்

எல்லா ஆண்குழந்தைகளின் வாழ்விலும் (மூன்றுக்கும் ஐந்துக்கும் இடைப்பட்ட வயதில்) தாய் தனக்கு மட்டுமே வேண்டும் என்று கருதும் ஒரு காலம் இருக்கிறது. அதுதான் அவனது முதலாவது 'காதல்'. அவன் வேறு எவருக்கும் அவளை விட்டுக்கொடுக்க அனுமதிக்க மாட்டான். பெண்குழந்தையும் தனது 'காதலை' தகப்பனுடன் காட்டுகிறாள். இந்தக் 'காதல்' வேறு எவரையும் அனுமதிக்காத ஒரு இறுக்கமான உரிமை பேணும் 'காதலா'க இருக்கும். இத்தகைய 'காதல்' ஒரு போதும் வார்த்தைகளாலோ, செயல்களாலோ அனுமதிக்கப்படக்கூடாது. சும்மா கூட ஒரு தாயால் அவளது மகன் 'எனது பலசாலி மனிதன்' என்றோ, 'எனது குட்டிக் காதலன்' என்றோ ஒரு போதும் ஒரு ஆண்குழந்தை அழைக்கப்படக்கூடாது. இவ்வாறே தகப்பனால் ஒரு பெண்குழந்தை அழைக்கப்படக்கூடாது.

இவைதான் பிள்ளைகள் தமது வாழ்வில் தாம் ஏற்றுக்கொள்ள வேண்டியவை எனக்கருதும் பாத்திரங்கள். இவை கட்டாயமாக அவர்களால் கைவிடப்பட வேண்டிய பாத்திரங்கள். எவ்வளவு விரைவாகவோ அவ்வளவுக்கு நல்லது. நாம் அவர்களது பயனற்ற நம்பிக்கையை அனுமதிப்பதன் மூலம் அவர்களது விரக்தியை அதிகரிக்கக்கூடாது. பெற்றோரும், தாதிமாரும் (வாயில் முத்தமிடல், பிறப்புறுப்புகளில் சீண்டுதல் போன்றவற்றிற்கு) விட்டுக்கொடுத்தல் மூலம் பிள்ளையை சந்தோசப்படுத்தலாம். ஆனால் இது பிள்ளைக்கு திருப்திக்குப்பதில் குற்ற உணர்வையே ஏற்படுத்துகிறது. பாலுணர்வு சம்பந்தப்பட்ட விட்டுக் கொடுப்புக்கள், அவை தொடுகை சம்பந்தப்பட்டவையாகவோ, வார்த்தைகள் சம்பந்தபட்டவையாகவோ எப்படியிருப்பினும் அவை பிள்ளையின் பெற்றோர்களுடன் அதை தவறான முறையில் பிணைத்து விடுவதுடன், காதல், பாலியல் என்பன குறித்த இயல்பான வளர்ச்சிக்குத் தடையாகவும் அமைந்து விடுகின்றன.

வரும்..

நீண்ட நாள்போரிட்ட
தோழர்கள் களைத்தனர்...
தோள்களிலிருந்த-துப்பாக்கிகள் கனத்தன.

சுட்டுப் பழகிய விரல்கள் தவித்தன
எதையேனும் அழுத்த...

சூரியனை விரல்களால் மறைத்தால் என்ன..
கடலினை அள்ளி இறைத்தால் என்ன..
காற்றை உறுஞ்சி முடித்தால் என்ன..
தோழர்கள் சிந்தனை கொடிகட்டிப் பறந்தது..

சொந்த மக்களை சுவர்களுள் பூட்டி
எதிரிகள் என்று கூவி மகிழ்ந்தனர்...
கண்களை இறுக மூடிக் கூவினர்...
எதிரிகள் தொலைந்தனர் என்று பாடினர்..

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இறுதிப் பகுதி...

### தமிழ் பண்பாட்டுக்கோலங்கள்

பெண் போராளி ஆண்மயமாதல் மரணப்பெண்ணாதல் போன்றவை அர்த்தமற்ற வாதங்கள். இராணுவச் செயல்பாட்டுக்கு வசதியாகவே ஜீன்ஸ், சேட் அணிதல், தலைமயிரைக்குறுக வெட்டுதல், ஆபரணம் அணியாமை என்பன இடம்பெறுகின்றன. இராணுவத்துக்கான உலகப்பொது நியதியாகவே இவை அமைகின்றன. அநேகமாக எல்லா விடுதலை இயக்கங்களிலும் பல நாடுகளிலும் பெண்கள் இராணுவச் சேவையிலும், போர் நடவடிக்கைகளிலும் ஈடுபடுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும், தமது தளங்களில் இருக்கும் போதோ குடும்ப சமூக நிகழ்வுகளில் பங்கு கொள்ளும் போதோ அவள் தமிழ்ப் பண்பாட்டுக்குரிய கோலத்தையே பூணுகிறாள். அங்கு நகைகள் அணிவதோ, சட்டை சேலை (சட்டை மேற்குலக அறிமுகமாயினும் தமிழ்ப்பண்பாட்டினுள் உள்வாங்கப்பட்டதாய் உள்ளது) உடுத்தலோ நடைபெறுகிறது. தலைமயிரைச் சிலர் வெட்டிவிடுகிறார்கள். சிலர் அழகாகப் பின்னி விடுகிறார்கள். தமிழ்ப் பண்பாட்டுக்குரிய தனித்துவமான முறையில் பொட்டு வைத்தல், தலையில் பூச்சூடுதல், சேலை உடுத்தல் நகைகள் அணிதல் ஆகியவற்றைச் செய்யாது விடுதலையைத் தப்பித்தலாக இயக்கப்பெண் போராளிகள்கருதவில்லையென்றே எண்ணுகிறேன். பல்வேறு கலாசாரச் தாக்கங்களினால் இழக்கப்பட்ட தமிழர் கலாசாரத் தனித்துவத்தை மீளக்கொண்டு வருதல் தேசியக் கடமைகளில் ஒன்றாகவே கருதப்படுகின்றது. எல்லாவற்றிலும் மீள் உயிர்ப்பு அல்லது புதிய பிறப்பொன்று நிகழ வேண்டியதும் உள்ளது. ஆனால் தேசிய விடுதலையை வென்றெடுக்காமல் வேற்றுக் கலரசார ஆதிக்கத்திற்கு இடம் கொடுத்தால் எமது தனித்துவத்தையே இழந்து விடுவோம். மேற்கிந்திய தீவுகள், தென்னாபிரிக்கா, கொழும்பு போன்ற இடங்களில் Nagamooto, Tony padayachi, Fernandopulle போன்ற திரிபடைந்த தமிழ்ப் பெயர்களுடன்,

தமிழ் மொழியையே மறந்த பலரைக் காண்கிறோம். சிலர் பொட்டு, பூ, சேலை போன்ற அடையாளங்களைப்பேணிய போதும் பலர் தமது இனத் தனித்துவத்தை இழந்து வேற்றினமாகவே மாறி விட்டனர். இந்நிலை ரா.குவுக்கும் வராது என்பது நிச்சயமில்லை. ஒரு இனத்தின் விடுதலையையும், அதன் சந்ததியின் சுபீட்சமான எதிர்காலத்தையும் கருதிக் கடும் போராட்டத்தில் ஈடுபடுபவளை ''மரணப் பெண்'' என்று மலினப்படுத்தல் ஒரு பொறுப்பற்ற செயல்.

### பெண் புலிகள் தீர்மானம் எடுக்க முடியுமா?

இயக்கத்தில் தீர்மானங்களை எடுப்பதில் பெண்புலிகள் பங்களிப்பதில்லை, ஆண்களின் ஆணையை நிறைவேற்றுதலே அவர்களது கடமை என்றவாறு ரா.குவின் வாதம் செல்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிரணி, மகளிர் படையணி, கடற்புலிகள் பெண்கள் பிரிவு, நளாயினி நீரடி நீச்சல் பிரிவு, அரசியல், பெண்கள் பிரிவு, செஞ்சோலை மகளிர் வித்தியாலயம் போன்றவற்றில் பொறுப்பாளர்களாகவும், தளபதிகளாகவும் உயர் அதிகாரிகளாகவும், இருப்பவர்களும், முடிவுகளை எடுப்பவர்களும் பெண்களே. ஆனால் பொதுவான இயக்கச் செயல்பாடுகளில், ஆண், பெண் வேறுபாடு இன்றி, தலைமைபடி முறையின் பிரகாரமே கட்டளையும், கீழ்ப்படிதலும் இடம் பெறுகிறது. இப்படிமுறையின் பிரகாரம் இயக்கத்தின் எல்லா மட்டங்களிலும் பெண்கள் ஆலோசனை அளிப்பதிலும், தீர்மானம் எடுப்பதிலும் பங்கு வகிக்கிறார்கள். (உ+ம்) விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பைப் பொறுத்தவரை பெண் ஒருவரே பொறுப்பாளராக இருப்பதால் ஆண், பெண் இருபாலாரும் அவரது தீர்மானங்களை நிறைவேற்றக்கடமைப்பட்டுள்ளனர்.

### ரா.கு. கருத்துக்களில், சிறீலங்காவின் பிரச்சார வாடை

ரா.குவின் பல கருத்துக்களில் சிறீலங்கா அரசாங்கத்தின் பிரச்சார வாடை வீசுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. பெண்களைப் பலவந்தமாக ஆட்சேர்த்தல் விடுதலைப் புலிகள் வரலாற்றில் எந்தக் காலத்திலும் நடைபெறாத விடயம். இராணுவ முகாம்கள் மீதான முதல் அலைத்தாக்குதலில் பெண்கள் துப்பாக்கித் தீனியாகப் (Callom fodder) பயன்படல் என்பது சிறீலங்காவின் பிரச்சாரத்திலிருந்து பொறுக்கப்பட்டது. குறைந்த மக்கள் தொகையைக் கொண்ட தமிழீழ தேசத்தின் கெரில்லா இராணுவம் அலை, அலையாகத் தாக்குதலை நடத்துகிறது என்பது நம்பக்கூடிய விஷயமா? சிறீலங்கா அரச நண்பர்கள் கூட இப்பிரச்சாரங்களின் நம்பகத்தன்மை குறித்துக் கேள்வி எழுப்புகிறார்கள். போராளிகள் இவ்வாறு அலை அலையாக இறக்க விடுதலைப் புலிகள் இயக்கம் நிர்ப்பந்திக்கிறது என்பதே இப்பிரச்சாரத்தின் தொனிப்பொருள். அப்படி இறப்பவர்களில் பெண்களின் விகிதாசாரம் குறைவாக இருப்பதால் , பெண்களின் சமத்துவம் இயக்கத்தில் பேணப்படவில்லை என்பதே ரா.குவின் வாதம். இது ஒரு வக்கிரமான வாதம். சண்டையின்போதான பெண்களின் மரண விகிதாசாரத்தை வைத்து தான் அவர்கள்து சமத்துவம் கணிக்கப்பட வேண்டுமா? தமிழ் மக்கள் அகதியாவதற்கு விடுதலைப் புலிகளின் போராட்டமே காரணம் என்று ரா.கு கூறுவது சிங்கள ஒடுக்குமுறை என்ற முழுப்பூசனிக்காயை சோற்றில் மறைக்கும் முயற்சியாகும். ஒட்டு மொத்தமாக ரா.குவின் கட்டுரைகள் பெண் புலிகள் பற்றிய உண்மைகளை மறைத்து இருட்டடிப்புச் செய்யவே பயன்பட்டுள்ளன. இறுதியில் பெண் போராளியான அம்புலி, வெளிச்சம் 50வது இதழில் ''நான் எப்பொழுதும் மரணிக்கவில்லை.'' என்ற தலைப்பில் எழுதிய கவிதையுடன் இக்கட்டுரையை முடிக்கிறேன்.

*யுத்தம் எனக்குப் பிடிக்கவில்லை.*
*குண்டு மழைக் குளிப்பில்*
*குருதியுறைந்த வீதிகளில்*
*பிணவாடை கலந்த*
*சுவாசிப்புகளில்*
*வெறுப்படைகிறேன்.*
*நரம்புகள் அறுந்து, தசைகள்*
*பிய்ந்த*
*மனிதர்களின் கோரச் சாவுகண்டு*
*என் மனங் குமுறுகின்றது.*
*துப்பாக்கி முழக்கத்திடையே*
*விழித்துக்கொள்ளும்*
*ஒவ்வொரு காலையையும்*
*என்னால் இரசிக்க*
*முடியவில்லை.*
*வசந்தம் கருகிப்போன*
*வருடங்களாய்*
*விரிந்துள்ள எம் வாழ்வு.*
*எப்பொழுதும் யுத்தம் எனக்குப்*
*பிடிப்பதில்லை.*

*ஆயினும் அதன்*
*முழக்கத்திடையே நான்*
*காலம் நிர்ப்பந்திப்பதில்*
*எனது கோலம் மாற்றமடைந்தது,*
*சிவந்து கனியும் சுடுகலன்*
*குறிகாட்டி ஊடே*
*குண்டுகளின் எதிர்வோசை*
*கேட்காத*
*ஒரு தேசத்தை இங்கே*
*தேடுகிறேன்.*
*வெறிச்சோடிப்போன வீதிகளிலும்*
*முட்புதர் படர்ந்த வயல்களிலும்*
*மீண்டுங் குதூகலம் கொப்பளிக்க*
*ஒரு மயானத்திலிருந்து*
*மீட்டெடுக்கப்பட்ட*
*மகிழ்வோடு பூரிக்கும் - என்*
*தேசத்தைத் தேடிக் கால்கள்*
*விரைகின்றன.*

*ஆயினும் ஒரு வண்ணத்துப்*
*பூச்சியின் சிறகடிப்பில்*
*எனை மறக்கவும்*
*ஒரு குழந்தையை*
*மென்மையாகத் தாலாட்டவும்*
*என்னால் முடியும்.*
*குளத்தடி மரநிழலில்*
*எனது புல்லாங்குழலைத் தழுவும்*
*காற்றோடு கதைபேச நான்*
*தயார்.*
*நிம்மதியான பூமியில் நித்திரை*
*கொள்ள*
*எனக்கும் விருப்புண்டு.*
*எனது மரத்துப்போன*
*கரங்களுக்குள் பாய்வது*
*துடிப்புள்ள இரத்தம்*
*வெறும் இடியும் முழக்கமுமல்ல*
*நான்,*
*நான் இன்னமும்*
*மரணிக்கவில்லை.*
*எப்பொழுதும்...*

– வசாவன்



**"சிவந்து கனியும்
சுடுகலன் குறிகாட்டி ஊடே
குண்டுகளின் எதிர்வோசை கேட்காத
ஒரு தேசத்தை இங்கே
தேடுகிறேன்"**

**- பெண் போராளி அம்புலி**

## பிளவுண்ட..

செல்லும் ஆன்ம நுட்பமாகவோ புரிந்து கொண்டிருக்கிற தமிழ்ச் சூழலின் மதிப்பீடுகளிலிருந்து வேறானது. புதிய விமர்சன மதிப்பீடுகளையும் ஆழ்ந்த படிப்பையும் வேண்டி நிற்பது.

ஆயிரமாண்டுப் பாரம்பரியம் அகநானூறு புறநானூறு ஆன்ம விசாரம் என்று மட்டும் சொற்களை வீசிக் கொண்டிருப்பது காணாது. பொதுவாக புலம்பெயர் பகையிலாளர்கள் அதிகமாக கவனம் எடுத்த தற்கான காரணம் ஆதார நாட்டவர்களிடம் பிற மனிதரைப் புரிந்து கொள்வதிலும் மனமோ தேட்டமோ இல்லை என்பது தான்.

புலம்பெயர் எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்க சிறுகதைகளை எழுதியிருக்கும் நா. கண்ணன் கூட ✻ புலம்பெயர் எழுத்தாளர்களின் படைப்புக்களை அணுக புதிய மதிப்பீடுகள் வேண்டும் என்கிறார்.

தமிழ் மொழியில் தமிழகத்திலிருந்தோ/ ஈழத்திலிருந்தோ எழுதுகிற படைப்பாளிகள் கையாலும் மொழிக்கு உடனடியாகவோ ஈராயிரம் ஆண்டு செழுமையான பின்புலமும், வாசகன் உடனடியாக உள்நுழைவதற்கான களம் கிடைத்து விடுகிறது. ஆனால் புலம்பெயர் எழுத்தாளர் எழுதும் தமிழ் புலம் பெயர்ந்த சூழலில், நிலப்பரப்பில், சீதோஷண நிலையில் அனுபவத்தில் விளையும் தமிழ் இதில் ஆதார நாட்டுத் தமிழ் வாசகனோ/ விமர்சகர்னோ நுழைவதற்கு இருதரப்பாருமே முயற்சி செய்ய வேண்டும். இதனால்தான் புலம்பெயர் எழுத்துக்களில் விஸ்தாரணமான விவரணங்கள் இடம்பெறுகின்றன. ஆதார நாட்டவரும் தமது தேடலை அதிகப்படுத்திக்கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது. இதனால் விளைவது தமிழுக்கு புதிய வரவாக இருக்கும். தமிழை உலக இலக்கியப் பரப்புக்குகொண்டு போகிற முயற்சிகளில் ஒன்றாக அமையும்.

ரவியின் செட்டை கழற்றிய நாங்கள் தொகுப்பிலுள்ள கவிதைகள் மட்டுமல்ல அனைத்து புலம் பெயர் எழுத்தாளர்களதும் படைப்புக்கள் இவ்வகையிலேயே அணுகப்பட வேண்டும். இவ்வகையில் ரவியின் கவிதைகள் தேசவிடுதலைப் போராட்ட அனுபவங்கள் ரணங்கள் போன்றவைகளையும் தாண்டி புலம் பெயர் தமிழரின் வேதனையான அனுபவங்கள் நினைவுகள் ஊடாக தமிழ் இலக்கியத்தின் எல்லைகளை விரிவுப்படுத்தியிருக்கின்றன.

எல்லாப் புலம்பெயர் படைப்பாளர்களினதும் படைப்புக்கள் போலவே ரவியின் கவிதைகளும் இரண்டு விசயங்களை வேண்டி நிற்கின்றன.

1. சக மனிதனை நிதானமாகப் புரிந்து கொள்ளும் ஆழ்ந்த மனம்.

2. புலம் பெயர் படைப்பாளிகள் பற்றிய புதிய விமர்சன மதிப்பீடுகள்.

ஆழ்ந்த விவாதங்களும், படிப்பும் கருத்தாடல்களும், இதுகுறித்து மேற்கொள்ளப்படும் போது இருப்பதியோராம் நூற்றாண்டில் தமிழ் சிந்தனை நுழைவது வாய்ப்பா இல்லையா என்பது குறித்த சர்ச்சைக்கான காரணங்கள் அறவே இல்லாது போய்விடும்.

✻ உரையாடலின் ஆரம்ப அபிப்பிராயங்கள் நா. கண்ணனுடையவை. அதையொட்டி நடைபெற்ற தொலைபேசி உரையாடலை இங்கு பாவித்திருக்கிறேன். கண்ணனுக்கு நன்றி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆபிரிக்கா ஒரு பழைய கண்டம்.
எனது வாழ்வின் ஒரு பகுதி இந்தக்
கண்டத்திலும் உள்ளது.
உலகம் எல்லைகள் அற்றது எனக் கருதும்
எனது பேனாவின் முதலாவது
ஆபிரிக்கப் பதிவே ''கறுப்பு''.

## ஆபிரிக்கச் சிறுகதை



# கறுப்பு

**க. கலாமோகன்**

அசைவுகளில் எனது மனதை அடைவு வைக்கின்றேன். போர்க்கால வெக்கைகளை மறந்து ஓர் தியான காலத்துள் நுழைவதில் உள்ள சுகத்திற்கு ஈடாக எதுவும் உண்டா? வாழ்வு தூரத்தில் உள்ளது, விழிகளிற்கு முன்னாலோ எல்லைகள். கனவுகளைச் சேமிக்கத் துடித்த எனது மனதின் வேட்கை இன்னமும் அடங்க வில்லை. கறுப்புக் காட்டிற்குள் நான் வலை வீசிப் பிடித்தது எனது கடைசிக் கனவா? அல்லது கனவினால் நான் வலை வீசிப் பிடிக்கப் பட்டேனா? தூரத்துக் கனவுகளைத் தலையணை யாக்கித் தூங்கி மகிழ்ந்த எனது தியான மனத்தினைச் சிறைக்குள் தள்ளுதல் சரியானதா? மனமே! அசை! அசை! எல்லைகளின் அருகே நின்று உனது தியானத்தையும் தேடலையும் தொடர்., மனதைத் தாங்கும் உடல் வாகனமே, அசை! அசை! எனது மன தியானத்தைக் காவாந்து செய்!

✱

வாழ்வு வரும்!
வாழ்வு போம்!
எல்லைகள் அழியும் காலம்
எப்போது வருமாம்?

(ஓர் அகதிப் பாடல்)

✱

முதலாவது இரவிலே அவளிடம் நான் நீ கன்னி கழிந்தவளா கன்னி கழியாதவளா என்று கேட்க வில்லை. நான் எங்கேயோ இருந்தேன். தேக சுகத்தை நத்தும் அவளிடம் குறுக்கு விசாரணை செய்தல் எனது தர்ம சாம்ராஜ்யத்தில் தண்டிக்கப் பட்ட விஷயம். மோகவலைக்குள் வீழ்ந்த பின்னர் தேடுவதற்கும் பரிசோதிப்பதற்கும் ஏதாவது உண்டா? வாழ்வே தியானமாகிப் போய் விடுகின்றது.

இச்சைகள் சப்தங்களாகி வலையை மூச்சுத் திணற வைத்தன. அது ஓர் வெள்ளை வலை. நான் அதனைத் திறந்தேன்.

''வலையை மூடுங்கள்!'' மிகவும் இதமாகவே சொல்கிறாள்.

''ஏன் வலையை மூட வேண்டும்? எமது சப்தங்களை வெளி சுவாசிப்பதில் உனக்கு விருப்பமில்லையா?''

ஓர் மர்மப் புன்னகையோடு, ''நுளம்புகள் உள்ளே வந்து விடும்'' என்கிற அவளது உதட்டின் அசைவை ரசிக்கின்றேன்.

''ஓ! நுளம்புகளை நான் மறந்தே விட்டேன்!''

நுளம்புகளை மட்டுமல்ல, இது எமது முதலாவது இரவுமல்ல என்பதைக் கூட நான் மறந்துதான் விட்டேன்.

மாலி தேசம் புகையிலையை ஏற்றுமதி செய்கின்றது, பஞ்சை ஏற்றுமதி செய்கின்றது, கச்சான்களை ஏற்றுமதி செய்கின்றது. முறைப்படி பார்த்தால் அது ஏற்றுமதி செய்யவேண்டிய முதலாவது உற்பத்தி நுளம்புதான்.

இது எமது முதலாவது இரவு, இது எமது முதலாவது இரவுமல்ல, எமது முதலாவது இரவோ இன்னொரு தினத்தில் தொடங்கியது. அந்த தினத்தில் சங்கீதக் கச்சேரி செய்தவை நுளம்புகளே, ஏனெனில் எங்களிடம் வலை இருக்கவில்லை.

முக்கியமான ஒரு கட்டத்தில், தேக சுகத்தின் பிரதானமான கணம் ஒன்றில் - நுளம்பு ஒன்று வந்து எனது காதிற்குள் கச்சேரி செய்கின்றது. அது அபசுரம்.

''நுளம்பு எனது காதைக் கடித்து விட்டது'' என்கின்றேன்.

அவள் எக்காளமிட்டுச் சிரித்துவிட்டு - ''இது பிரான்ஸ் அல்ல, இது மாலி. நிறைய நுளம்புகள் உள்ளன.'' என்றபடி எழுந்து சுவர்களில் பதுங்கி நிற்கும் நுளம்புகளைத் தனது பதுமைக் கைகளால் அடித்துக் கொல்கின்றாள். நுளம்பு களின் கடைசி மூச்சை மறந்து அவளது பிருஷ்ட அசைவை ரசிக்கின்றேன். இந்த வேளையில் கொழுத்த நுளம்பு வந்து அவளது பிருஷ்டத்தில் குத்துகின்றது. ஓர் அடி கொடுக்கின்றேன். அவள் திகைத்து விட்டாள்.

''உனது அழகிய பிருஷ்டத்தைக் காக்க, ஓர் நுளம்பைக் கொன்றேன்.''

அவள் என்னை முத்தமிடுகிறாள். எனது மார்பில் அவளது மார்பு விழுகின்றது. உதடுகள் சப்திக்க, நுளம்புகள் தற்காலிகமாக ஒழித்துக் கொள்கின்றன.

''நாளை வலை வாங்குவோம்''. - இது அவள்.

''ஏன்?''

''நுளம்புகளின் தொல்லையில் இருந்து தப்ப...''

''வலைகளிற்கு வெளியே இருந்து நுளம்புகள் எங்களைக் கண்காணித்தால்...?''

''வாழ்வு இதுதான். கண்காணிப்புகள் தொடர லாம். அவைகளை மறந்தால் மட்டுமே வாழ்வு சித்திக்கும். எனது காதலனே! என்னை அணை! நுளம்புகளை மற. நாளை நாங்கள் வலைக்குள் வாழ்வோம்!''

அவள் கதை சொன்னாளா, கவிதை சொன்னாளா என்ற விசாரணைக்குள் நான் ஈடுபடவில்லை. கலவிக் கூடத்தில் நுளம்புகளை மறந்து காலம் வாழ்ந்தோம். காலையில் விழித்தால் எனதும் அவளது உடலிலும் காயங்கள் இருந்தன. ஓர் போர் முனையிலி ருந்து திரும்பி வந்துளோம் என நினைத்துக் கொண்டேன்.

✱

இந்த இரவுப் போர்கள் மர்மமானவை.
இந்தப் போர்களின் காயங்கள் கூட
சுவையானவை....
வேறு போர்களை நாம்
தேடுவது எதற்காம்?

(ஓர் அகதிப் பாடல்)

✱

கறுப்பு தேசத்தில், குழந்தைகள் பிளாஸ்டிக் பாக்கெட்டுகளிலே தண்ணீர் விற்கின்றன. எவ்வளவு அழகிய குழந்தைகள்! எவ்வளவு அழகிய முகங்கள்! உலகின் எந்த பியர்களுமே அந்த தண்ணீரின் சுவைக்கு ஈடுதரா. இவை எனது குழந்தைகள். எனது கவிதைகள். எனது கனவுகள். எனது கறுப்புக் குழந்தைகளின் விழிகளிற்கு உலகம் தெரியாது. வானம் தெரியும். வாழ்வு தெரியும், காலம் தெரியும்... மாலியில் எனது குழந்தைகளிடம் நான் ஜி (பம்பாரா மொழியில் தண்ணீர்) குடித்தேன்.

✱

நானும் எனது மனைவியும் டோகன் நகரினைப் பார்க்கச் செல்கின்றோம். பயணம் சுலபமான தல்ல. வாகனத்தில் நாங்கள் இருத்தி வைக்கப் பட்டோம் என்பதைக் காட்டிலும் அடுக்கி வைக்கப்பட்டோம் என்பதே பொருத்தமானது. அடிக்கடி வாகனம் நிற்கும், பொலிஸ் கொண்ட் ரோல்கள் நடக்கும். பின் வாகனம் ஊரும். எனது குழந்தைகள் தண்ணீர் பாக்கெட்டுகளுடன் நிற்பர். குடிப்போம். வாகனம் தனது பயணத் தைத் தொடரும்....

டோகன் நகரினது சிறிய கிராமமான சொங்கோவின் மலைவளத்தில் எனது மனம் தோய்ந்தது. மனைவியுடன் மலை உச்சி வரை செல்ல ஓர் அவா....

''உனக்கு மலையில் ஏற விருப்பமா?''

''ஆம்'' என்கின்றாள்.

கிராம வாசல் காவலன் தடை விதிக்கின்றான். எனக்கல்ல, எனது மனைவிக்கு.

''ஏன்?''

''இந்த மலை புனிதமானது. நிறைய மர்மங்கள் உள்ளன. எமது மூதாதையர்களின் அறிவுறுத்தல் களின்படி - மலையில் ஆண்கள் மட்டுமே ஏறலாம். பெண்கள் ஏற முடியாது. முடிந்தால் அவள் கிராமத்தைச் சுற்றிப் பார்க்கலாம், அல்லது வாசலில் இருக்கலாம். நீங்கள் என்னோடு மலை உச்சி வரை வரலாம்''

மலை அடிவாரமும் மலை உச்சியும் ஒன்றல்ல. ஒவ்வொரு தளத்தில் நிற்கின்ற போதும் - ஒவ்வொன்றும் எங்களிற்கு வித்தியாசமாகப் படும். உச்சியில் நின்றபோது - அடிவாரத்தில் எங்காவது ஓரிடத்தில் எனது மனைவியை தேடினேன். கலங்கிக் கொள்ளவில்லை. சொங்கோ கிராமத்தின் சிறிய வீதிகளுக்குள் நுழைந்தோரை - உச்சியில் இருந்து தேடுதல் சுலபமானதா? களஞ்சியக் குடில்களால் விதைக்கப்பட்ட சொங்கோ நகரம் - கொதி வெயிலால் மூடப்பட்டு ஓர் தங்கநகராக எனக்குக் காட்சி தந்தது. தங்க நகரின் மத்தியிலே ஓர் அழகிய மண் மசூதி. அதற்கு முன்னால் உள்ள பஞ்சாயத்தில் தான் நானும் எனது மனைவியும் ஓர் நூற்றுரெண்டு வயதுக் கிழவரால் ஆசீர்வதிக்கப்பட்டோம்.

✱

அவர்களிடம் பணம் இல்லை,
மனம் உள்ளது,
அவர்களிடம் அவாக்கள் இல்லை,
அதிகாரங்களும் இல்லை,
சுத்தமான புன்னகை உள்ளது.
சில தினங்களில் அவர்களது வயிறுகள்
வெறுமையாகவே இருக்கும்....
தண்ணீர் குடிப்பர்.
கோலாப் பாக்குகளை
மிகவும் அமைதியாக உண்பர்.
நிலத்தைப் பார்ப்பர்,
வானத்தைப் பார்ப்பர் -
அவர்களது விழிகளுக்குள்
சிலவேளைகளில்,
நான் சில விஷயங்களைத் தேடினேன்.

(ஓர் அகதிப் பாடல்)

சொங்கோ மலையின் உச்சியில் சில விஷயங் கள் எனக்கு மர்மமானவையாகப்பட்டன. மலை யின் ஓர் குகைக்குள் மிகவும் பழைய இசைக் கருவிகளைக் கண்டு அதிசயித்தேன்.

''இந்த இசைக் கருவிகளை எனக்காக ஒரு தடவை வாசித்துக் காட்ட முடியுமா?''

கிராமக் காவலன் என்னை வியப்புடன் பார்த்தான்.

''உங்களிற்கு இந்தக் கருவிகளை வாசிக்கத் தெரியாதா?'' கேட்கின்றேன்.

''தெரியாது. தெரிந்தால் கூட இந்தக் காலத்தில், இவைகளை வாசித்தல் தடை செய்யப் பட்டுள்ளது''

''ஏன்?''

''இந்தக் கருவிகளை வாசிப்பதற்கென்று தனியாகச் சிலர் உள்ளனர். வருடத்திற்கு ஒரு தடவை, இந்தக் குகைக்கு அருகில் தான் சுன்னத்துக் கலியாணம் நடைபெறும். அந்தக் காலத்தில் மட்டும்தான் இவைகளை வாசிக் கலாம். வேறு காலங்களில் இசைத்தால் கர்ப் பிணிப் பெண்களின் கரு அழிந்து விடும்...''

வாழ்வின் மூலங்களை விளங்க அதீத விளக்கங்கள் தேவையில்லை. இருத்தலினது அர்த்தங்கள் மர்மமானவை. - இந்த மர்மப் பெட்டிகளின் மீது படிந்திருக்கும் தூசியைத் துடைத்தல் எனது தேடலும் அல்ல, எனது தர்மமும் அல்ல.

✱

டோகன் நகர இரவுகள்
வெளிச்சங்கள் இல்லாதவை
கறுப்பு ஓடத்தில் பயணம் செய்ய
எனக்குக் கடலும் தேவையில்லை.
வெளிச்சமும் தேவையில்லை

(ஓர் அகதிப் பாடல்)

✱

ஓர் புனித யாத்திரையை முடித்துக்கொண்டு நாங்கள் பமாக்கோ திரும்புகின்றோம். தலைநகர் பெரிய மசூதியின் தொழுகை ஒலியே எங்களை வரவேற்கின்றது. சங்காவிலிருந்து பமாக்கோ வரை வந்த தக்காளிப்பழ மூட்டை நசியாமல் இருப்பதைக் கண்டு அதிசயிக்கின் றேன். திடுதிப்பென இனம்புரியாத தனிமை உணர்வொன்று என்னைத் தொடுகின்றது. இன்னமும் இரண்டு நாள்களில் நான் பாரிஸ் திரும்பி விடவேண்டும். இது விமானப் பயண விதி. இன்னும் இரண்டே இரண்டுதினங்கள். இவைகளை வாழுதல் சாத்தியமானதா. இரண்டு தினங்களிலே மின் கதிரையில் தனது உடல் கருகும். எனத் திட்டவட்டமாகத் தெரிந்த ஓர் மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதியின் மனநிலையில் நான் இருந்தேன்.

நான் தண்டிக்கப்பட்டவனா? நிச்சயமாக, ஏனெனில் நான் ஓர் அகதி. எனது முகமாற்றம் மனைவியைக் கலவரப்படுத்தி விட்டது.

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உறவு

''என்ன நடந்தது? ஏன் உங்களது முகம் இப்படி மாறி விட்டது?''

எப்படிப் பதில் சொல்வது. தூரம் தூரமில்லாது போய் மீண்டும் தூரமாகும் போது உதடுகளைத் திறப்பது எப்படியாம்!

வீடு வந்ததும் சற்றே தூங்குகின்றோம். அவள் என்னைத் தழுவுகின்றாள். - கலவி உணர்வின் கோலங்கள் எனக்கு மர்மமானவையாகப் படுகின்றன. அவள் கொஞ்சுகின்றாள்.

''எஞ்சியிருப்பவை இரண்டு தினங்கள் மட்டுமே. இவைகளை வீணாக்குவதா?''

''உனது கேள்வி எனக்கு விளங்குகின்றது. இந்தக் கடைசி இரண்டு தினங்களிலும் நீ தேடுவது அவாக்கள் அல்ல. ஒரு வேளை நீ பலமானவள், நானோ பலவீனன். ஆனால் நீயே எனது காலம்.''

''நீ உனது விழிகளுக்குள் மறைத்து வைத்திருப்பது எனக்குத் தெரியும், நான் எனது விழிகளுக்குள் மறைத்து வைத்திருப்பது உனக்குத் தெரியுமா?''

''நான் மறைத்து வைத்திருப்பது எது?''

''கண்ணீர்''

''நீயும் மறைத்து வைத்திருப்பது அது தான்''

''என்னை அணை! என்னை முத்தமிடு! என்னை வாழ்!'

அவளது கட்டளைகளிற்கு முன் சிரம் தாழ்த்து கின்றேன்.

*

சேனு விமான நிலையத்தை விட்டு விமான மொன்று பாரிஸ் நோக்கிப் பறக்கின்றது. நான் அதற்குள் கண்ணாடிக் கதவு வழியாக அந்த இரவிலும் அவளைத் தேடுகின்றேன். இன்னும் ஒரு தடவை அவளது முகத்தைப் பார்ப் பதற்கு.... ஆம். அவளது கறுப்பு முகத்தைப் பார்ப்பதற்கு... நைகர் நதிக் கரையில், ஓர் ஓடத்திற்கு அருகே அவளது கறுப்பு முகம் - எனக்கு மட்டுமே தெரிந்தது.



கடல் ஏங்கி கரை தழுவ பார்த்து
உடல் உள் இருந்து தவித்தெழுந்த ஆத்மா
மெய் இறங்கி உன் விழி தேடி வருகிறது.
பொய் எது மெய் எது
போதிமாதவச் சிரிப்பெது என்றறியா
மென் மயிர் பூனை போல் ஏங்கி நடந்த் என் இதயம்
உன் மார்பில் அணைகிறது.
முலை தழுவி முன் நெற்றி மயிர் ஒதுக்கி
முத்தமிட்டு உன் சிறு உதட்டு சாரலையும் -
- தாவென்று தவித்து
பெண்மையும் ஆண்மையும் பெயர் அழியும்
காலத்துள் போய் வர, வா! என்று கேட்பேன்
. கேசம் கலைந்து கிடந்த உன் கழுத்தில்
புதைந்து புதைந்து
நீளம் படர்ந்த நெடுவான முடிவுக்கும் போவேன்

மெய்யும் காதலும் ஒன்றென்று
உயிர் சுடர்கிறது .

15.07.97

தேவஅபிரா



கிழக்கும் மேற்கும்

*வெளியீடு:*
*தமிழர் நலன்புரிசச்சங்கம்,*
*லண்டன்*

லண்டனில் இயங்கும் தமிழர் நலன்புரிச் சங்கம் (நியூஹாம்) வெளியிட்டுள்ள புலம் பெயர்ந்து உலகெங்கும் பரந்து வாழும் தமிழர் படைப்புக்களின் தொகுப்பான கிழக்கும் மேற்கும் காணக் கிடைத்தது.

இ. பத்மநாப ஐயர் இதன் தொகுப்பாளர். வி. ஜனார்த்தன் - எம். ஜெயகுமாரன், கே.கிருஷ் ணராஜா, எம்.புஸ்பராஜா, யமுனா ரஜேந்திரன் ஆகியோர் ஆசிரியர் குழுவில் உள்ளனர்.

முகப்போவியம் ஆக்கங்களுக்கான ஓவியங் கள் என்பவற்றை கே. கிருஷ்ணராஜா சிறப்பாக வரைந்துள்ளதோடு, வடிவமைப் பையும் செய்துள்ளார்.

இலங்கை, இந்தியா உட்பட இங்கிலாந்து, சுவிற்சர்லாந்து, டென்மார்க், நோர்வே, பிரான்ஸ், கென்யா, கனடா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற பல்வேறு நாடுகளிலும் வாழுகின்ற தமிழ்ப் படைப்பாளிகளின் படைப் புக்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

இலங்கையிலிருந்து மு. பொன்னம்பலம், சு. வில்வரெத்தினம், சூதிலம், முல்லை அமுதன், இந்தியாவிலிருந்து இந்திரா பார்த்தசாரதி, மனுஷ்யபுத்திரன், ஜெயமோகன்.

இங்கிலாந்திலிருந்து யமுனா ராஜேந்திரன், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், சி. சிவசேகரம், ஜெர்மனியிலிருந்து பார்த்திபன், அ. இரவி என பெயர் பெற்றவர் களும் புதிய வர்களுமாக 50 பேர்வரை எழுதியுள்ளனர்.

கிழக்கும் மேற்கும் தொகுப்பில் 11 கட்டுரைகள், 19 சிறுகதைகள் 15 கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளதோடு ஆக்கங்களுக்கா னவை தவிர கறுப்பு வெள்ளையில் ஓவி யங்கள் ஐந்தும், புகைப்படங்கள் 12உம் இடம்பெற்றுள்ளன.


நமது கலை இலக்கிய முயற்சிகளில் பொதுவாக ஓவியக் கலைக்கும் குறிப்பாக புகைப்படக் கலைக்கும் முக்கியத்துவம் குறைவாக உள்ள இக்காலகட்டத்தில் இத் தொகுப்பில் அதிகளவு புகைப்படங்கள் இடம் பெற்றிருப்பது தொகுப்புக்கு சிறப்பைக் கொடுக்கின்றது.

ஓவியங்களில் மக்கா -3(நோர்வே), போஸ் -4 சுவிற்சர்லாந்து, புகைப் படங்களில் சாந்த குணம் - 2 (இங்கிலாந்து), காயத்திரி கொன் ஸ்ரன்ரைன் -3 (இங்கிலாந்து), செல்வராஜா குணாளன் -7(இங்கிலாந்து) இடம் பெற்றுள்ளன.

படைப்புக்களில் புலம்பெயர்ந்த வாழ்வின் அனுபவங்கள், அவலங்கள், தாய்நாட்டின் நினைவுகள் பதிவாகியுள்ளன.

புலம்பெயர் வாழ்வில் தமிழ் மொழிக் கல்வி அதைக் காப்பதிலுள்ள பிரச்சினைகள் புலம்பெயர் சர்வதேச இலக்கியம், பெண்நிலை வாதம், என்பன போன்ற பல தரப்பட்ட விஷயங்கள் வெளிப் படுகின்றன.

***சசி - மகரிஷி***



இளங்கதிர்
*(30வது ஆண்டு மலர்)*
*வெளியீடு: தமிழ்ச் சங்கம்*
*பேராதனைப் பல்கலைக்கழகம்,*
*பேராதனை.*

சிறுகதை, கவிதை, சமூக கலை இலக்கிய அறிவியல் சார்ந்த, நேர்காணல், உளவியல், இளம் தலைமுறையினரின் பல்வேறுபட்ட பிரச்சினைகள், முரண்பாடுகள், அமைதியின் மைக்கான காரணிகள், வழமையான வாழ்த்துக்கள் என்று பல்வேறுபட்ட விடயங் களை 148 பக்கங்களில் உள்ளடக்கி வெளிவந் திருக்கிறது பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கத்தின் 30வது ஆண்டு மலர்.

சமகால நிகழ்வுகளை சுட்டிக் காட்டும் சிறுகதைகள், முகமூடியின் எட்டாத்தொலை வில் இருந்தோர் கீதம், யோ.அன்டனி ஜுட்டின் வண்டித் தடம் கவிதைகள் சிறப்பும் செழுமையும் கொண்டவை.

ஐந்து சிறுகதைகளையும், இன்றைய எமது சமகால வாழ்வியலின் ஒவ்வொரு போக்குக ளையும் சிறப்பாக எடுத்து இயம்புகின்றன. 1970களில் ஈழத்தின் எழுத்துப்போக்கு, மட்டக்களப்பும் தமிழர்களும் சிறப்பான விடயங்களெனினும் குறுகிப்போகின்ற ஓர் நிகழ்வைத் தவிர்த்திருக்கலாம்.

உயிரியல் தொழில் நுட்பம், இன்டர் நெற் பத்திரிகைத் துறையின் வெட்டுமுகம், பித்தன் கதைகளிற் சமூகநோக்கு, கண்ணிக்கும் தமிழுக் கும் பாலம் அமைப்போம், எல்லாமே போலி களா, இனிவரும் தசாப்தம் என்ன கொண்டு வரும் என்பன அனைவரும் படித்து பயன் பெற வேண்டிய விடயங்களேயாகும்.

மற்றும் கா. சிவத்தம்பி, க. அருணாசலம், சி. தில்லைநாதன், அம்பலவாணர் சிவராசா, மல்லிகா ராஜரத்தினம் ஆகியோரும் எழுதி யுள்ளனர்.

இதைவிட இலங்கையில் தமிழ் முஸ்லிம், உறவு, கவிதைபற்றிக் கதைப்போம், நாடகப் பட்டறையும், அதன் எதிரொலிகளும், பி.ஆர். சரத் சந்திராவின் குறிப்புகள் எனப் பல்வேறு பட்ட விடயங்களுடன் இளங்கதிர் வந்துள்ளது.

உலகின் அடிமைத்தளையுடைத்து புதிதாய் முளைத்தெழுகிற முன்பக்க அட்டைப்படம் அழகாகவும், காத்திரமாகவுமிருக்கிறது. ரெக்னோ பிறின்ட் இன் அச்சுப்பதிவும் வடிவமைப்பும் அண்மைக்காலங்களில் உயர்ந்து கொண்டு செல்வதை இளங்கதிரும் எடுத்துக் காட்கிறது.

அரைநூற்றாண்டு காலத்துக்கு மேலாக பேராதனை பல்கலைக்கழகத்தின் தமிழ் சங்கமும் இளங்கதிரும் ஆற்றிவரும் பங்களிப் பினை புரட்டிப் பார்க்கமால் இருக்க முடியாது.

***பி. ரவிவர்மன்.***



களம் - 8

*(இலக்கிய சஞ்சிகை)*
*கமலகம வீதி,*
*அக்கரைப்பற்று.*

- ஒரு வருட பகீரதப் பிரயத்தனத்தில் மிகுந்த சிரமத்தையும் அதிகரித்த செலவி னையும் உள்வாங்கி வெளிவரும் களம் 8வது இதழை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன். - என்ற பரராஸ் வாரித்தம்பியின் பெருமூச் சோடு களத்தின் 8வது இதழ் வெளிவந் துள்ளது.

பரராஸ் வாரித்தம்பி, அன்ரனி பால்ராஜ் ஆகியோர் களத்தின் இணையாசிரியர்கள்.

8வது களம் நிறைவான ஆக்கங்களோடும் வாசுகி ஜெய்சங்கரின் முகப்பு ஓவியம், சசி மகரிஷி, சிவவரதராஜன், எம்.எப்.ஹுசைன். அ.மாற்கு, அருந்ததி சபாநாதன் ஆகியோரின் உள் ஓவியங்கள் மற்றும் கச்சிதமான அச்சமைப்போடும் காத்திரமாக உள்ளது.

சோலைக்கிளி, மருதமுனை எம். விஜிலி, துளசி, ஜெயசீலன், கல்லூரன், சு.வில்வ ரெத்தினம், மஜீத், வாசுதேவன், கொற்றவை, ஆகர்ஷியா, ஆழியாள், அக்குறணை இளைய அப்துல்லாஹ் ஆகியோரின் கவிதைகளும், என். சண்முகலிங்கன், சி.ஜெய்சங்கர், க.சச்சிதானந்தம் ஆகிய மூவரின் மொழி பெயர்ப்பு கவிதைகளுமாக மொத்தம் 18 கவிதைகள் உள்ளன.

கா. சிவபாலன், கே.எஸ்.சிவகுமர்ரன், சி.ஜெய்சங்கர், அருந்ததி சபாநாதன் கொ.றொ.கொன்ஸ்ரன்ரைன், சி.சிவசேகரம், பாலசுகுமார் ஆகியோர் கட்டுரை களை எழுதி யுள்ளனர்.

சண்முகம் சிவலிங்கத்தின் -காலடி- எனும் குறுநாவலோடு சிவ. வரதராஜனின் -நத்தைச் சுகம்- மு.பொ.வின் -வெட்டு-, ராஜேஸ்வரி பால சுப்பிரமணியத்தின் -நாடகங்கள் தொடரும்- ஆகிய மூன்று சிறுகதைகளும், அனைவரும் ரசிக்கக்கூடிய அன்ரனி பால்ராஜ்ஜின் கிறுக்கலும் கொண்டு (65 பக்கங்கள்) களம் முழு நிறைவு தருகிறது.

முதல் பக்கத்தில் இரு கவிதைகளின் பெயர்கள் குறிப்பிடாமை, ஒரு சில எழுத்துப் பிழைகள் போன்ற அச்சுத்தவறுகள் தவிர முன்னைய இதழ்களைவிட இதழ் 8 முன்னேற்றகரமாகவும் சிறப்பாகவும் உள்ளதென்றே கூற வேண்டும்.

அனேகமாக சிறு சஞ்சிகையாளர்கள் தமது சஞ்சிகையின் தரம் குன்றிவிடுமோ என்ற அச்சத்திலும், பிரபலங்கள் எழுதினால் சஞ்சி கைக்கு மதிப்புண்டு என்ற தப்பான எண்ணத் தினாலும் புதிய இளம் படைப்பாளர்களுக்கு இடம் கொடுப்பதில்லை.

ஆர்வமுடன் எழுத ஆரம்பித்து பிரசுர வாய்ப்புக் கிடைக்காமல் முளையிலேயே கருகிப்போனவர்களும் உண்டு. புதியவர்க ளுக்கு பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் உரிய இடம் கொடுக்குமானால் எதிர்காலத்தில் நாம் ஈழத்து தமிழ் இலக்கியத்தில் இவர்களின் பல நல்ல படைப்புக்களைத் தரிசிக்க முடியும்.

***-சித்திராஞ்சன்***



ஆற்றுகை
(நாடக அரங்கியலுக்கான இதழ்)
ஜனவரி - மார்ச் -1997

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் நாடக அரங்கியலுக்கான இதழ் 3, அரங்க நோக்கில் வேட்டுவ வரி, தார்சீசியசுடன் ஒரு நேர் காணல், பாரம்பரிய கலைகளில் ஒரு பொக்கி சம், குரலசைவே உடலசைவாக, சிங்கள அரங்கின் பிதாமகர் எதிர்வீர சரத்சந்திரா, நிகழ்வும் பதிவும் என பல்வேறுபட்ட கனமான படைப்புகளுடன் வெளிவந்திருக்கிறது.

போர்க்கால சூழலில் மக்களின் அவலங்களை விளக்கும் இடப்பெயர்வு கால அரங்க நிகழ்வுகள்பற்றிய நிகழ்வும்பதிவும்

ஆசிரியர் குழுவினர் அகதிகளின் கதையோடு நமது கதைகளும் ஒரு முகம் தெரியாத நீண்ட இடப்பெயர்வில் சோகத்தை நிறைத்த விட்ட கதையாய்ப் போனது. வேரோடு பிடுங்கி எறியப்பட்ட விருட்சங்களாய் காய்ந்து போனது நமது கதை.

போர்க்கால நிகழ்வுகளின் அரங்க நிகழ்வுக ளையும் மேலும் பல காத்திரமான படைப்புக் களையும் தாங்கி ஆற்றுகை இனியும் தொடர்ந்து வெளிவரட்டும்.

***பி.ரவிவர்மன்***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பின்நவீனத்துவம் : சில விமர்சனக் குறிப்புகள்

இறக்காமம் றவூப்

> "மனிதன் உருவாக்கிய அனைத்து துறைகளும் மனித மேம்பாட்டுக்கும் பண்பாட்டுக்குமே உழைக்கும் போது, இலக்கியம் மாத்திரம் இந்த இலட்சியத்தில் இருந்து பிறழ்ந்து விடவும் கூடாது. பிறழ்ந்து விடவும் முடியாது. மானிடவியல், சமூகவியல், உருவியல் போன்ற அனைத்து துறைகளும் மனித வர்க்கத்தின் முன்னேற்றத்திற்காக பிரயோகிக்கப்படும் போது இலக்கியம் மனித நாகரிகத்தின் நலிவுக்குக் காரணமாக அமைவதை அங்கீகரிக்க முடியாது."

"No man was ever yet a great poet being at the some time profound philosopher - என்ற Goldridgeன் வாசகம் இலக்கியத்தின் உண்மையான நோக்கத்தையும், தாக்கத்தையும் புலப்படுத்துகின்றது. ஆனால் இலக்கியம் பயணித்து வந்த வரலாற்றில் இந்த உண்மை பல பிசகியுள்ளன. விளைவாக, மானுடத்தின் முன்னோக்கிய வளர்ச்சிப் போக்கிற்கும் இலக்கியத்திற்குமிடையிலான இடைத்தொடர்பு புறந்தள்ளப்படுகின்றது.

இலக்கியம் என்பது மனித இனத்தின் அனைத்துலக மொழி, குறிப்பிட்ட கலாசார, பண்பாட்டு வரையறைகளின் கட்டுப்பாடுகளைக் கடந்து மனித இனத்தின் விருப்பு, வெறுப்பு, வேட்கை, குறிக்கோள், எழுச்சி, வளர்ச்சி என்பவற்றை அது எதிரொலிக்கின்றது. எனவேதான், சமுதாயத்தின் இலட்சியவாதமும், சுதந்திரதாகமும் இவ்விலக்கியத்தின் கருப்பொருட்களாக இருந்து வந்துள்ளதை நவீன கால வரலாற்றில் கூட காண்கின்றோம்.

இந்த வகையிலேயே கடந்த கால வரலாற்றின் எல்லாக் காலப்பகுதியிலும் தோன்றிய சமூகவியல் சிந்தனைகளும், கோட்பாடுகளும் இலக்கியத்திற்கான கருப்பொருளையும், உள்ளீட்டையும், போக்கு நிலையையும், அமைப்பியலையும் நிர்ணயிப்பதில் பரஸ்பரம் முண்டியடித்துக்கொண்டு முன்னேறி வந்துள்ளன. அந்த வரிசையிலேயே இலக்கிய உலகம் பல்வேறு காலப்பகுதியிலும் பல இலக்கியம்சார் சிந்தனையாளர்களைத் தரிசிக்க நேர்ந்தது. இவற்றுள் சில சத்திழந்து, சாரமிழந்து செத்து விட்டன. இன்னும் சில உயிர்த்துடிப்போடும் உத்வேகத்துடனும் உலா வருகின்றன. இருப்பியல் வாதம் (Existentialism), இயற்கை வாதம் (Naturalism), எதிர்காலவாதம் (Futuralism), கட்டமைப்பு வாதம் (Structuralism), அகயதார்த்தவாதம் (Surrialism), குறியீட்டு வாதம் (Simbolism), உளவியல் இன்பவாதம் (Psychological hedonism), அறச்சார்பு வாதம் (Moral Relatism), பழைமைவாதம், கற்பனாவாதம், யதார்த்தவாதம், நவீனத்துவம், பின்நவீனத்துவம் (Post Modernism) என்பன இதற்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

மேற்போந்த கோட்பாடுகளில் பல மேற்கத்தேய தத்துவங்களின் அடியாக எழுந்த சிந்தனைகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்றன. ஏனெனில் அவை மேற்கத்தேய கலாசார சூழலிலிருந்து தோன்றியவையாகும்.

நவீன கால தத்துவ வரலாற்றில் கூட இலக்கியம் குறித்த நான்கு முக்கிய கோட்பாடுகள் முன்மொழியப்படுகின்றன.

1. உணர்ச்சிக்கொள்கை.
2. புரட்சிக்கொள்கை.
3. ஒழுக்கக்கொள்கை.
4. கலை கலைக்காகவே எனும் [illegible]ாள்கை.

[illegible]ருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அகயதார்த்தவாதம் (Surrialism) கணிசமான செல்வாக்குச் செலுத்தியது. எனினும் ''சிந்திக்காதே, ஆராயாதே உள்ளத்தின் அக உணர்வுகளோடு பேனையையும் தூரிகையையும் இணைத்து விடு. அங்கேதான் கலை இலக்கியம் ஊற்றெடுக்கிறது.'' என்னும் அதனது உள்ளடக்கம் சமுதாயப் பண்பாட்டு விழுமியங்களுக்கும் உட்பொருளுக்கும் முக்கியத்துவம் கொடுக்க மறுத்ததால் உள்ளத்தின் புறவயத்தாக்கக் காரணிகளை புறந்தள்ளியது. விளைவாக அகயதார்த்தவாதம் அதனது ஊடுருவலை முற்றாக இழக்க நேரிட்டது.

தொடர்ந்து வந்த காலப்பகுதியில் கற்பனாவாதமும், யதார்த்தவாதமும் இலக்கியம் குறித்த இருபெரும் சர்ச்சைக்குரிய வாதங்களாக மாறின. சமூகமாற்றம், சீர்திருத்தம், உருவாக்கம் (Construction) என்பவற்றைப் புறக்கணித்ததன் விளைவாக கற்பனாவாதமும் செல்வாக்கில் தேய்மானம் ஏற்பட்டது. இதே காலத்திலேயே மேற்கிலும் கிழ்க்கிலும் நவீனத்துவத்தின் சிந்தனைகள் ஆழ வேரூன்ற ஆரம்பித்தன. இலக்கிய வரலாற்றில் சர்வ வியாபகத் தன்மை (Globalized) எய்திய ஒரு முக்கிய கோட்பாடே நவீனத்துவம் (Modernism) என்பது மிகையல்ல.

செவ்விலக்கியப் பண்புகளை அடிப்படையாக வைத்து டி. எஸ். எலியெட் முன்னிறுத்திய இலக்கிய வரையறைகளை நவீனத்துவப் படைப்பாளிகள் பெரும்பாலும் ஏற்றுக்கொண்டனர். இறுக்கமும், குறிப்பமைதியும் கொண்ட படிமம், தேவைக்கு மேலான வார்த்தைப் பிரயோகமின்மை, மிகைப்படுத்தலின்மை (Non Exraggrative), என்பன இதன் சிறப்புப் பண்புகளாகும்.

மனித வாழ்க்கையோட்டத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட பல சிறந்த எதிர்பார்க்கைகள் இருபதாம் நூற்றாண்டில் தளர்ந்தன. உலகில் பல புதிய தேவைகளினால் ஜனநாயக முறை உருவானபோது ஏற்பட்ட உற்சாகம் குறைந்து கொண்டு சென்றது. எனவே இலட்சியவாதத்திற்குப் பதிலாக சரிவுகளை அணுகி ஆராய்வதில் படைப்பாளிகளின் கவனம் திரும்பிற்று. அதற்கு நவீனத்துவம் பெரிதும் கைகொடுத்தது. ஒவ்வொரு மொழியும் பல நவீனத்துவ வடிவங்களைப் பெற்றன. மானுட வாழ்வின் சிதிலங்களையும், சிதைவுகளையும் இலக்கிய வடிவங்களூடே காட்சிப்படுத்தப்படலாயிற்று. நவீனத்துவத்துக்கு பின் வந்த காலமான சமகால உலகின் (Contemperory World) இலக்கிய வடிவமாக பின் நவீனத்துவம் (Post Modernism) முகம்காட்டத் தொடங்கியுள்ளது. மேலைத்தேய நாகரிகத்தையும், கலாசாரத்தையும் உள்வாங்கிய பின்நவீனத்துவம் ஒரு தனித்த இலக்கியப்போக்கு என்று கருதப்பட்டாலும் இதன் அடக்குமானம் சில பலவீனப் புள்ளிகளைக் கொண்டுள்ளதாக விமர்சனவியலாளர்கள் கூறுகின்றனர்.

லெஸ்லி பீட்டர் இதன் பிரதிநிதிகளில் முன்னோடியாவார். இவர் தனது ''எல்லைகளைக் கடத்தல், இடைவெளியை நிரப்புதல், பின்நவீனத்துவம்'' (Cross the Border, Close the gap, Post Modernism) எனும் பிரபல்யமான கட்டுரையிலேயே பின்நவீனத்துவம் என்ற பதத்தை முதலில் பயன்படுத்தினார். எந்தெந்த குணங்கள் நவீனத்துவ இலக்கியப் போக்கின் சிறப்பம்சங்களோ அவைதாம் பின் - நவீனத்துவத்தின் எல்லைகள் என லெஸ்லி வரையறை செய்தார். நவீனத்துவ இலக்கியப் போக்கின் பலவீனங்களைக்களைந்து அதற்குப் பிறகு உருவான பிற அறிவுத்துறைகளையும் இணைத்துக்கொண்டு இலக்கிய ஓட்டத்தினை முன்னகர்த்திச் செல்வதற்கானதொரு முயற்சியே பின்நவீனத்துவம் என்பது இவரது கருத்தாகும். எனினும், கீழைத்தேய மொழியியலாளர்களினதும், இலக்கியவாதிகளினதும் விமர்சனங்களை பின்நவீனத்துவம் எதிர்கொள்வது தவிர்க்க முடியாததாகி விட்டது.

பின்நவீனத்துவத்தின் வருகைக்கு பின்னர் நவீனத்துவம் கடுமையான விமர்சனத்திற்குட்பட்டது. மாட்டின் செய்மோர் ஸ்மித் என்பவரின் 'Guide to modern world Literature' என்ற நூல் இதற்கொரு சிறந்த உதாரணமாகும். ''நவீனத்துவம் யதார்த்த வாதத்தை தாண்டிச் செல்கின்றது. அது பாரம்பரியத்தை நிராகரிக்கிறது. அத்துடன் அவமானப்படுத்தும் தன்மை கொண்டது, மனிதாபிமானத்தை புறக்கணிக்கிறது. (De humanization) என்பதெல்லாம் ஸ்மித்தின் விமர்சனக் கணைகளாகும். ஆனால் அதைவிட மேலாக பின் நவீனத்துவம் உள்ளடக்கிய கட்டுக்கோப்பும் அமைப்பியலும் குறிக்கோளும் காரமான விமர்சனத்தை எதிர்நோக்கிய வண்ணம் இருக்கின்றது.

லெஸ்லி பீட்டர் நவீனத்துவ இலக்கியப் படைப்பைத்தாண்டிச் செல்ல புதுப்படைப்பாளிகள் மூன்று விடயங்களை நிராகரிப்பது அவசியம் எனக் கருதினார்.

1. இருத்தலியல் சார்ந்த அணுகுமுறை.
2. ஜனநாயக மனிதாபிமான அணுகுமுறை (Liberal Humanism)
3. நவீனத்துவ விமர்சனப் பார்வைகள்.

இனிமேல் தேவையானது புது விமர்சனமல்ல புதுப்புது விமர்சனம் தான் (New new Criticism) என்றார் பீட்டர். மேலும் இலக்கியம் குறித்த எந்தப் படைப்பும் அல்லது ஆய்வும் இனிமேல் இலக்கியப் படைப்பை சார்ந்ததாக அமையக்கூடாது. மாறாக அவ்வாய்வு அவ்விலக்கிய முயற்சி தோற்றம் பெற்ற சந்தர்ப்ப சூழலை ஏற்றுப்பேசியாக வேண்டும். Not texual but contexual என்பதை அவர் அபரிதமாக வலியுறுத்தினார்.

எனினும் கருப்பொருள் சார்ந்த பின் நவீனத்துவக்கோட்பாடு காரசாரமாக இன்று விமர்சிக்கப்படுகின்றது. இலக்கியத்தின் அடிப்படையில் நோக்கத்தையும் அகநிலையையும் புறந்தள்ளிவிட்டு வெறுமனே மனித இயல்பிற்கும், இலட்சியவாதத்திற்கும் தடையாக உள்ள காரணிகளை பின் நவீனத்துவம் அழுத்தமாக வலியுறுத்துவதே இவ்விமர்சனத்திற்கான காரணமாகும்.

நவீனத்துவம் அல்லது யதார்த்தவாதம் உள்ளடக்கியிருந்த அறிவார்ந்தன்மை, தத்துவார்த்தம், தர்க்கம், என்பவற்றை இலக்கிய ஆக்கங்கள் சார்ந்திருக்கக்கூடாது. அவை கனவுகளுக்கும், தரிசன நிலைகளுக்கும், பித்து நிலைகளுக்கும் மீண்டும் முதலிடம் தரவேண்டும் என்றார் லெஸ்லி பீட்டர். (The Dream, The Vision, The Esctacies, these have again become around the gool of literature) யதார்த்தவாதமும் நவீனத்துவமும் ஆராய்ச்சிக்கும், உபதேசத்திற்கும் அளித்த முக்கியத்துவத்தை பரவசநிலைக்கு தரவில்லை என்று சாடினார் பீட்டர். இலக்கியம் மீண்டும் அதை நோக்கிப் போவதே பின்நவீனத்துவ இலக்கியப் போக்கின் அடிப்படையென்று அவர் வலியுறுத்தினார்.

உண்மையில் இந்தப் பகைப்புலனில் நின்று பார்க்கையில் இலக்கியம் எந்த நோக்கத்தை மையப்படுத்தித் தோன்றியதோ அது பின்நவீனத்துவத்தால் முற்றாகப் புறக்கணிக்கப்படுவதை உணர முடியும் "Art and Literature" என்ற நூலில் Stalin குறிப்பிடுவது போல் 'இலக்கியவாதிகள்' மனித சமூகத்தின் கட்டிட கலைஞர்கள் என்பதற்கு தலைகீழ் அர்த்தம் கொடுக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றது. முழுப் பிரபஞ்சத்தின் சிரேஷ்ட சிருஷ்டியான மனிதன், அவனது இலட்சியவாதம், அதற்கான சுதந்திரம், உரிமைகள் என்பனவெல்லாம் இலக்கியத்திற்கான கருப்பொருளாக அமையும் விதம், மனித இனத்தின் அவலங்களைக் களைந்து வாழ்க்கையை வாஸ்தவமாக்குவதற்கான மைற்கற்களாக இலக்கியப்படைப்புகள் பயன்படவேண்டும். பயன்பட்டுமுள்ளது. சமூக சீர்திருத்தம், மாற்றம், உருவாக்கம் என்பனவற்றை இறுதியடைவுகளாகக் கொண்டு ஒரு சமூகத்தின் அவலத்தையும், ஆதங்கத்தையும், வகுப்பையும், வேட்கையையும், வசனத்தையும், விகாரத்தையும் உரத்து ஒலிக்கும் உரைகல்லாக இலக்கியம் இலங்கவேண்டும்.

வரலாற்றை மாற்றியதில் இலக்கியமும் ஒரு காத்திரமான பாத்திரத்தை ஏற்றிருக்கிறது என்பதை எப்படி மறுக்க முடியும். ஒரு காலத்தில் ரஷ்ய எழுத்தாளர்களது பேனைகள் ஆஸ்தியையும், அதிகாரத்தையும் அனுபவித்து பாட்டாளி வர்க்கத்தை பட்டினியால் வாட்டிய முதலாளித்துவ சட்டையைப் பிடித்து சுரண்டல் உழைப்பை சுட்டிக்காட்டி எச்சரித்தன. அதேபோல் அமெரிக்க எழுத்தாளர்களது பேனா முனைகள் தனி மனிதனுக்கு சர்வ சுதந்திரம் உண்டு என நிரூபிக்க முனைந்தன. எனவே மனித வரலாற்றை பாதித்தவற்றில் இலக்கியத்திற்கும் மகத்தான பங்குண்டு என்பதை நாம் மறுக்க முடியாது.

இப்படி நோக்குகையில் பின்நவீனத்துவத்தின் உள்ளடக்கம், போக்கு நிலை என்பன சீர்திருத்தத்திற்கு எதிராக சீர்குலைவையும் உருவாக்கத்திற்கு புறம்பாக உருக்குலைவையுமே உருவாக்கிவிடும் தன்மையைக் கொண்டுள்ளது. வேடிக்கை (Comical) இலட்சியவாதத்திற்கான தடைக்கல்லாகவும், ஆபாசமாகவும் (Vulgar) பண்பாட்டுக்கெதிரான சவாலாகவும் அறச்சார்பின்மை (Irreverant) நன்மைக்குப் புறம்பான அறைகூவலாகவும் அமைந்துவிடும் பொழுது இலக்கியம் நிர்மாணித்தலுக்கான சாதனம் ஆகுவதற்கு பதிலாக நிர்மூலத்திற்கான கருவிகளாக மாறிவிடுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

மனிதன் உருவாக்கிய அனைத்து துறைகளும் மனித மேம்பாட்டுக்கும் பண்பாட்டுக்குமே உழைக்கும் போது, இலக்கியம் மாத்திரம் இந்த இலட்சியத்தில் இருந்து பிறழ்ந்து விடவும் கூடாது. பிறழ்ந்து விடவும் முடியாது. மானிடவியல், சமூகவியல், உருவியல் போன்ற அனைத்து துறைகளும் மனித வர்க்கத்தின் முன்னேற்றத்திற்காக பிரயோகிக்கப்படும் போது இலக்கியம் மனித நாகரிகத்தின் நலிவுக்குக் காரணமாக அமைவதை அங்கீகரிக்க முடியாது.

மேலைத்தேய இலக்கியப்போக்கான பின்நவீனத்துவம் தான் ஒரு வகையில் மனிதாபிமானத்தை மறுதலிக்கின்றது. ஆனால் கிழக்குத் தேசங்களில் இன்றும், இனிமேலும் 'இலக்கியம்' அபலைகளின் அவலக் குரலாகவும் ஒடுக்கப்பட்ட மக்கள் குழுமங்களின் புரட்சி நாவுகளாகவும், சுதந்திரப் போராளிகளின் இதய ஆயுதமாகவும் புழுங்கிக்கொண்டே இருக்கிறது. இதற்கான காரணம் அவை பின்நவீனத்துவ சிந்தனையை உள்வாங்காததேயாகும். புலம்பெயர்ந்தோர் இலக்கியம், தலித் இலக்கியம் போன்றன இதற்கு நல்ல உதாரணங்களாகும்.

பின் நவீனத்துவ இலக்கிய மாதிரிகள் ஒரு போதும் சமுதாயப் பின்புலங்களை காட்சிப்படுத்த விளைவதில்லை. மாறாக அதன் உட்பொருள் கட்டுக்கடங்காத (Barbarism) தன்மையையும் ஏற்படுத்துவது மாத்திரமன்றி படைப்பாளிகள் வன்முறைக்கும், ஆபாசத்துக்கும், வக்கிரங்களுக்கும் உத்வேகம் ஊட்டுகின்றனர். இதற்காகவே பின்நவீனத்துவ படைப்பாளிகள் பேய்க்கதை, திகில் கதை, ஆபாசக்கதை போன்ற வற்றைப் பயன்படுத்துகின்றனர். literature is one of the most powerfull instrument for forming character. என ஆங்கிலத் திறனாய்வாளர் Collan marcy குறிப்பிட்டது போல் இவ்வகை இலக்கியப் படைப்புகள் மனிதர்களிடம் வன்முறையுணர்வையும், போர்க்குணத்தையும் கிளர்ந்தெழச் செய்யும் தன்மை கொண்டுள்ளன.


வரும்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*ஜூலை 6, 1996இல் உலகத்திரைப்பட விழாவில் அனோஜாவின் நான்கு திரைப்படங்கள் திரையிடப் பட்டன. அங்கு சிக்காகோ பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த டெம்பை மேரி கப்ரலோ(Temby Mary Caprlo) என்னும் திரைப்பட ஆர்வலர் அனோஜாவை சந்தித்து உரையாடிய வற்றில் இருந்து சில பகுதிகளை "எங்கள் அனோஜா: தேசிய சினிமாவுக்கான சில கேள்விகள்" என்னும் தலைப்பில் Options சஞ்சிகை (97) பிரசுரித்திருந்தது. அவ்வுரையாடலின் சில பகுதிகள் இங்கு தமிழாக்கப்பட்டு நன்றியுடன் பிரசுரிக்கப்படுகிறது.*



***இ**த்திரைப்பட விழாவுக்குப்பிறகு உங்கள் நிகழ்ச்சி நிரலில் அடுத்த திட்டம் என்ன?*

குரல் உற்பத்தி, குரல் பாவனை, நடிப்பு என்பன தொடர்பான சிறப்புப் பயிற்சி நெறி ஒன்றில் கலந்து கொள்வதற்காக லண்டன் செல்ல இருக்கிறேன். இலங்கையில் நடிப்புத்துறைக்கென கல்லூரிகள் எதுவும் இல்லை. கொழும்பில் நான் கல்லூரி ஒன்றை ஆரம்பிக்கத் திட்டமிட்டு இருக்கிறேன். இது தொடர்பாக தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனமும் ஆர்வமாக இருக்கிறது. கல்வித்திணைக்களமும் இதற்கு உதவுவதாக இருக்கிறது. ஏனெனில், பெருந்தொகையான மாணவர்கள் நாடகமும் அரங்கியலும் என்ற பாடத்தை க.பொ.த.(உ/த)வுக்காக எடுக்கிறார்கள். அவர்கள் இப்பாடத்தைக் கற்கின்ற பொழுதும் இப்பாடம் தொடர்பான செயன்முறைப் பயிற்சிகளுக்கு வசதிகள் இல்லாது இருக்கிறது. நான், நாடகமும் அரங்கியலும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு கற்பிக்கத் திட்டமிட்டு இருக்கிறேன்.

***நீங்கள் இதற்கு முன்பு இது தொடர்பான கற்பித்தல் அனுபவம் எதனையும் கொண்டிருக்கிறீர்களா?***

சந்தர்ப்பங்கள் கிடைக்கும் பொழுது. இப்பொழுதும் கூட பின் தங்கிய கிராமங்களுக்குச் சென்று ஏழை மாணவர்களுக்கு களப்பயிற்சிகளை நடாத்தி வருகிறேன். ஆனால் இதைத் தனியே தொடர்ந்து செய்ய முடியாது.

***நீங்கள் 70களில் இருந்து திரைப்படங்களில் நடித்து வந்திருக்கிறீர்கள். சிறிமெதுர (1989), ஐலண்ட் (1989), சுரபிதென (1993), ஜூலியன்கே பூமிகாவ (1995) ஆகிய நான்கு திரைப்படங்களையும் மட்டுமே திரைப்பட விழாவுக்கெனதெரிவு செய்தது ஏனென்று கூறுவீர்களா?***

என்னுடைய அனேகமான ஆரம்ப காலப் படங்கள் வர்த்தகப் படங்களாகும். அழகான ஒப்பனை உடை அலங்காரங்களுடன் காதலியும் காதலனும் பூங்காக்களிலும் புதர்களைச்சுற்றியும் ஓடிப்பிடித்து ஆடிப்பாடிக் காதலிக்கும் காட்சிகளை மையப்படுத்திய திரைப் படங்களாகும். இவ்வாறான ரோமியோ, ஜூலியட்களையே அந்தப் படங்களில் காணமுடியும். இந்திய வர்த்தகப் படங்களைப் போலவே இவையும். பார்ப்பதற்கு இவற்றில் எதுவும் இருப்பதில்லை.

நான் நினைக்கிறேன். கிட்டத்தட்ட ஐம்பது அறுபது வர்த்தகத்திரைப்படங்களில் நடித்திருக்கிறேன்.

மூனிச் போன்ற திரைப்பட விழாக்களுக்கு வர்த்தகப் படங்களை அழைப்பதில்லை. அவர்கள் நல்ல தரமான திரைப்படங்களையே தெரிவு செய்வார்கள். வர்த்தகப் படங்களில் பொழுது போக்கு என்பதற்கு மேல் எதுவும் இல்லை.

1987இல் இந்தியாவில் நிகழ்ந்த சர்வதேச திரைப்பட விழாவில் நான் சிறந்த நடிகைக்கான பரிசை பெற்றதன் பின்பு என்னுடைய நண்பர்கள், பத்திரிகையாளர்கள், விமர்சகர்கள் நான் வர்த்தகப் படங்களில் நடிப்பதைப்பற்றி விமர்சிக்கத் தொடங்கினார்கள். என்னை நல்ல திரைப் படங்களை நோக்கித் திரும்புமாறு அவர்கள் கூறத் தொடங்கினார்கள். கிராமப்புறப் பெண்ணான எனக்கு எதனையும் இயல்பாகவும், இயற்கையாகவும் செய்வது தான் பிடித்தமானது. பெண்களுடைய துயரங்களை அவர்கள் சமூகத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளூடாக இயற்கையான முறையில் உருவகப்படுத்துவதையே விரும்புகிறேன். வர்த்தக சினிமாக்களில் உள்ளது போல கற்பனையான கதைகள் எந்தச் செய்திகளையும் சொல்வதில்லை. இவ்வர்த்தகப் படங்கள் என்னை விரக்தியுறச் செய்திருந்தன. எனவே தான் நான் இனி சீரியஸான படங்களைப் பற்றி யோசிக்க முடிவு செய்தேன். 87ம் ஆண்டுக்குப் பிற்பாடு வர்த்தகப் படங்களில் வேலை செய்வதில் இருந்து விடுபட்டுக் கொண்டேன். எனது அதிர்ஷ்டம்போல் ஹொக்ஸ் (Paul Cox's) இனுடைய ஐலண்டில் நடிக்கக்கிடைத்ததாகும்.

***ஜூலியட் என்னும் படம் தெளிவாகவே ஜனரஞ்சக சினிமாவின் கூறுகளைக் கொண்டுள்ளது. இதற்கு பார்வையாளர்களின் எதிர்வினை எவ்வாறு இருந்தது?***

நான் இன்னும் இப்படத்தினை சிறீலங்காவில் திரையிடவில்லை. இவ்வகையான படங்கள் இலங்கைப் பார்வையாளர்களுக்கு அவ்வளவு பரிச்சயமானவையல்ல. இங்கே ஒரு கதை சொல்லப்பட வேண்டும். சிறிமெதுர அல்லது சுரபிதெனவில் சொல்லப்பட்டது போல ஒரு கதை சொல்லப்பட வேண்டும். ஆனால் பெண் ஒருத்தியின் உள்மனப் போராட்டத்தைச் சித்திரிக்கும் இவ்வகையானதொரு படம் இலங்கைப் பார்வையாளர்களுக்குப் புதியது. நான் இப்படத்தின் இணைத் தயாரிப்பாளரும் கூட. அதிகளவு பணத்தை இதற்குச் செலவழித்திருக்கிறேன். நான் செலவழித்ததற்கு அதிகமாக எதையும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் செலவிட்டதை திரும்பப் பெற்றுக் கொள்ள முடியுமோ என்ற கவலை இருக்கவே செய்கிறது.

மறுபுறத்தில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இலங்கையில் கல்வி அறிவுள்ளவர்களின் வீதம் உயர்வானதாகும். இதனால் வர்த்தக சினிமாக்களைவிட கலைப்படங்கள் நல்ல பாதிப்பை ஏற்படுத்தவே செய்கின்றன.

***கொழும்பு நகரின் முந்திய நிலைமைகளுடன் ஒப்பிடும் பொழுது ஜூலியட் ஒரு ஆச்சரியமான வெற்றி என நீங்கள் சொல்லி இருந்தீர்கள். அனேகமானவர்களை அத் திரைப்படத்தை நோக்கி கவர்ந்த அம்சங்கள் எவை?***

வழமையான எங்கள் பட உருவாக்கத்தில் இருந்து அது வேறுபட்டிருந்தது. ஆனால் வியப்பூட்டுவது

## "முழு மனித உயிர்கள் மீதான காதலில் நம்பிக்கை உள்ளவள்!"

**-அனோஜா வீரசிங்க**

என்னவென்றால், முச்சக்கர வண்டிச் சாரதிகள் தான் அதிகளவுக்கு எனக்கு எழுதினார்கள். போன் பண்ணினார்கள், இது ஒரு அழகான படம், என்னுடைய நடிப்பு பிடித்துள்ளது என. இவ்வகையான ஒரு பாத்திரத்தை நான் இதற்கு முன்பு செய்ததும் இல்லை. மனரீதியான சமநிலை குழம்பிய ஒரு பாத்திரம் அஞ்சலி. இவள் சாதாரணமான ஒரு பெண் அல்ல. அவர்கள் படத்தில் என்னை சீரியசான பெண்ணாகப் பார்த்தார்கள். அஞ்சலி உண்மையிலும் தான் எங்கே போகிறேன் என்பதை அறியாத ஒரு பெண். அவர்களது பாராட்டு... நான் மகிழ்ச்சியில் மிதந்தேன்.

***உங்கள் சொந்த வாழ்வின் அனுபவங்களும் ஜூலியட் இல் கலந்துள்ளது என்கிற அபிப் பிராயத்தைப் பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?***

இலங்கையிலும் கூட மக்கள் இது எனது சொந்த வாழ்வின் ஒரு பகுதியே என நினைத்தார்கள். ஒரு சில விடயங்கள் கலந்துள்ளன. இந்தப்படத்தில் மட்டுமல்ல அனேகமாக எல்லாப்படங்களிலும். சுரபிதெனவை எடுங்கள். அதில் வரும் பெண்பாத்திரத்தின் அனுபவங்கள் எனக்குப் பரிச்சயமானவை, நானும் கூட கிராமத்தில் இருந்து உருவான பெண் என்பதால். ஜூலியட்டை எடுத்துக் கொள்ளுங்கள். நான் லம்டா (Lamda) வில் இருந்த பொழுது அந்தக் கதை என் மனதுள் உருவானது. நாங்கள் ரோமியோ ஜூலியட்டை நடித்துக் கொண்டிருந்த பொழுது நெறியாளர் இந்தக் கதையை வித்தியாசமான முறையில் பின்னினார். இங்கே அஞ்சலி என்ற பாத்திரத்துள் இரண்டு அல்லது மூன்று இலங்கை நடிகைகள் இருக்கிறார்கள். பல்வேறு இடங்களில் இருந்தும் கொஞ்சக் கொஞ்சத் துண்டுகளாக எடுத்து அஞ்சலி என்ற பாத்திரத்தின் முழுமையான குணாம்சம் உருவாக்கப்பட்டது. இதில் நான் என் சொந்தக் கருத்துக்களையும் பங்களித்திருக்கிறேன்.

***சிறிமெதுரவிலும் சுரபிதெனவிலும் மனித வேட்கை (Human Desire) என்பதற்கு மிகவும் சாதகமான முறையில் கதை பின்னப் பட்டிருந்தாலும், இறுதியில் மனித வேட்கை என்பது தண்டனைக்குள்ளாகிறது. மனித வேட்கைகள் தண்டிக்கப்படாமல் ஏற்றுக் கொள்ளப்படுவது இலங்கையில் சாத்தியமில்லையா?***

என் பெண் நண்பர்களும் இன்னும் முகம் தெரியாத பெண்களும் அவர்களின் அனுபவங் களை என்னுடன் பகிர்ந்திருக்கிறார்கள். நானும் என் சொந்த வாழ்வனுபவத்தினூடாக உணர்ந்திருக்கிறேன். எங்களுடைய உலகத்தில் இதனை அறியாமை எனலாம். பெண்களின் கள்ளம் கபடு அறியாத்தன்மை எனவும் கூறலாம். எங்களுடைய கலாசாரத்தின் விளைவோ தெரியவில்லை. எங்கள் கலாசாரத்தில் பெண்கள் ஆண்களை தங்களிலும் மேலானவர்களாகவே கருதுகிறார்கள். என்னுடைய அப்பா உயிருடன் இருக்கும் வரை அம்மா வேலை செய்ததில்லை. பெண்கள் வீட்டுப் பெண்களாகவே இருக்கின்றனர். பெண்கள் கணவனை தெய்வமாகப் போற்றுகின்றனர். தான் சமைப்பதில் ஒரு பிடி உணவை தன்கணவனுக்கு எடுத்து வைத்த பின்னரே மற்றவர்களுக்கு உணவளிக்கும் பெண்ணைத் தான் எங்கள் கலாசாரம் கொண்டிருக்கிறது. இந்தப் பலவீனத்தை ஆண்கள் பயன் படுத்திக் கொள்கிறார்கள். பெண்ணைச் சுரண்டிக் கொள்கிறார்கள். இந்நிலைமை மாறிவருகிறது. சிறிமெதுரவில் அவள் தன் வாழ்க்கையை இழப்பது மனித வேட்கை தண்டிக்கப்படுவது இவ்வாறுதான்.

***சமூகத்தில் வன்மையாக அவதானிக்கப்படுகிற வர்க்கத் தனித்துவத்திற்கும் துன்பப்படுகிற பெண்களுக்கும் இடையிலான உறவு நிலையை நீங்கள் எப்படிப் புரிந்து கொள்கிறீர்கள்?***

அதிகளவு பணம் படைத்த சிலர் தங்களது பணத்தின் மூலம் எதையும் செய்யலாம் என நினைக்கின்றனர். இந்தியாவில் ஏழைகளுக்கும், பணக்காரர்களுக்கும் இடையிலான வேறுபாடு பாரதூரமானது. மக்கள் ஒரு புறம் பட்டினியால் இறக்கின்றனர். இலங்கையில் இந்த நிலைமை இல்லை. ஆனால் பணக்காரர்கள் பணக்காரன்-ஏழை என்ற வேறுபாடு இருக்கவே செய்கிறது.

***நீங்கள் உங்களுடைய படங்களில் வரும் பெண்***



***பாத்திரங்களை பெண்களுக்கான மாதிரியுருக்களாகக் கருதுகிறீர்களா?***

படங்களின் நெறியாளர்கள் தொடர்பான விடயம் இது. அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என எனக்குத் தெரியவில்லை. ஆனால் என் பாத்திரத்தினூடாக பெண்களுடன் பேசுகிறேன். என் பாத்திரங்கள் வாழ்கிற வாழ்க்கை சூழ்நிலைகளை ஒத்த சூழ்நிலைகளுக்குள் வாழ்கிற பெண்களுடன் நான் பேச விரும்புகிறேன். ஏன் உங்களுக்கு இப்படி எல்லாம் நிகழ்கிறது. உங்களுக்கு மூளை இல்லையா என கேட்க விரும்புகிறேன்.

ஆனால் ஒரு திரைப்படத்தை உருவாக்குவதன் மூலம் முழு சமூகத்தையுமே மாற்றிவிட முடியாது. ஆனால் வன்மையான பாதிப்புக்களை ஏற்படுத்த முடியும். சில வேளைகளில் பெண்கள் அதிகம் சிந்திப்பதில்லை. சிலவேளைகளில் படங்களைப் பார்த்தபின் சிந்திக்கவும் செய்கிறார்கள். அந்த வகையில் எனது பாத்திரங்கள் மாதிரியுருக்கள் ஆகலாம்.

***இலங்கையிலுள்ள ஏனைய நடிகைகளுடன் உங்களை எப்படி ஒப்பிட்டுக் கொள்கிறீர்கள்?***

எனக்கு முன்னோடி நடிகை சுவர்ணா. அவர் சீரியசான நிறையப்படங்கள் செய்துள்ளார். மற்றது வளர்ந்து வரும் இளம் நடிகை சங்கீதா. நாங்கள் மூவரும் சீரியசான படங்களில் கவனம் செலுத்துகிறவர்கள்.

***உங்களுக்குப் பிடித்தமான திரைப்படங்கள் பற்றிக் கூறுங்கள்?***

இன்றுவரையும் எனக்கு சீனத்திரைப்படங்கள் எனக்கு மிகவும் பிடித்தமானவை. அவற்றில் பல பார்த்தால் மறக்க முடியாதவை. ஹொலிவூட் படங்கள் அவ்வளவு விருப்பமானனையல்ல.

***உங்களுக்கு இரசிகர் மன்றங்கள் உள்ளனவா?***

இரசிகர்களிடம் இருந்து நிறையக் கடிதங்கள் வருகின்றன. இரசிகர் மன்றங்கள் பல இருந்தன. அவை எனது புகைப்படங்களை விற்று பணம் பண்ணும் தொழிலில் ஈடுபடத் தொடங்கியதால் அவற்றை நிறுத்தி விட்டேன். இப்பொழுது வேலை செய்வோர், அதிகாரிகள், பல்கலைக் கழக ஆசிரியர்கள், புத்திசீவிகள் போன்ற முதிர்ச்சி அடைந்த மனிதர்களிடம் இருந்து கடிதங்கள் வருகின்றன. அவர்கள் எனது பாத்திரங்களை பற்றிப் உரையாடுகிறார்கள். விமர்சன பூர்வமான கடிதங்களை எழுதுகிறார்கள். நான் வர்த்தகப்படங்களில் நடித்த காலத்தில் என் முகத்தினை, தலைமயிரை தொட்டுப் பார்க்க விரும்பும் இளம் இரசிகர் பட்டாளம் ஒன்று இருந்தது. இப்பொழுது நிலைமை அவ்வாறு இல்லை. ஒப்பனைகளால் தோற்றுவிக்கப்படும் மாய அழகில் எனக்கு நம்பிக்கை இல்லை என்பதால் ஒப்பனை இன்றியே வெளியில் நடமாடுகிறேன். இயல்பாகவே இருப்பது எனக்கு நன்றாக இருக்கிறது.

பல நடிகைகள் வயதாக ஒப்பனைகளால் எதுவும் செய்ய முடியாது போகும் போது விரக்தி அடைகிறார்கள். நானோ முதுமை அடைய இன்னும் இயல்பாகவும், வசதியாகவும் உணர்கிறேன்.

***நீங்கள் ஒரு திரைப்பட நடிகை என்பதற்கு அப்பால் உள்ள பெண் பற்றிக் கூறுங்கள்?***

நான் "முழு மனித உயிர்கள் மீதான காதல்" என்பதில் நம்பிக்கை உள்ளவள். அது மட்டு மல்ல பூமியில் உள்ள அனைத்திலும், இயற்கையில் உயிரினங்களில் எனது காதல் பெருகுகிறது. பணத்தின் பின்னாலோ, வசதிகளின் பின்னாலோ ஓடும் பெண்ணல்ல நான். நான் கிராமத்தை விரும்புகிறேன். மனிதர்களும், உறவுகளும் கிராமத்தில் பிணைந்துள்ளன. நான் கொழும்பில் இருந்தாலும் வாரத்தில் ஒரு முறை என் கிராமத்திற்குச் செல்கிறேன். நான் எனது கிராமத்தவர்களுக்கு உதவுகிறேன். எனக்கு நான் நினைக்கிற எதையும் செய்ய முடியும்... உலகம் முழுவதும் பல பெண்நிலைவாத இயக்கங்கள் இருக்கின்றன, அவை நினைக்கின்றன; ஆண்கள் இல்லாதும் எதையும் செய்யு முடியும் என. நான் மிகவும் உறுதியான ஒரு பெண். கொழும்பில் நான் தனித்தே வசிக்கிறேன்... ஆனால், தோழமை ஒரு அவசியமான விடயம்தான்...

சிலவேளைகளில் நான் மேற்கத்தேய உடைகளை அணிகிறேன். ஏனெனில் அது சாரி அணிவதை விட இலகுவாக உள்ளது. ஆனால், நான் என்னை மேற்கத்தேய கலாசாரத்தின் மாதிரியாக கருதுவதை வெறுக்கிறேன். ஆங்கில மோகம் எனக்கு பிடிக்கவில்லை. எனது மொழியில் பேசுவதுதான் எனக்கு இயல்பாகப்படுகிறது. ஆங்கில மொழியில் பேட்டி தர பல நடிகைகள் விரும்புவதில்லை. ஏனெனில் ஆங்கிலத்தில் தவறுவிடுவோம் என்று அவர்கள் பயப்படுகிறார்கள். எனக்கு தெரியாத மொழியில் நான் தவறு விட்டால் அதற்காக ஏன் நான் வெட்கப்பட வேண்டும்.

***இலங்கையரான நீங்கள் இலண்டனில் இருக்கும் அனுபவத்தை எப்படி உணர்கிறீர்கள்?***

எவருக்கும் தனது சொந்த நாட்டினை விட்டு இன்னொரு இடத்தில் இருப்பது என்பது கஷ்டமான விடயம். எங்கள் உணவுப்பழக்கம், கலாசாரம், குடும்பம் என்பவற்றைப் பிரிந்து இருத்தல் கஷ்டமானது. அதிர்ஷ்டவசமாக எனது சகாக்கள் ஆசிரியர்கள் இங்கிருப்பதால் என் அனுபவம் இலண்டனில் அருமையாக இருக்கிறது. மேற்குலகம் நன்கு முன்னேறி இருக்கிறது. நாங்கள் கற்றுக்கொள்ள நிறைய இருக்கிறது. இலக்கியம், இசை, ஓவியங்கள், படங்கள், தொழில்நுட்பம் போன்றவற்றில் நாங்கள் கற்றுக்கொள்ள நிறைய இருக்கிறது. நீங்கள் உங்கள் அறிவை பரந்து பட்டதாக்கி இருக்கிறீர்கள். மொசாட்டின் இசை.. சர்வதேசத்திற்கும் உரியது. அது முழு உலகையும் பிணைக்கிறது. ஆனால் முக்கியமானது ஒருவன் தான் எங்கிருந்து உருவாகிறான் என்பது தான். எக்கலாசாரத்திற்கு சொந்த மானவன், தனது வேர்கள் எங்கே உள்ளன என உணர்ந்து கொள்வது (ஐலண்ட் இல் வரும் ஈவா பாத்திரம் போல) முக்கியமானது. அப்பொழுது தான் எங்கு போனாலும் பிரச்சினைகள் இருக்காது.

***உங்கள் திரைப்படத் தயாரிப்புத் தொடர்பான அடுத்த திட்டம் என்ன?***

எங்களுடைய நாட்டின் கடைசி அரசின் காலத்தில் ஒரு பகுதியை படமாக்க எண்ணி இருக்கிறேன். வரும் ஏப்ரலில் இது தொடர்பான படப்பிடிப்பை தொடங்க இருக்கிறேன். ஒரு வருடத்தில் பத்து படங்களை தயாரிக்கலாம் என நினைத்தேன். ஆனால் இப்பொழுது இரண்டு வருடங்கள் தேவைப்படுகிறது. நான் இன்னும் ஒரு சில வருடங்கள் மட்டுமே படங்களில் வேலை செய்ய யோசித்துள்ளேன். பிற்பாடு நிறுத்துவது என யோசித்துள்ளேன். நடிப்புக் கல்லூரி ஆரம்பிப்பது பற்றி சொன்னேன் தானே. புதியவர்களை மெருகூட்டவும், அவர்கள் தாங்கள் படைப்பாக்கத்தினை வளர்த்துக் கொள்ளவும் நான் உதவ விரும்புகிறேன். இப்பொழுது எனக்கு 41 வயது. 45வயது வரை வேலை செய்யலாம். அதன் பின்பு புதியவர்களின் படைப்புக்களை நடிப்புக்களை பார்த்து சந்தோஷித்தபடி ஓய்வெடுக்கலாம்.

***நீங்கள் நெறியாளர் ஆக விரும்புகிறீர்களா?***

விரும்பியதுண்டு. ஆனால் நான் சற்றுப் பொறுமை குறைந்தவள். இன்னும் தொழில்நுட்ப விடயங்களில் அவ்வளவு பரிச்சயமும் இல்லாதவள்.

**தமிழில்: மாஷா**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 'கோணேஸ்வரிகள்': தொடரும் விவாதம்

## பெண் மகவை ஒளித்துவை தாயே!

சரிநிகர் 123இல் கலாவின் ''கோணேஸ்வரிகள்'' கவிதையை நானும் படித்தேன். அக்கவிதை எனக்குள் உடனடித்தாக்கம் செலுத்தியது மட்டுமல்லாமல், அக்கவிதையின் பிரதிபலிப்பாக அன்றிரவே ஒரு மாற்றுக் கவிதையையும் எழுதத் தூண்டிவிட்டது.

சிங்கள இராணுவம் - தமிழ் முஸ்லிம் மக்களுக்கெதிரான யுத்தத்தில் அதிதீவிரமாய் இயங்குகிறது என்பது புதிய விடயமல்ல. சமாதானத்திற்கான இப்போரினால் நாம் யாசிக்கும் சமாதானமும் சுபீட்சமும் கிடைக்காது என்பது வேறு விஷயம், இலங்கை இராணுவம் தன் சிங்கள மேலாதிக்கத்தை தக்கவைத்துக்கொள்ள, தொடர்ந்தும் தம்மாலியன்ற பங்களிப்பை செய்து கொண்டே இருக்கும் என்பதில் இருவேறு கருத்துக்கள் கிடையாது. அதிலொன்றுதான் பாலியல் ரீதியான வன்முறைகளாகும்.

மட்டக்களப்பு பிள்ளையார் கோயிலடி சுற்றிவளைப்பின் போது, இராணுவத்தினர் கூறிய 'பொன்மொழிகள்' கவனிக்கத்தக்கது. ''எங்களை புலிகள் தாக்கினால் உங்கள் பெண்களை பாலியல் வல்லுறவுக்குட்படுத்துவோம்'' என எச்சரித்த நாகரீகச் சிப்பாய்கள், பாலியல் வல்லுறவைக் கூட போர் உத்திகளில் ஒன்றாக பாவிக்க முனைகின்றதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

எனவே, கலாவின் கவிதை தொடர்பாக கூக்குரலிடுபவர்கள், அது இனவாதத்திற்கு தூபமிடுகிறது என்றும், ஆபாசமொழியென்றும், எல்லாப் பெண்களையும் நிர்வாணமாக்குகிறது என்றெல்லாம் கோஷமிடுவது அர்த்தமற்றது.

கோணேஸ்வரிகள் கவிதையில் கலா பிரயோகித்திருக்கும் மொழிகூட கவிதைக்கு பரிச்சயமான மொழிதான். கலாவின் சீற்றமும், ஆற்றாமையும், நாகரீக வார்த்தைகளுக்குள் விறைத்து விடாமல், இயல்பான உணர்வுகளை பிரதிபலித்து கவிதையாய் வெடித்துள்ளது. நாகரீகச் சொற்களை பொறுக்கி எடுத்து ஒட்டி, தயாரிக்கும் கவிதைத்தயாரிப்பாள மாமேதைகளுக்கு கலாவின், மொழி நடை ஆபாசமாக இருக்கலாம். எனினும் மனிதநேயம் உள்ள ஒருவருக்கு பாதிக்கப்பட்ட ஓர் இனத்துப் போராளியின் சம்ஹாரக் குரலாகவே அதைக்காண முடியும்.

ஆபாசம் என்பதன் வரையறை என்ன? யோனி, நிர்வாணம், புணர்தல் எல்லாம் ஆபாசமா. இவற்றைப் பிரயோகிப்பதன் மூலம் அக்கவிதை அசிங்கங்களின் மொத்த உருவமாக மாறிவிடுமா. அவ்வாறெனில் சோலைக்கிளியின் அனேகக் கவிதைகளை எரிக்க வேண்டும். றஷ்மி எழுதிய சில சரிநிகர் கவிதைகளிலும் யோனி என்றபதம் பிரயோகிக்கப்பட்டுள்ளது. அவற்றையெல்லாம் குப்பையில் கொட்டவேண்டுமா? மேற்படி பதத்தை பிரயோகிப்பதன் மூலம் பெண்ணினம் அவமானப்படுகிறது எனக்கோஷமிடுபவர்கள், ஆபாசத்தின் வரையறைகளை நிர்ணயிப்பார்களென்றால் கலா போன்ற இளைய கவிஞிகளின், கவிதைகளையும் மூத்த கவிஞர்களின் கவிதைகளையும், நாம் பரிசீலனைக்குட்படுத்த முடியும்.

கலாவின் குமுறல் கலாவுக்கு மட்டும் சொந்தமானதல்ல, எனவே இந்திய இராணுவத்தின் - பாலியல் வன்முறைகளைவிட இலங்கை இராணுவத்தின் பாலியல் அனர்த்தங்கள் அண்மைக்காலமாய் அதிகரித்து வருவதை - இக்கோஷதாரிகள் அறியவில்லையா? கோணேஸ்வரிக்குப் பின்பும் தமிழ் பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்படும் அவலத்தை தெரியாமலா இந்நாட்டில் வாழ்கிறார்கள். அறிந்திருந்தால் கலாவைப்போன்றவர்களாவது இவ்வாறு எழுதியேனும் தன் உணர்வுகளைக் கொட்டி போராடட்டும், வழிகொடுங்கள், அது படைப்பாளியின் தார்மீகக் கடமையுமாகும்.

*எரிகணைவீழ்த்தி*
*அடர்ந்தவனமெரித்து*
*புகைபூசிக்கொள்கிறது தேசம்.*

*ஆக்காண்டி முட்டையிடும்*
*சிறுகற்குவியலிடை*
*பெண்மகவைஒழித்துவைதாயே.*
*ஜெயவீரபிரதாபம்முழங்குமினி.*

*போதிமரநிழலிடை*
*புணர்கலைபோதித்தறியாபுத்தரே*
*பாருமுன்பிச்சலத்தை.*

*சிப்பாயின்மனைவியே*
*உன்மணாளனைநினைத்து*
*மேனிமினுக்கிடும்*
*தேவையிராஉனக்கினி.*

*அவர்தம்காதலியர்*
*விடுப்பில்வரும்வீரரினை*
*பற்றை மறைவில்இருத்துவைத்து*
*முத்தமிட்டு, ஊடலிடும்தேவையுமிராதினி.*

*பட்டாளச்சிங்கங்கள்*
*வால்முறுக்க - தமிழச்சி வாழுமட்டும்*
*சிங்களத்திகளேஓய்வெடுங்கள்.*

*நிலமில்லை,நீரொழுகக்கண்ணில்லை*
*யாவுமற்று, வானலியிற்புழுவானோம்*
*எம்புத்திரிகள், வாழ்வினிஎன்னாகும்*

*நிலவெறியும்முற்றத்தில்*
*சாவின்நினைவகற்றி குலாவியிருந்தோம்.*
*எமக்குரிய வசந்தங்கள்.*
*எல்லையற்றுக்கிடந்தன.*

*எமதுயிர்புத்திரர்சாமத்தில்வீடேகுவர்*
*இரவுக்காட்சி முடிய விவாதித்தபடி*
*சிலரெம்தெருக்களைக்கடந்து செல்வர்*
*இனிவருமோஅக்கணங்கள்*

*தொடுவானம்தொட்டே மீள்கிறது*
*உயிரின்திகில்;*
*எல்லையற்ற வான்வெளியில்*
*எமக்குரியபுதைகுழி*
*குண்டெரியும்பறவையாய்*
*தலைக்குமேல்*

**ஓட்டமாவடி அறபாத்**

## சரிநிகர் பாய் விரித்தது ஏன் ?

விடுதலை இயக்கங்கள் மழுங்கடிக்கப்பட்டு, விடுதலை உணர்வு குன்றிய இக்காலத்தில் படையினரால் வாரி வாரியாகத் தமிழ்ப் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு இலக்காவது கண்டு கவிதை வரைந்த 'கலா'வின் வரிகளான 'கோணேஸ்வரிகள்...' என் நெஞ்சை வருத்தியது.

பச்சையாக சில வார்த்தைகளைப் புகுத்திய விதம் அருவருக்கத் தக்கதாக உள்ளது. பெண்ணின் புனிதம் அழிக்கப்பட்டதை அரங்கேற்றுவதற்காக அந்தரங்கத்தின் திரையை அகற்றுவது அர்த்தமுள்ளதாகாது. கவிதை எழுத வேண்டுமென்பதற்காக நினைத்தவற்றை எல்லாம் எழுத முனைவது நல்லதாகப் படாது. ஏன் தமிழ் அகராதியில் சொற்களுக்கா பஞ்சம் நிலவுகிறது. நடுநிலை வகிக்கும் பத்திரிகையான சரிநிகர் ஏன் இப்படியான கவிதைக்குப் பாய் விரித்ததோ தெரியவில்லை.

கவிதையில் தமிழ்ப் பெண்கள் சிதைக்கப்படுவது புத்தன் வழிவந்த சிங்களப்படையினரால் தான் என கலா உரைப்பதை முற்றாக நான் மறுக்கிறேன். ஏனென்றால் முஸ்லிம்களும் படையினருடன் பச்சை உடையணிந்து நடாத்திய நாடகங்களையும் நாம் மறக்கவில்லை. உதாரணம் கோணேஸ்வரியின் சொந்தக் கிராமமான 11ம் கொலனிக்கு அருகேயுள்ள நாலாம் கொலனியில் அண்மையில் நடைபெற்ற கோரத் தாண்டவம்.

கற்பைக் காக்க நினைத்து கௌதமனின் பெயரைக் கொச்சைப் படுத்தியது போன்று சமய ரீதியாகக் கடவுளர் பெயர்களை அசிங்கப் படுத்தும் இரண்டாம் தரக் கவிஞர்களின் கவிதைகளை சரிநிகர் இனியாவது நிறுத்திக் கொள்வது நல்லது.

**வீரமுனை வானவர்கோன்**

## சிங்களத்தில் பிரசுரிக்க முடியுமா?

'கோணேஸ்வரிகள்' என்ற தலைப்பில் சரிநிகர் 123வது இதழில் வெளிவந்த 'கலா' என்பவரின் கவிதையால் சாட்டையடிபட்டுச் சிலிர்த்தெழுந்த சிலரின் எதிர்வினைகள் 'சரிநிகர்' 126வது இதழில் வெளிவந்திருந்தது. இவைகள் கலா என்பவருக்குக் கிடைத்த பெறுமதிமிக்க விருதுகளும் பரிசுகளும் என்றால் அது மிகையாகாது. ஏனெனில் இக்கவிதையை என்ன நோக்கத்திற்காக எழுதினாரோ அந்த நோக்கம் பெருமளவில் நிறைவேறியுள்ளதையே இந்த விமர்சனங்கள் காட்டுகின்றன. இதனைக்கண்டு தாமோ அல்லது கோணேஸ்வரியின் குடும்பமோ வெட்கித் தலை குனியவேண்டிய அவசியம் இல்லை. அவ்வாறு கூறுபவர்கள் இது போன்ற சம்பவங்களைத் தடுப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்றும் கூற முன்வரவேண்டும்.

எனவே எனது தனிப்பட்ட கருத்தின்படி இந்தக் கவிதையை அதே உயிரோட்டத்துடன் சிங்களத்தில் மொழிமாற்றம் செய்து சிங்கள முற்போக்கு இதழ்களில் பிரசுரிக்க வேண்டும். அப்போதுதான் அந்தச் சம்பவத்தில் ஈடுபட்ட பொலிசாரின் தாய்மாரும், மனைவிமாரும், சகோதரிகளும், புத்திரிகளும், சமூகமும் வெட்கித் தலைகுனியும். அதன் மூலமாவது இவ்வாறான மிருகத்தனமான செயல்களைக் குறைக்க முடியும் என்று கூறிகொள்ள விரும்புகின்றேன். இதற்கு 'மேர்ஜ்' நிறுவனம் முன்வருமா?

***க.உ.பா.ஸ்ரீஸ்கந்தஜெயா***
***அம்பிளாந்துறை***

## கலை இலக்கிய உலகும், சாதாரண வாசகனும்

### தெளிவுகளுக்கான சில குழப்பங்கள்

இலக்கியத்திற்கும், கலைகளுக்கும் சாதி மத இன மற்றும் இன்னுமிருக்கிற எல்லாப்பிளவுகளையும், பிரிவுகளையும் உண்டாக்கியாயிற்று, அல்லது இனங்கண்டாயிற்று. இப்பொழுது எதையும் இலகுவில் கண்டுகொள்ளவும், அடையாளப்படுத்தவும் முடியுமான வாய்ப்புக்களை இலக்கியச் சிந்தனையாளர்கள், ஆய்வாளர்கள், முன்னோடிகள் உருவாக்கி வைத்திருக்கின்றார்கள். தமிழ்நாட்டின் ஓயாதியங்கும் அனுபவ, ஆய்வார்ந்தவர்களின் எழுத்துக்கள், 90களில் வைரமுத்து, மேத்தாக்களில் பிரமித்து எழுதத்தொடங்கிய எம்மைப்போன்ற சுட்டிக் குழந்தைகளில் நல்ல தாக்கங்களை ஏற்படுத்துகிறது. எம் தேடல்களை சரக்கில்லாத மண்டைகளை கேள்வி கேட்கிறது. நாம் வெட்கித்துப் போகிறோம். எம் பிரேமைகளை அவர்களின் எழுத்துக்கள் தகர்க்கின்றன. நாம் நினைத்திருக்கிற புனிதங்களை உடைக்கின்றன. எம் இலக்கிய பாட்டன்கள், கொப்பாட்டன்கள் மூக்குடைபடுகிறார்கள். அவர்கள் பிரதிகளை மறுவாசிப்பு, கட்டுடைப்பு செய்து கொண்டிருக்கையில் நாம் வாசிக்காமலேயே மேதாவித்தனங்களைக் காட்டிக்கொண்டிருக்கிறோம். இலக்கியக் கூட்டங்களுக்குப் போனால் தெரியும். எம் மண்டை பிளக்கிற சில விவாதங்கள்.

ஏதோ இப்படிப் பார்க்கையில் நாம் நிறையக் கற்கவேண்டியிருக்கிறது என்பதும், ஏற்கிறோமோ இல்லையோ அல்லது விமர்சனங்கள் இருக்கிறதோ எதுவோ நாம் தேடவேண்டியுமிருக்கிறது. நாம் நம் சொந்த மொழியிலேயே எதையும் இப்போது வாசிக்கவும் முடியும். ஆனால் நாம்தான் நேரம் இல்லாமல் இருக்கிறோம்.

நிறையப் புனிதங்களை உடைக்கிற ஒரு புத்தகத்தை (உடைபடும் புனிதங்கள் - அ. மார்க்ஸ்) அண்மையில் வாசிக்க முடிந்தது. உண்மையில் அது நிறைய விஷயங்களைப் பேசுகிறது; சிந்திக்க வைக்கிறது. நல்ல விடயங்களை அறியச் செய்கிறது.

**''விமர்சனத்தின் வேலை பிரதியின் அர்த்தத்தைக் கண்டுபிடிப்பது அல்ல. பிரதி என்ன பொருள் கொள்கிறது என்பதைக்காட்டிலும் அது என்ன செய்கிறது - அதாவது வாசகன் மீது எத்தகைய விளைவுகளை ஏற்படுத்துகிறது எனச் சொல்வதே நம் பணி..''**

இதுதான் அ. மார்க்ஸ் போன்றோரின் விமர்சன(க் கட்டுடைப்பின்) இலக்கு. இந்த இலக்கில் புதுமைப்பித்தன் போன்ற படைப்பாளிகளில் இருந்து, வேறு பெரும்படைப்பாளிகள் பலரும் கேள்விக்குட்படுத்தப்படுகிறார்கள்.

ஓரிரு வருடங்களுக்கு முன்னர் என். ஆத்மாவும், றஷ்மியும் சேர்ந்து 'எனவே இனி' என்றொரு சஞ்சிகை வெளியிட்டார்கள். அதில் ஒன்றில் 'பாரதி வழிபாடு' என்ற தலைப்பில் எழுதப்பட்ட ஆசிரியர் குறிப்பில் பாரதியின் கவிதைகள் மீள்பரிசீலனை செய்யப்படவேண்டும், அதற்குத் தடையாக இருக்கிற 'மகாகவி' என்ற பிரேமை களையப்படவேண்டும் என்று எழுதியிருந்தார்கள். இது எந்த விமர்சனக்கோட்பாட்டின் அடியாக எழுதப்பட்டது என்பது தெரியாது. பல காரணங்களுக்காக அது எடுபடவில்லை. நமது 'தகுதி', 'அறிவு', 'தேடல்'களும், காரணிகளில் சிலவாகும்.

இப்போது இவர்கள் விரும்பியதும், எழுதியதும், நிறையப் பேர் விரும்பாததும் இலக்கிய விமர்சன உலகில் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது தவிர்க்க முடியாமல். (எனினும் எமது மண்டை வெடிக்கிறது!)

மேற்குறிப்பிட்ட 'விமர்சன வேலை' தொடர்பாய் என் அவதானமொன்று: எமது கலை இலக்கிய விமர்சனக் கூட்டங்களிலும் நாம் மேற்குறித்த விமர்சனப் பணியையே கைக்கொள்கிறோம். அதாவது வாசக விளைவுகளின் படியே விமர்சிக்கிறோம். என். ஆத்மாவின் நூல் வெளியீட்டிலும் கூட அவர் 'என் பக்கமிருந்தும் பாருங்கள்' என்று பலமுறை உருக்கமாக வேண்டியும் கூட நாம் எம் வாசகத்தளத்திலிருந்தே பார்த்தோம். ஆக, இந்தச் செயல் இங்கு நடந்து கொண்டிருக்கிறது. அங்கு தீவிரமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

மேலும் இதுபற்றி படைப்பாளிகளும், விமர்சகர்களும் தீவிரமாய்க் கற்கவேண்டியிருக்கிறது. கதைக்க வேண்டியிருக்கிறது. ஈழத்துப் புனிதங்கள் என்று எதுவும் இருந்தால் அது பற்றி அறிந்தவர்கள் கதைக்க வேண்டும். பெரிய இலக்கிய விஷயங்களில் ஈழத்துப் படிப்பாளிகள் வெறும் தலைகாட்டல் செய்யாமல் நிறையச் சொல்லித்தரவேண்டும். எம்மவர்களின் (எம்மவர், நம்மவர், ஈழத்தவர், தமிழ்நாட்டவர் என்ற பிரிப்புகளுக்கு மன்னிக்கவும்) சில நுழைவுகள் அவர்களையே விமர்சனத்திற்குள்ளாக்கியிருக்கிறது. இது எம்க்கு ஏமாற்றமாயிருக்கிறது. உ+மாக சில.

*''பழைய சனாதனிகளுக்கு நல்லபிள்ளையாக அடக்கம் காட்டும் மார்ச்சிய (?) விமர்சகர் சிவசேகரம்...''*

*''விளிம்பியல் பார்வைகள், தலித் சிந்தனைகள் எல்லாம் மேலுக்கு வந்த பின் நமது பழைய மார்க்சியர்கள் வலதுசாரிகளின் செல்லப்பிள்ளையாகிப் போனதை நீங்கள் கவனிக்கலாம். நண்பர் நுஃமான் அவர்களில் ஒருவர்...''*

*''நுஃமான் உட்பட வாய்ப்புக் கிடைக்கிற நேரத்தில் 'வவ்வே' என பழிப்புக் காட்டி விட்டு ஓடி விடுகிற சின்னபிள்ளைபோல...''*

தற்போது பேசப்படுகின்றவை, மேலுள்ளவாறான விமர்சனங்கள். இவை பற்றி நாம் எப்போது பிரக்ஞை பூர்வமாக பேசுவது, அறிவது? அல்லது இதெல்லாம் தேவையில்லாத விடயங்கள் என்று ஒதுக்கிவிடுவதா?


இந்த இலக்கிய உலகு தலையைச் சுற்ற வைக்கிறது!

**(பி.கு. சில தெளிவுகள், புரிதல்களுக்காக அ. மார்க்ஸுடைய உடைபடும் புனிதங்களையும், பிறநூல்களையும் கூடவே 'எனவே இனி'யையும் வாசிக்கவும்.)**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## பலவீனமான பத்தி!

இந்த ஆண்டு தொடக்கத்திலிருந்து சரிநிகரின் பக்கங்களில் கே.எஸ். சிவகுமாரன் சினிமா பற்றி எழுதுவதை வாசித்து இக்குறிப்பை எழுதுகிறேன்.

மதிப்புரை (Review) திறனாய்வு அல்லது விமர்சனம் (Critical Study) பத்தி அல்லது ரசனை எழுத்து (Column) என்ற மூன்று வகைக்குள்ளும் சிவகுமாரனின் எழுத்துக்கள் வரவில்லை. (தமிழில் மதிப்புரைகளுக்கு சிறந்த உதாரணம் சிவசேகரத்தின் விமர்சனங்கள் என்ற நூலிலுள்ள பெரும்பாலான கட்டுரைகள். அவற்றை சிவசேகரம் விமர்சனம் என்று கருதுவது வேறு விடயம்)

தன்னுடைய எழுத்துக்கள் பத்தி எழுத்துக்கள் என்று சிவகுமாரன் அடிக்கடி சொல்லி வருகின்ற போதும் பத்தி எழுத்துக்களுக்குரிய தகுதிகள் கூட அவற்றுக்கு இல்லையென்றே படுகிறது. பத்தி எழுத்துக்களுக்குரிய சுவாரசியம், ரசனை அடிப்படை எதுவுமின்றி கிளிப்பிள்ளை பேச்சு ஒப்புவிப்பதுபோல தகவல்களை தந்துகொண்டேயிருப்பதுதான் அவரது பலவீனம். இரண்டாவது அவர் பயன்படுத்துகின்ற மொழியும் மிக சோம்பலான மொழி. இதனால் வருகிற ஆபத்து என்னவென்றால் பாலுமகேந்திராவின் சந்தியாராகத்தையும் ஜி. அரவிந்தனின் வாஸ்துகாரயாவையும் அவரால் வேறுபடுத்திக்காட்ட முடியாமலிருக்கும். அவருக்கு இரண்டும் கலைப்படங்களே. இரண்டுக்கும் விமர்சன அடிப்படை எதுவுமின்றி அவர் பயன்படுத்துகிற சொற்கள் நல்லது, சுவாரசியமானது, அருமையானது என்பவையே.

ஆனால், சந்தியாராகம் ஒரு எளிய சாதாரணப்படம் என்றால் வாஸ்துகாரயா ஒரு திரைக்காவியம்.

ஈழத்தில் சினிமா பற்றி தமிழில் வந்த உயர்ந்த பத்தி எழுத்துக்களுக்கு உதாரணமாக 'அலை'யில் அ.யேசுராசா, ரஞ்சகுமார் முதலியோர் எழுதியவற்றைக் காட்டலாம்.

யமுனா ராஜேந்திரன் இன்றைய தமிழ்ச் சூழலில் ஒரு புரட்சி. அவர் கே.எஸ்.சிவகுமாரன் பற்றி வைத்த விமர்சனங்கள் மிகச்சரியானவையும் முக்கியமானவையும் கூட. ஆனால் அவற்றில் இருந்து கற்றுக்கொள்ளும் நிலையில் கே.எஸ் சிவகுமாரன் இல்லை. அந்த விமர்சனத்தையிட்டு மனமுடைந்தார் போலும். அதுதான் இப்போது Documentary க்கு புனையா மெய் விளக்கப்படம் என்ற மாதிரியான விந்தையான கண்டுபிடிப்புக்களை வழங்கிக்கொண்டிருக்கின்றார். Documentary என்பதற்கு 'விவரணப்படம்' என்ற பதம் தமிழில் ஏற்கெனவே பரவலாக ஏற்கப்பட்டு வழக்கிலுள்ளது. ஏற்கெனவே இருக்கின்ற பதத்தை விட இவரது புதிய சிக்கலான பதம் எந்த அடிப்படையிலும் உயர்ந்ததல்ல, அது இன்னும் மொழியைச் சிக்கலாக்கும். Documentary Film என்ற ஆங்கிலப் பதமே இன்று கேள்விக்குள்ளாகியிருக்கிறது. மணி கௌல் போன்ற திரைக்கலைஞர்கள் தங்களது கதையற்ற Nonfeature படங்களை Documentary Film என்று ஏற்பதில்லை. அவரைப் பொறுத்த வரையில் அதுவும் ஒரு Feature Film போல ஒரு படைப்புத்தான். அதில் அவர் புனைவுகளைச் செய்கிறார். அதேநேரம் பாரம்பரிய விவரணப் படங்களில் வருவதுபோன்ற 3ம்தரப்பு அறிவிப்பு பிரச்சாரங்களையும் தவிர்க்கிறார். இசைக்கும் காட்சியில் புலனுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்.

கே.எஸ்.சிவகுமாரன் தான் சரிநிகரின் பக்கங்களை பொறுப்பற்று எழுதி வீணாக்குகிறார் என்றால் சரிநிகர் ஆசிரியர் குழுமா பொறுப்பற்றிருக்கிறது.

பாரிசிலிருந்து வெளிவந்து ஐரோப்பிய தமிழ்ச்சூழல் முழுவதற்கும் செல்லும் பாரிஸ் ஈழமுரசில் வாரந்தோறும் யமுனா ராஜேந்திரன் தமிழ், உலக சினிமா பற்றிய விமர்சனங்களை எழுதிவருகிறார். இதுவரைகாலமும் ஈழத்திலும் சரி, இந்தியாவிலும் சரி சாமானிய பத்திரிகைச் சூழல் (Mainstream) இவ்விதமான (யமுனா மாதிரி) விமர்சகர்களுக்கு இடங்கொடுத்ததில்லை. ஆனால் பாரிஸ் ஈழமுரசு சில அடிப்படைகளில் முற்போக்கானது. எனினும் அதனுடைய சூழல் சாமானியம் தான் (Mainstream) அப்படியான ஒரு பத்திரிகையே யமுனாவுக்கு களம் கொடுக்கிறது என்றால் சரிநிகர் கட்டாயம் கொடுக்கவேண்டும்.

சரிநிகர் செய்யவேண்டியதெல்லாம் லண்டனிலிருக்கும் அவரோடு தொடர்பு கொண்டு வாரந்தோறும் எழுதுமாறு கேட்டுக் கொள்வதே.

*நட்சத்திரன் செவ்விந்தியன்*
*சிட்னி*

## தீராத விளையாட்டுப் பிள்ளை!

வட - கிழக்கு மாகாண சபையின் சுகாதார அமைச்சின் ஆயுள்வேத மருத்துவப்பிரிவில் ஒரேயொரு ஒப்பந்த லிகிதர் இருக்கின்றார். இவர் கண்ணனின் தெய்வீகப் பெயரைக்கொண்ட விளையாட்டுப் பிள்ளை. இவரால் வைத்தியர்களுக்கோ தீராத தொல்லை!

இவர் வைத்தியர்களிடம் சென்று காசு பறிப்பதில் மிகவும் கில்லாடி. பதிவு செய்துதருகின்றேன். வேலை பெற்றுத் தருகின்றேன். அது செய்து தருகின்றேன். இது செய்து தருகின்றேன். என பாணிபோட்டு சுளையாக காசு பறித்து விடுவார். பதிவு இல்லாத பரம்பரை வைத்தியர்கள் பயந்து கொடுத்து விடுவார்கள். இவர் தன்னை ஒரு பணிப்பாளர் போன்றும் காட்டி நடந்து கொள்வார். அப்பாவிகள் நம்பிவிடுவர். இதற்கு இவருக்கு மேலிடத்து செல்வாக்கு இருப்பதாக கூறுகின்றார்கள்

பதிவு பெறாத வைத்தியர்களிடம் சென்று பதிவு இருக்கா? பதிவு இல்லாது எப்படி வைத்தியம் செய்வாய் என வெருட்டி காசு பறித்து விடுவார்!

இவர் சுகாதார அமைச்சிலும் பல தில்லு முல்லுகள் செய்து வருகின்றாராம். ஒரு சமயம் பெரியதட்டச்சு இயந்திரத்தையே விழுங்கி விட்டாராம். இதனால் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டு செம்பூசையும் கிடைத்ததாம். பின் மேலிடத்து கருணையால் தப்பிவிட்டாராம். அப்படியிருந்தும் அவரின் தொல்லைகள் தீரவில்லையாம். இதற்கு காரணம் மேலிடத்து செல்வாக்குத்தானாம்!

இவரின் சுத்து மாத்து ஊழல் காரணத்தினால் தான் முன்பு, கொழும்பில் கடமையாற்றிய ஆயுள் வேத வைத்திய சபையினால் வீட்டுக்கு அனுப்பப்பட்டவராம். பின் வட - கிழக்கு மாகாண சபையில் யாரையோ பிடித்து நுழைந்து விட்டதாகவும் கதைக்கின்றார்கள். மாகாண சபையினுள் நுழைந்ததும் தமது பழைய ஊழல் விளையாட்டுக்களை விடுகின்றார் இல்லை. இன்னும் கூடுதலாக விளையாடத் தொடங்கிவிட்டாராம். காரணம் இவரைத் தட்டிக்கேட்க ஆள் இல்லையென்பதால் எல்லா இடமும் இவர் புகுந்து விளையாடுவதாக கேள்வி!

அப்பாவி வைத்தியர்களை வெருட்டும் இந்தத் தீராத விளையாட்டுப் பிள்ளையை வட - கிழக்கு மாகாண சபை நிர்வாகம் கவனிக்குமா?

கவனித்து நடவடிக்கை எடுத்து வைத்தியர்களை காப்பாற்றுமா?

*வைத்தியர் கோ. தியாகு*
*சாம்பல்தீவு*

## ஈ.வே.ரா. சொன்னதென்ன?

பெ. முத்துலிங்கத்தின் நூல் எஸ்.வி.ஆரின் கற்பனையை வெகுவாக முடுக்கிவிட்டிருக்கிறது. இலங்கையில் திராவிட இயக்கம் கொடிகட்டிப் பறந்த ஒரு இயக்கமென்றும் அதுவே சாதியத்துக்கு எதிரான போராட்ட முன்னோடி என்றும், நம்பும் அவர் இடதுசாரிகள் சதி செய்து அதை இருட்டடித்து விட்டதாக கோபப்படுகிறார். (சரிநிகர் 125, 126)

சாதியத்தின்கொடுமைக்கு உட்பட்டு போராடி உரிமைகளை வென்ற யாரையாவது ஒரு சொல் கேட்டு விட்டு, அவர் எழுதியிருக்கலாம். வடக்கில் இடதுசாரிய இயக்கத்துள் வந்தவர்களில் கணிசமானோரிடம் பகுத்தறிவு இயக்கப் பாதிப்ட இருந்தது. ஆயினும் தமிழக திராவிட இயக்கப் பாதிப்புக்கு உட்பட்டவர்களில் பலர் தமிழரசுக் கட்சிக்குள்ளும் இழுபட்டனர். மலையகத்தைப் பொறுத்தளவில் தொண்டமான் தலைமைக்கு அஸீஸ் பெரிய சவாலாக இருக்கவில்லை. 60கள் 70களில் வெள்ளையன் தலைமையில் சிறிது முற்போக்கான ஒரு மாற்று இருந்தது. இடதுசாரிச் சிந்தனையை கணிசமான அளவு மலையகத்துள் பரப்பியதால் செங்கொடிச் சங்கம் தொண்டமானுக்கு ஈடுகொடுத்து நின்றாலும், அரசியல் தவறுகளால் 1970களில் அது பலவீனப்பட்டுவிட்டது. இதையொட்டி மலையகத் தமிழரின் தேசிய வாத இயக்கங்களாக மலையக மக்கள் முன்னணி போன்ற அமைப்புகள் உருவாகின. எந்தக் காலகட்டத்திலும் திராவிட முன்னேற்றக் கழகங்கள் (எந்த நேரத்திலும் அரை டசினாவது இருந்த போதும்) மலையக மக்கள் மத்தியில் முக்கியமான சக்தியாக இருக்கவில்லை. இதற்கான ஒரு முக்கியமான புறக்காரணி இருந்தது. மலையகத்தினுள் அரசியல் வேலை செய்வதாயின் தொழிற்சங்கமல்லாத அமைப்புக்களால் இயலாத விதமாகத் தோட்டங்கள் அமைந்திருந்தன. கிரமாங்களினின்று தோட்டங்கள் தொடர்பின்றி துண்டிக்கப்பட்டிருந்தன. வெள்ளையராட்சிக் காலக்கெடுபிடிகள் 1948க்குப் பின்பும் வெகுகாலம் தொடர்ந்தன.

பொதுவாக ஈ.வெ.ராவின் அரசியல் தவறுகள் தெரிகிறவர்களுக்கு அவரது நல்ல பங்களிப்புக்கள் தெரிவதில்லை, அவரது நல்ல அம்சங்கள் தெரிகிறவர்கட்கு அவரது தவறுகள் தெரிவிதில்லை என்றுதான் தோன்றுகிறது. இது ஆரோக்கியமானதல்ல.

ஈ.வே.ரா. ''பார்ப்பனனையும் பாம்பையும் ஒன்றாகக் கண்டால் முதலில் பார்ப்பனனை அடி'' என்று சொன்னதாக 40 வருடங்கட்கு முன்பிருந்தே கேள்விப்பட்டிருக்கிறேன். அது பொய் என்றால், அது எப்போதாவது ஈ.வெ.ராவால் மறுக்கப்பட்டுள்ளதா எனவும், அப்படிப்பட்ட ஒரு கருத்து ஏற்படும்படி ஈ.வெ.ரா. என்ன சொல்லி/ செய்து இருந்தார் என்று எஸ்.வி.ஆர். விளக்கியிருக்கலாம். இம்மாதிரி விஷயங்களில் பெ.மு.வின் கவனமற்ற சொற்களுக்குச் செமத்தியாகச் சாற்றுகிற எஸ்.வி.ஆர்., பெ. மு.வின் பிற தகவல்களையும் ஒப்பிடத்தக்க கவனிப்புடன் மதிப்பிட்டிருக்கலாம்.

*சிவசேகரம்*
*கொழும்பு -03*

## பலம் கவிதைகள்! பலவீனம் சிறுகதைகள்!

சரிநிகரின் கவிதைகள் தொடர்ந்து நன்றாக வருகின்றது. யார் இந்த புதியவர்கள்? இயக்கம் (பவித்திரன்) ஒரு ஆண்மகனுடைய கவிதை (றஷ்மி) கவிதையொன்று (கூடல சங்கமதேவன்) முடிந்து போன ஆண்டு (தேவ அபிரா) உடைப்புகள் (சசி) போன்றன என்னை மிகப் பாதித்த கவிதைகள். மற்றவையும் சராசரிக்கும் மேற்பட்ட கவிதைகள். கவிதைகளைப் பொறுத்து சரிநிகர் பெருமைப்பட நிறையவே உண்டு. எப்போது சரிநிகரின் வெண்பாத் தொகுதி, கவிதைத்தொகுதி வெளியாகிறது? முன்னைய மரணத்துள் வாழ்வோம் தொகுப்புப் போல சரிநிகர் கவிதைகள் பாதிப்பை ஏற்படுத்தவல்லன. ஆனால், சிறுகதைகள் என்னவோ சரிநிகரின் தளத்தில் பலவீனப்பட்டே நிற்கின்றது. பயணம் (அம்பை), நெருப்பு (என். கே. ரகுநாதன்), இருட்டுச் சந்துகளுக்கு அப்பால் (ராஜிசேத் - ஷீப்) நன்றாக வந்திருக்கின்ற கதைகள்தான். ஏனையவை பலவீனப்பட்டுப் போய் உள்ளன. அம்பையின் பயணத்திற்கு பதிலாக காலச்சுவடில் வெளியான அம்பையின் 'மல்லுக்கட்டை' (இதழ் 14) இனியாவது மீளப் பிரசுரிக்கலாம் என நினைக்கிறேன். மிக நல்ல கதை. நெருப்பு (என். கே. ரகுநாதன்) செய்நேர்த்தி மிக்க கதை. எனக்கு எப்போதும் ரகுநாதனில் உயர்ந்த அபிப்பிராயம் உண்டு.

மு.பொவின் கவிதை விமர்சனம் தொடர்பாக சிறீகணேசன் எழுதியது நல்ல கட்டுரை. ஆனால், சிறீகணேசனின் குறையாக நான் காண்பது, தானறிந்த யாவற்றையும் அக்கட்டுரைக்குள் பிரயோகிக்க முயல்வது. எனினும் மு.பொவின் விமர்சனம் நேர்மையானது. சோலைக்கிளியின் பாணி இதுவேயாக இருந்தால், விரைவில் காணாமல் போய்விடுவார். அவரது கவிதைப்பாணி மாற வேண்டும். அவரைப் பின்பற்றுவோரும் அப்பாணியில் இருந்து விலக வேண்டும். விலகலை றஷ்மியில் காண்கிறேன். உண்மையில் சோலைக்கிளியின் வரிகள் அற்புதமானவை. அவை தொடர்ந்து வருகிறபோது அலுப்பையும் தருகிறது.

கே.எஸ். சிவகுமாரன் எவ்வளவோ படங்களைப் பார்க்கிறார். எவ்வளவோ விஷயங்களை அறிகிறார். ஆனால், அது தொடர்பாக ஆழமாக பதிவு செய்கிறார் இல்லையே. கதையைச் சொல்கிறார். சினிமா பற்றிய தகவல்களைத் தருகிறார். அச்சினிமாவின் அனுபவங்களை எங்களிடம் தொற்ற வைக்கிறார் இல்லையே. அச்சினிமாக்களின் விமர்சனம் கூட வேண்டாம். அச்சினிமாக்கள் தந்த அனுபவங்களை எங்களுடன் பகிரலாமே?

*அ. இரவி*
*ஜெர்மன்*

## தமிழில் தேசிய கீதம் கேட்பது எப்போது?

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் தேசிய வர்த்தக சேவைகளின் ஒலிபரப்பு முடிவடைகின்றபோது பேரினவாத மொழியான சிங்கள மொழியிலேயே இலங்கை தேசிய கீதம் ஒலிபரப்பாக்கப்பட்டு வருகிறது யாவரும் அறிந்த உண்மை!

மேற்படி அவல நிலை மாறி தமிழ் சேவையில் தமிழ் மொழியிலேயே தேசிய கீதம் ஒலிக்க உரிய நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொள்ளமாட்டார்களா?

*எம். ஜே. அன்வர் அலி*
*காத்தான்குடி - 05*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Registered as a news paper in Srilanka

# பொ.ஐ.மு.வின் சரியான பாதைக்கான செலவும் மு.கா.வின் மேடைச் செலவும்!

ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் அரசாங்கத்தின் பிரச்சார நடடிக்கைகளுக்காக 42 நாட்களில் 66 லட்சத்து 23 ஆயிரத்து 144 ரூபாவை இலங்கை முதலீட்டுச்சபை செலவிட்டுள்ளது.

'பொ.ஐ.முன்னணி அரசு சரிய ன பாதையொன்றில்' என்ற தலைப்பிலான விளம்பரங்களை பிரசுரிப்பதற்காகவே இப்பணம் செலவழிக்கப்பட்டுள்ளது.

இவ்விளம்பரங்கள், லேக்ஹவுஸ், உபாலி, விஜய ஆகிய நிறுவனங்களின் வார இறுதிப் பத்திரிகைகளிலேயே பிரசுரிக்கப்பட்டுள்ளன.

லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்திற்கு இவ்விளம்பரத்துக்காக 21 லட்சத்து 40 ஆயிரத்து 544 ரூபாவும், உபாலி நிறுவனத்துக்கு 21 லட்சத்து 93 ஆயிரத்து 100 ரூபாவும், விஜய நிறுவனத்திக்கு 20 லட்சத்து 30 ஆயிரம் ரூபாவும் செலுத்தப்பட்டுள்ளது.

விளம்பரத்தை வடிவமைத்த பாஸ்ட் அட்ஸ் தனியார் நிறுவனத்துக்கு சேவைக்கட்டணமாக 2 லட்சத்து 59 ஆயிரத்து 500 ரூபா செலுத்தப்பட்டுள்ளது.

இவ்விளம்பரங்கள் அனைத்தும் கடந்த வருடம் நவம்பர் 17ம்திகதிக்கும், டிசெ. 29ம் திகதிக்கும் இடையில் பிரசுரமானவையே.

இப்பத்திரிகை விளம்பரங்களுக்குப் புறம்பாக வானொலி, தொலைக்காட்சி விளம்பரங்களும், சுவரொட்டிகளும் தயாரிக்கப்பட்டுள்ளன.

பொ.ஐ.மு. ஆட்சிக்குவந்து இரு வருடப் பொருளாதார வளர்ச்சியைப் பிரச்சாரப்படுத்தும் நோக்கிலேயே இவை தயாரிக்கப்பட்டிருந்தன. வருகிற ஓகஸ்ட் 16ம்திகதி அரசாங்கத்தின் 3வது வருடம் நிறைவு பெறுகிறது. மாவிலையோ 2 ரூபாவால் கூடியிருக்கிறது.

பொ.ஐ.முன்னணியின் பிரச்சாரச் செலவை மேலே பார்த்தீர்கள். இங்கே அதன் பங்காளிக் கட்சியான முஸ்லிம் காங்கிரஸ் ஜனவரி 95 மதல் மே 97 வரை பல்வேறு பிரதேசங்களில் தனது கட்சி தொடக்க மேடைகள், தற்காலிக கொட்டகைகள் அமைப்பதற்காக மேற்கொண்ட செலவை தருகிறோம். துறைமுக பொறியியல் மற்றும் சிவில் பிரிவின் செலவுகளில் இது உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கப்பல்துறை மேடை மற்றும் தகரவிடுதி அமைப்பு தொடர்பாக (95/02/ 02 - 07) ரூ. 2,23,330.

ஸ்ரீ.ல.மு.கா. தொடர்பான சுகததாச விளையாட்டரங்க அலங்கரிப்பு (95/03/29 - 95/04/04) ரூ. 54,400.

அட்டாளைச்சேனை மேடை தகரவிடுதி அமைபபு (95/03/29 - 95/10/08, 95/10/17 - 95/10/25) ரூ. 5,73,290.

மோதரை பயிற்சி நிறுவனத்தின் தகரவிடுதி அமைப்பு (95/02/06 - 09) 48,700.

புத்தளம் முஸ்லிம் விழாவுக்கான தகரவிடுதி அமைப்பு (96/03/23) ரூ. 2,43,100.

முஸ்லிம் காங்கிரசின் விழாவுக்கான விடுதி மேடை அமைப்பு (96/09/02 - 96/09/08) ரூ. 8,97,600.

புத்தளம் மேடை விடுதி அமைப்பு (96/09/30 - 96/10/10) ரூ. 37,000.

சம்மாந்துறை தகரவிடுதி அமைப்பு (96/12/17 - 28) ரூ. 2,92,830.

ரம்ழான் விழாவுக்காக மோதரையில் தகரவிடுதி அமைப்பு 97/02/08 - 11) ரூ. 4,54,100.

கல்முனை மேடை அமைப்பு (97/04/02 - 05) ரூ. 72,100

## மலையக..

ஒரு காங்கிரஸ் ஆதரவாளன் இப்படி தொழில் வாய்ப்பு பெறமுடியுமா? ஐ.தே.கட்சிக்காரர்கள் காங்கிரசின் முன் கதிரையை நிரப்ப முடியாது என்ற பேச்சை விட்டு திறமையுள்ளவர்களை சேர்த்து அரவணைக்கும் போது ஒரு புத்துணர்ச்சியையும், ஒரு பசுமைப் புரட்சியையும் காங்கிரஸ் செய்ததாக இருக்கும்.

யாருமே செய்ய முடியாத பொன்னன்வெளி காணிப் பிரச்சினையை அமைச்சர் அஷ்ரஃப் செய்ய முயன்றபோது ஒரு சில முஸ்லிம் இன அதிகாரிகளினால் பெரும்பான்மை இன அரசியல்வாதிகளுக்கு பல தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளதாக இதை முஸ்லிம்களின் சிலரின் துரோகச் செயலாகவே கருதவேண்டியுள்ளது.

எது எப்படியோ அம்பாறை மாவட்ட காங்கிரஸ் ஆதரவாளர்களின் அதிருப்தியையும், குறைகளையும் காங்கிரஸ் உயர்பீடம் கவனிக்கவில்லையெனில் எப்படியேனும் எதிர்காலத்தில் நடக்கவிருக்கும் தேர்தல்களில் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களில் அமைதியான ஆர்ப்பாட்டமில்லாத ஒரு மாறுபட்ட வாக்குத் தீர்ப்பினை மக்கள் வழங்குவார்கள் என்பதில் ஐயமில்லை.

## விரைவில் வருகிறது! கையுயர்த்த தயாராகலாம்!

அரசாங்கத்தின் தீர்வுத்திட்டத்துக்கு மாற்றாக ஐ.தே.க தீர்வுத் திட்டமொன்றைக் கொண்டு வரவுள்ளதாகத் தெரிய வருகிறது.

அதற்காக கே.என்.சொக்ஸி, மஹிந்த சமரசிங்க, ரிரோன் பெர்னான்டோ, நியமனப் பா.உறுப்பினர் ஹென்றி ஜயமஹ, எதிர்க்கட்சித் தலைவரின் பிரத்தியேகச் செயலாளர்களுள் ஒருவரான நவ்பர் ஆகியோரைக் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டு உள்ளதாகத் தெரிய வருகிறது.

இனப்பிரச்சினை நிலவும் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்கும் ஏனைய பிரதேசங்களுக்கு இப்போதுள்ள மாகாணசபை முறையை வலுவான முறையில் அமுல்படுத்துவது என்பதுமே ஐ.தே.கவின் கருத்தாகும்.

அரசாங்கம் தமது தீர்வுத் திட்டத்தைப் பாராளுமன்றத்துக்கு கொண்டு வரும் போது ஐ.தே.க தனது தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்கத் தயாராவதாகவும் தெரிய வருகிறது.

இதேவேளை அரசாங்கம் தனது தீர்வுத் திட்டத்துக்கு மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு ஒன்றை டிசெம்பர் முதல்வாரத்தில் நடாத்தத் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி தேர்தல் ஆணையாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் தெரிகிறது. கூடவே இம்மாதம் 8ம்திகதி பிரச்சார நடவடிக்கைகளை ஆரம்பிக்கும்படி தனது கட்சிக்கும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

மறுபுறத்தில் ஐ.தே.கவோ இக் கருத்துக் கணிப்புக்கு எதிராக மக்களைத் திரட்டவும், மேல் நீதிமன்றத்தில் வழக்குத்தொடுக்கவும் என குழு ஒன்றை நியமித்துள்ளது எனத் தெரிய வருகிறது.

ஆக, இருகட்சிகளும் ஏட்டிக்குப் போட்டியாகத் திட்டங்களைத் தயாரிப்பதில் காட்டும் அக்கறையை அவற்றை நடைமுறைப்படுத்துவதில் காட்டுவதில்லை என்பது வரலாறு. பொ.ஐ.முவில் நம்பிக்கை இழந்த தமிழ்க் கட்சிகள் இனிக் கவலைப்படத் தேவையில்லை. விரைவில் வருகிறது ஐ.தே.கவின் திட்டம். கையுயர்த்தத்தயாராகலாம்!

## தேசிய நலன் அல்ல என்கிறது ல.ச.ச.க!

தொழிற்சங்களுக்குத் தெரிவிக்காது ரெலிகொம் பங்குகள் விற்பனை செய்யப்பட்டமை தொடர்பாகத் தொலைத் தொடர்புகள் தொழிற் சங்கக் கூட்டமைப்பு பேர்க் ஆணைக்குழுவிடம் (PERC) தனது கவலையையும், அதிருப்தியையும் தெரிவிக்கத் தீர்மானித்திருக்கிறது.

முன்பு செய்து கொண்ட உடன்பாட்டின்படி ஊழியர்களது உரிமைகள் தொடபர்ான உறுதிப்பாடு எழுத்து மூலம் வழங்கப்படவில்லை. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கு முகமாக ரெலிகொம் பங்குகளை விலைக்கு வாங்கிய நிப்போன் ரெலிகிறாவ் அன்ட் ரெலிபோன் நிறுவனத்தினால் ஓகஸ்ட் 6ம்திகதி ரான்ஸ் ஏசியா ஹோட்டெலில் தொழிற்சங்கப் பிரதிநிதிக்ளுக்கு அளிக்கப்பட்ட பகல் போசன விருந்து அப் பிரதிநிதிகளால் பகிஷ்கரிக்கப்பட்டுள்ளது.

இப் பகல் போசன விருந்துக்கான அழைப்பிதழ்கள் கூட தெரிவு செய்யப்பட்ட தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஒரு சிலருக்கு மட்டுமே அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

தமது அதிருப்தியை தெரிவிக்க வேண்டிய விதம், ஊழியர்களின் உரிமைகளை வென்றெடுக்க வேண்டிய விதம் ஆகியன பற்றிக் கலந்துரையாடுவதற்காகத் தொழிற்சங்கம் கடந்த ஒகஸ்ட் 8ம்திகதி கலந்துரையாடலொன்றை நடத்தியுள்ளது.

ஸ்ரீலங்கா லங்கா ரெலிகொம் நிறுவனப் பங்குகளில் நூற்றுக்கு 35%ஐ ஜப்பானின் நிப்போன் நிறுவனத்துக்கு விற்பனை செய்யப்பட்டது. தேசிய நலன்களுக்கு ஏற்ற நடவடிக்கை அல்ல என பொ.ஐ.முவின் கூட்டுக் கட்சிகளுள் ஒன்றான லங்கா சம சமாஜக் கட்சியின் பொதுச்செயலாளர் பட்டி வீரக்கோன் எதிர்ப்புத் தெரிவித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்குக் கடிதமெழுதியுள்ளார்.

## வெட்கத்தை..

ரிப்பு என செய்திகள் வந்தன. மீதி 33, 300 ரூபாவுக்கு என்ன நடந்தது என்பது அன்றைய விற்பனைப்பிரதிநிதிக்கே வெளிச்சம்.

பணத்தை தோழர்களுக்கு நூறு வீதம் கொடுத்து யாழ் அனுப்பினோம். அப்பணமும் போதாமல் போய் விட்டது. உடனே எனது தந்தையாரின் கடையில் (முகம்மது அலியார் அன் சன்ஸ்) ரூபா ஆறாயிரம் திருடினேன். ஒருமாதிரியாக அனைத்து இளைஞர்களையும், யாழ் அனுப்பிவிட்டு இந்தியாவுக்கு டெலிபோன் செய்தேன். என்னையும் உடன் இந்தியா வருமாறு தோழர் பத்மநாபா சொன்னார்.

நான் உடன் யாழ் வந்தேன். தோழர்கள் பலரையும் சந்தித்து இந்தியா போகவேண்டும் என்றேன். அனைவரும் என்னை மூன்றாம் நபரைப் பார்ப்பது போல் பார்த்தனர். தோழர் ரமேஷை சந்திக்குமாறு கூறினர். தோழர் ரமேஷ் அவர்களை யாழ் கள்ளியன் காட்டில் சந்தித்தேன். ''உம்மை யார் மட்டக்களப்பில் இருந்து இங்கு இளைஞர்களை அனுப்பச் சொன்னது. யாழ் இளைஞர்களைத்தான் முதலில் பயிற்சிக்கு அனுப்பவேண்டும் என்ற விடயம் உமக்குத் தெரியாதா?'' என் சேர்ட் கொலரை பிடிக்காத குறையாக அவர் என்னை முறைத்தார்.

மூன்று நேரம் எந்தக் குறையுமில்லாது சாப்பாடு, நல்ல கல்வி வளம், அன்பான பதினொரு சகோதர சகோதரிகள், இதுவரையும், இன்று வரை டேய் மகனே நீ செய்தது / செய்வது தவறு, ஏன் செய்கிறாய் என தட்டிக்கேட்காத ஒரிஜினல் உம்மா, வாப்பா. அனைத்தையும்தூக்கி எறிந்து விட்டு எம்முடன் நகமும் சதையுமாக வாழும் கிழக்கு தமிழனுக்காக போராடப்போய், யாழ் மண்ணின் மைந்தரிடம் பேச்சுவாங்கி மூன்றாய் மடிந்து கள்ளியன்காட்டு சந்தியில் நின்றேன். இதையாரிடம் போய்ச் சொல்வது, எந்தச் சுவரில் போய் முட்டுவது என தெரியாது நின்றேன்.

*(இன்ஷா அல்லாஹ் தொடருவேன்)*

## தப்பியோட முயன்ற 2 பொலிஸார் கொலை!

ஓமந்தை பிரதேசத்தின் பங்கர்களில் சேவை புரிந்து வந்த பொலிஸாரில் 150க்கு அதிகமான பொலிஸார் ஆயுதங்களை எடுத்துக் கொண்டு ஓமந் தையை விட்டு வந்த சந்தர்ப்பத்தில் அதிகாரிகளால் பிடிக்கப்பட்டு வவுனியா காமினி மகா வித்தியாலயத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஜயசிக்குறு நடவடிக்கையின் பின்னர் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் பாதுகாப்புக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பொலிசார் ஆயுதங்களை தூங்கிக்கொண்டு ஓமந்தையிலிருந்து வவுனியாவுக்கு கால் நடையாக வந்த வேளையில் இவ்வாறு பிடிபட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

காமினி மகா வித்தியாலயத்தில் தடுத்து வைத்திருந்த சந்தர்ப்பத்தில் தப்பிச் செல்ல முயன்ற இரு பொலிஸ் அதிகாரிகள் சூடுபட்டு இறந்துள்ளனர் எனவும் தெரிய 'ன்றது.

ஓம், தைப் பிரதேசம் நித்தம் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாவதால் அப்பிரதேசத்தில் பொலிசார் மட்டும் பாதுகாப்புக்கு தரித்து நிற்க முடியாதென்றும் முன்னர் தமக்கு இராணுவ, விமான, கடற்படையினரின் உதவி இருந்ததெனவும் தற்போது அவ்வாறான வசதி இல்லாததால் தமக்கு சிக்கலாக இருப்பதாகவும் தாம் எடுத்த முயற்சி யுத்தத்துக்கு எதிரானதல்ல என்றும் தடுத்து வைக்கப்பட்ட பொலிஸார் கூறியுள்ளனர்.

## அதிரடிப்படை பத்தாயிரமாகிறது

பொலிஸ் விஷேட அதிரடிப்படையின் ஆட்பலத்தை பத்தாயிரம் வரை அதிகரிக்கப் பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்துள்ளது. இப்போது அப்படைப் பிரிவில் மூவாயிரம் பேர் மட்டுமே ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

விஷேட அதிரடிப்படைக்குப் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படும்போது வட - கிழக்கில் நடவடிக்கைப் பிரதேசங்களில் கடமையாற்றும் விஷேட திறமைகள் உள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுமெனச் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவர் தெரிவித்தார்.

மாற்று அமைப்பின் மாதாந்தக் கருத்தரங்கு 6

**தலைப்பு**
**தமிழ் சினிமா**

**கலந்துரையாடுவோர்**
*தேவதாசன்*
*எஸ்.ரஞ்சகுமார்*
*சசி கிருஷ்ணமூர்த்தி*

**இடம்**
*இராமகிருஷ்ணமிஷன் கருத்தரங்கு மண்டபம் கொழும்பு-6*

**காலம்**
97 ஓகஸ்ட் 18 திங்கள்
*மாலை 5மணி*

*அனைவரையும் அழைக்கிறோம்.*

வெளியிடுபவர் : ச.பாலகிருஷ்ணன். 18/2. அலோ சாலை. கொழும்பு-03. அச்சுப் பதிவு : நவமக அச்சகம். 334. காலி வீதி. இரத்மலானை. 1997.08.12

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்